**தலைப்பு 282 – நீர்ப்பாசன திணைக்களம்**

**1. நிதிக்கூற்றுக்கள்**

**1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

தலைப்பு 282 – நீர்ப்பாசன திணைக்களத்தின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி செயலாற்றல் கூற்று காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டு கொள்கைகளுக்குரிய தகவல்கள் உள்ளடங்கலாக நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்களை உள்ளடக்கிய 2023 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்திலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 11(1) ஆம் பிரிவின் பிரகாரம் நீர்ப்பாசன திணைக்களத்தின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் உள்ளடங்கிய பொழிப்பறிக்கை 2024 செப்தெம்பர் 05 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 11(2) ஆம் பிரிவின் பிரகாரம் திணைக்களத்தின் வருடாந்த விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2024 செப்தெம்பர் 24 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படவேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தைத் தவிர்த்து, இந்நிதிக் கூற்றுக்கள் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நீர்ப்பாசன திணைக்களத்தின் நிதிநிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச்செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல் என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையானதும் நியாயமானதுமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களை அடிப்படையாகக் கொண்டு எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கெண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.3 நிதிக் கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்புக்கள்**

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 38 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்கவும் உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையிலும் நிதிக்கூற்றுக்களை தயாரித்தல் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிரழ்கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடிய உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 16(1) ஆம் உபபிரிவின் பிரகாரம் திணைக்களத்தின் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடிய வகையில் தமது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் ஏடுகள் மற்றும் அறிக்கைகளைப் பேணுதல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் திணைக்களத்தின் நிதிக்கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமை ஒன்று தயாரித்து பேணப்படுகிறது என்பதனை கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்த வேண்டி இருந்ததுடன் இம் முறைமையின் செயற்றிறன் தொடர்பாக காலத்திற்குக் காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமையை செயற்றிறனாக மேற்கொள்வதற்குத் தேவையான மாற்றங்கள் செய்யப்படுதல் வேண்டும்.

### 1.4 நிதிக் கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து விடுபட்டததாக நியாயமான உறுதிப்படுத்தல் ஒன்றை பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவதே எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தல் ஒன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தல் ஒன்றல்ல மோசடிகள் மற்றும் தவறுகள் தனியாகவோ அல்லது கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்கக் கூடியதாக இருப்பதுடன் அதன் பொருண்மையான தன்மையானது இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளாதார தீர்மானங்கள் தொடர்பாக ஏற்படும் தாக்கத்தின் அடிப்படையில் தங்கியுள்ளது.

இலங்கைக் கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் ஒருபகுதியாக என்னால் தொழில்சார் தீர்ப்புக்கள் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால் மேலும்,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்கலில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ்கூற்று ஆபத்தினை இனங்காணுதல் மற்றும் மதிப்பீடு செய்வதற்காக சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு அமுல்ப்படுத்தப்பட்டன. பிழையானதாக காட்டுவதன் காரணமாக இடம் பெறுகின்ற பொருண்மையான பிறழ்கூற்றுக்ளினால் எழும் தாக்கலினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கத்தினை பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு தவறான ஆவணங்களை தயாரித்தல் வேணடுமென்றே விட்டு விடுதல் பிழையாகக் காட்டுதல் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடி ஒன்று ஏற்படுவதற்கு காரணமாகிறது.
- உள்ளகக் கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பாக அபிப்பிராயம் ஒன்றை தெரிவித்தல் கருத்தில் கொள்ளப்படாதிருந்த போதிலும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடும் பெருட்டு உள்ளகக் கட்டுப்பாடு தொடர்பான விளக்கம் பெற்றுக்கொள்ளப்பட்து.
- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கபட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.
- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கு அடிப்படையான கொடுக்கல் வாங்கல் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கபட்டுள்ளதாகவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் மதிப்பீடு செய்யப்பட்டது.

எனது கணக்காய்வில் இனங்காணபட்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

## 1.5 ஏனைய சட்ட தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

(அ) கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்கள் பின்வரும் கணக்காய்வு அவதானிப்புக்களுக்கு இணங்க முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களுடன் இணங்கியிருக்கவில்லை.

| **கணக்காய்வு அவதானிப்புக்கள்** | **இந்த அறிக்கையின் பந்திக்கான தொடர்பு** |
|---|---|
| நிதியற்ற சொத்துக்களின் ஆரம்ப மீதியினை பதிவுசெய்யும் போது 11 சொத்துக் கணக்குகளின் மொத்தப் பெறுமதி ரூபா 803,781,970 குறைத்தும் 02 சொத்துக் கணக்குகளின் மொத்தப் பெறுமதி ரூபா 15,974,595 அதிகரித்தும் காட்டப்பட்டிருந்தது. | 1.6.1.4 ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள் (அ) |

(ஆ) முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக என்னால் வழங்கப்பட்ட பின்வரும் சிபாரிசுகள் அமுல்ப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

| **முன்னைய ஆண்டிற்கான அறிக்கையின் பந்திக்கான தொடர்பு** | **அமுல்ப்படுத்தப்படாதிருந்த சிபாரிசுகள்** | **இந்த அறிக்கையின் பந்திக்கான தொடர்பு** |
|---|---|---|
| 1.6.1(அ) வருமானப் பெறுவனவுகள் | வருமானங்கள் வைப்புக் கணக்கில் நிறுத்திவைக்கப்பட்டு அங்கீகரித்த குறிக்கோள்களுக்குப் புறம்பான செயற்பாடுகளுக்காக வைப்புக் கணக்குகள் பயன்படுத்தாதிருத்தல் வேண்டும். வருமானங்களை சரியாக அடையாளங்கண்டு கணக்குவைத்தல் வேண்டும். இதற்குரிய கணக்கீட்டு மற்றும் உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையை மீளாய்விற்கு உட்படுத்தி தேவையான திருத்தங்களை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | 1.6.1.1 (அ) வருமானப் பெறுவனவுகள் |
| 1.6.3 வைப்புக் கணக்குகளின் மீதி (அ) | திணைக்களத்தின் பல்வேறு செயற்பாடுகளின் மூலம் சேகரிக்கப்படுகின்ற வருமானங்களுக்காக திறைசேரியின் அங்கீகாரத்தினைப் பெற்று அந்த வருமானங்களைச் சேகரிப்பதற்கு முறையான கட்டுப்பாட்டு முறைமையினை ஸ்தாபிக்க வேண்டியதுடன் அந்த வருமானங்களை சரியாக கணக்கீடு வைப்புச் செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். வைப்புச் செய்யப்பட வேண்டியது அதற்காக | 1.6.1.3 (அ) வைப்புக்கள் |

| | | |
|---|---|---|
| | அங்கீகாரத்தினைப் பெற்றுக்கொள்ளப்பட்டவைகளுக்கு மாத்திரமானதுடன் அதிலுள்ள பணம் அது தொடர்பாக நிர்ணயிக்கப்பட்ட செயற்பாடுகளுக்காக மாத்திரம் செலவு செய்யப்படுதல் வேண்டும். | |
| 1.6.3 வைப்புக் கணக்கு மீதிகள் (ஆ) | திணைக்களத்திற்கு பல்வேறு செயற்பாடுகளுக்காக கிடைக்கின்ற பணம் பொது வைப்புக் கணக்கில் நீண்டகாலமாக நிறுத்திவைப்பதற்கு நடவடிக்கை எடுக்காதிருக்க வேண்டியதுடன் அப்பணத்தை உரிய செயற்பாடுகளுக்காக தாமதமின்றி பயன்படுத்துதல் வேண்டும். | 1.6.1.3 (ஆ) வைப்புக்கள் |

## 1.6 நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கருத்துரைகள்

### 1.6.1 கணக்கீட்டு குறைபாடுகள்

### 1.6.1.1 வருமானப் பெறுவனவுகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| கல்கமுவ, நீர்ப்பாசன பயிற்சி நிறுவனத்தினால் மீளாய்வாண்டில் நடாத்தப்பட்ட 10 பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களுக்காக கிடைத்த ரூபா 6,420,681 தொகை அரசாங்க வருமானத்திற்கு செலவு வைக்கப்படாது தற்காலிகமாக நிறுத்திவைக்கும் வைப்புக் கணக்கில் நிறுத்திவைக்கப்பட்டிருந்தது. | கல்கமுவ நீர்ப்பாசன பயிற்சி நிறுவனத்தினால் மீளாய்வாண்டில் நடாத்தப்பட்ட பயிற்சி நிகழ்சித்திட்டங்களுக்காக கிடைத்த 11 வைப்புக்களின் எஞ்சியுள்ள மீதியான ரூபா 2,416,770 தொகை 2024 யூலை 17 ஆந் திகதி அரசாங்க வருமானத்திற்கு செலவு வைக்கப்பட்டது. | அனைத்து வருமானங்களைும் செலவுகளுக்காக ஈடுபடுத்தப்படாது அரசாங்க வருமானத்திற்கு செலவு வைக்கப்படுதல் வேண்டும். |

### 1.6.1.2 மூலதனச் செலவுகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| (அ) மீளாய்வாண்டில் இயந்திரங்களும் உபகரணங்களும், கட்டிடங்களும் நிர்மாணங்களும் மற்றும் கட்டிட மேம்படுத்தல்களும் உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தியும் என்பதன் கீழ் மொத்தமாக ரூபா 6,684.95 மில்லியன் செலவு செய்யப்பட்டிருந்த போதிலும் நிதியற்ற சொத்துக்களைப் | 2102 மற்றும் 2103 ஆகிய செலவு விடயங்களின் கீழ் கொள்வனவு செய்த அனைத்து பெறுமதிகளும் CIGAS நிகழ்ச்சித்திட்டத்தில் பட்டியல்படுத்தப்படுவதனால் இச்செலவு விடயங்களின் கீழ் மேற்கொள்ளப்படுகின்ற செலவுகள் சொத்துக்களாக கணக்கீடு செய்யாமல் இருப்பதற்கான வாய்ப்புக்கள் இல்லை. எவ்வாறாயினும் | அனைத்து நிதியற்ற சொத்துக்களையும் சரியாக அடையாளங்கண்டு கணக்கீடு செய்தல் வேண்டும். |

பெற்றுக்கொள்ளலாக ரூபா 3,305.19 மில்லியன் மாத்திரம் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. அது மேற்கொள்ளப்பட்ட செலவில் 51 சதவீதமாகும்.

சில சொத்துக்களை நிலையான சொத்துக்களாக அடையாளங்காணமுடியாத பெறுமதி குறைந்த விடயங்கள் CIGAS கணக்கு முறைமையில் சொத்துக்களிலிருந்து நீக்கப்பட்டுள்ளது. கட்டிடங்களை நிர்மாணிப்பதற்காக மேற்கொள்ளப்பட்ட ரூபா 4.08 மில்லியன் தொகை 2024 யூலை மாதம் கணக்கீடு செய்யப்பட்டுள்ளதுடன் மிகுதியான அனைத்து செலவுகளும் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மூலதனமாக்கப்பட்டுள்ளது. 2105 செலவு விடயத்தின் கீழ் இதுவரை மேற்கொள்ளப்பட்ட செலவு மூலதனமாக்கப்பட்டுள்ளதுடன் ஏனைய திணைக்களத்திற்கு வழங்கிய நிதி ஏற்பாடுகளின் செலவுகளும் உரிய செயற்திட்டங்களில் மூலதனமாக்கப்பட்டுள்ளது. இச்செலவு விடயங்களின் கீழ் மேற்கொள்ளப்பட்ட நிலையான சொத்துக்களாக அடையாளங்காணமுடியாத செலவுகள் சந்தர்ப்பங்களின் போது அச்செலவுகள் மாத்திரம் செயற்திட்ட பெறுமதிகளிலிருந்து நீக்கப்பட்டுள்ளன. 2506 செலவு விடயங்களானது rehabilitation செலவு விடயங்களின் கீழ் மேற்கொள்ளப்படுகின்ற மூலதனமாக்கப்பட வேண்டிய சொத்துக்கள் விசேடமாக செயற்திட்டங்களுக்காக மேற்கொள்ளப்படுகின்ற செலவுகளை மூலதனமாக்குதல் 2023 ஆம் ஆண்டிலேயே ஆரம்பிக்கப்படுகின்றது. அதற்கிணங்க இன்றுவரை மேற்கொள்ளப்பட்ட அனைத்து மூலதனமாக்கப்பட வேண்டிய

| | | | |
|---|---|---|---|
| | | பெறுமதிகளை 2024 ஆம் ஆண்டிற்குள் மூலதனமாக்கி முடிவுறுத்துவேன். | |
| (ஆ) | 2021, 2022 மற்றும் 2023 ஆம் ஆண்டுகளில் மேற்கொள்ளப்பட்ட ரூபா 16,207,758,072 செலவுகளும் அவற்றின் கீழ் அபிவிருத்தி செய்யப்பட்ட ரூபா 7,596,399,292 தொகையான ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களும் உறுதியாக அடையாளங்காணப்பட்டு நிதியற்ற சொத்துக்களாக கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | குறிப்பிடப்பட்ட ஆண்டுகளின் போது கொள்வனவு செய்த அனைத்து பெறுமதிகளும் நிலையான சொத்துக்களாக CIGAS கணக்கு முறைமைகளின் மூலம் கணக்கீடு செய்யப்பட்டுள்ளன. இச்செலவு விடயங்களின் கீழ் மேற்கொள்ளப்படுகின்ற செலவுகள் எந்த வகையிலும் சொத்துக்களாக கணக்கீடு செய்யாமல் இருப்பதற்கான இயலுமை இல்லை. எவ்வாறாயினும் இச்செலவு விடயங்களின் கீழ் பெற்றுக்கொள்ளப்படுகின்ற சில சொத்துக்களாக அடையாளங்காண முடியாத பெறுமதி குறைந்த விடயங்கள் CIGAS கணக்கு முறைமையில் சொத்துக்களிலிருந்து நீக்கப்பட்டுள்ளன. விசேடமாக செயற்திட்டங்களுக்காக மேற்கொள்ளப்படுகின்ற செலவுகளை மூலதனமாக்குதல் 2023 ஆம் ஆண்டிலேயே ஆரம்பிக்கப்பட்டுள்ளன. அதற்கிணங்க இன்றுவரை மேற்கொள்ளப்பட்ட அனைத்து மூலதனமாக்கப்பட வேண்டிய பெறுமதிகளையும் 2024 ஆம் ஆண்டில் மூலதமாக்கி முடிவுறுத்துவேன். | அனைத்து நிதியற்ற சொத்துக்களையும் சரியாக அடையாளங்கண்டு கணக்கீடு செய்தல் வேண்டும். |
| (இ) | நிதியற்ற சொத்துக்கள் கூற்றில் சொத்துக்கள் குறியீட்டு இலக்கம் 6141403 இன் கீழ் நீர்த்தேக்கங்களின் பெறுமதிக்கு ரூபா 280,751,890 தொகையினை மாற்றல்களாக சேர்த்துக்கொள்ளப்பட்டிருந்து ம் அச்செலவுகளுக்குரிய ஒவ்வொரு நீர்த்தேக்கம் தொடர்பான விபரமான | அரசாங்க கணக்குகள் திணைக்களத்தினால் சமர்ப்பிக்கப்படுகின்ற நிதியற்ற சொத்துக்கள் கூற்றில் குறியீட்டு இலக்கம் 6141403 இன் கீழ் நீர்த்தேக்கங்களின் பெறுமதி ரூபா 280,751,890 மாற்றல்களாகக் காட்டப்பட்டிருந்தும் சரியான மாற்றுதல் பெறுமதி ரூபா | நீர்த்தேங்க்கங்களின் பெறுமதி தொடர்பான விபரமான தகவல்களை உள்ளடக்கி சரியான மாற்றுதல்கள் செய்யப்படுதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | தகவல்கள் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | 18,638,660 ஆகும். ஆண்டின் போது கொள்வனவு செய்தல்களில் ரூபா 262,113,229 பெறுமதியானது திறைசேரி அச்சுப் பிரதிகளில் பிழையாக மாற்றல்களாக பதிவுசெய்யப்பட்டிருந்தது. | |
| (ஈ) | மீளாய்வாண்டில் ஏனைய செலவுத் தலைப்புக்களிலிருந்து பல்வேறு நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் செயற்திட்டங்களுக்காக நீர்ப்பாசனத் திணைக்களத்தினால் செலவு செய்யப்பட்ட ரூபா 516,729,324 தொகையான மூலதனச் செலவுகளை உறுதியாக அடையாளங்கண்டு நிதியற்ற சொத்துக்களாக கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | ஏனைய செலவு விடயங்களின் கீழ் சொத்துக்களைப் பெற்றுக்கொள்ளுதல்கள் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு திணைக்களத்திற்கு ஒப்படைக்கப்பட்டிருக்கவில்லை. நிதி ஏற்பாட்டினை வழங்கிய அந்த நிறுவனங்கள் இச்சொத்துக்களை அந்த நிறுவனங்களின் சொத்துக்களாக கணக்கீடு செய்யப்படுமாயின் அரசாங்கத்தின் சொத்துக்கள் இரட்டிப்பாக கணக்கீடு செய்யப்படுவதனால் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு திணைக்களத்தின் சொத்துக்களாக அடையாளங்காணப்பட வேண்டும் என்று விளக்கமாக சமர்ப்பிக்குமாறு உரிய அமைச்சுக்களுக்கு கடிதம் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. | திணைக்களத்தினால் ஏனைய செலவுத் தலைப்புக்களின் நிதி ஏற்பாடுகளிலிருந்து மேற்கொள்ளப்படுகின்ற செலவுகளை உறுதியாக அடையாளங்கண்டு கணக்கீடு செய்வற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (உ) | மீளாய்வாண்டில் நீர்ப்பாசனத் திணைக்களத்தினால் ஏனைய கணக்கீட்டு உத்தியோகத்தர்களுக்கு வழங்கிய நிதி ஏற்பாட்டிலிருந்து அந்த நிறுவனங்களினால் மேற்கொள்ளப்பட்ட ரூபா 20,878,750 மூலதனச் செலவுகள் உறுதியாக அடையாளங்காணப்பட்டு நிதியற்ற சொத்துக்களின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | 2023 ஆம் ஆண்டில் திணைக்களம் ஏனைய திணைக்களங்களுக்கு வழங்கிய நிதி ஏற்பாட்டின் கீழ் அந்த நிறுவனங்களினால் மேற்கொள்ளப்பட்ட ரூபா 20,878,750 செலவுகள் 2024 ஆம் ஆண்டின் யூலை மாதத்தில் கணக்கீடு செய்யப்பட்டது. | அனைத்து நிதியற்ற சொத்துக்களையும் அடையாளங்கண்டு நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப்படுதல் வேண்டும். |

**1.6.1.3 ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | 2023 நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் நிதியற்ற சொத்துக்களின் ஆரம்ப மீதியின் மொத்தம் ரூபா 101,004,436,384 ஆக கணக்கீடு செய்யப்பட்டிருந்தும் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிதியற்ற சொத்துக்களின் இறுதி மீதி ரூபா 101,792,230,779 ஆகும். அதற்கிணங்க மீளாய்வாண்டின் சனவரி 01 ஆந் திகதியில் உள்ளவாறான ஆரம்ப மீதிகளின் மொத்த தொகை ரூபா 787,794,395 ஆல் குறைத்துக் காட்டப்பட்டிருந்தது. | திணைக்களத்தின் மூலம் தயாரிக்கப்படுகின்ற நிலையான சொத்து அறிக்கைகளுக்கிடையே ஒவ்வொரு ஆண்டிலும் இணக்கமின்மைகள் காணப்படுகின்றன. அரசாங்க கணக்குகள் திணைக்களத்தின் CIGAS நிகழ்ச்சித்திட்டத்தில் காணப்படுகின்ற சிக்கல்களின் காரணமாக இந்த வித்தியாசம் உருவாகியுள்ளது. காட்டப்பட்டுள்ள இந்த அனைத்து செலவுகளும் ஆண்டின் போது ஆரம்ப மீதி செம்மையாக்கிய பெறுமதிகளாகும். அந்த ஆரம்ப மீதிகளும் செம்மையாக்கல்களும் மாற்றமடைந்திருந்த போதிலும் சொத்துக்களின் இறுதிப் பெறுமதியானது திணைக்களத்தின் ஏடுகள் மற்றும் திறைசேரி மீதிகளுடன் சமப்படுகின்றன. | திறைசேரி மீதிகளுடன் முன்னைய ஆண்டின் இறுதி மற்றும் ஆரம்ப மீதிகளானது ஒப்பீட்டு ரீதியாக பரீட்சிக்கப்படுதல் வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிதியற்ற சொத்துக்கள் கூற்றின் குறியீட்டு இலக்கம் 61111-61113 இன் கீழ் 583 கட்டடங்களின் பெறுமதி ரூபா 2,469,052,703 ஆக கணக்கீடு செய்யப்பட்டிருந்தும் சொத்துக்கள் முகாமைத்துவ பிரிவின் மூலம் தயாரிக்கப்பட்ட அறிக்கையின் பிரகாரம் 2562 கட்டிடங்கள் திணைக்களத்திடம் உள்ளன. அதற்கிணங்க 1979 கட்டிடங்களின் பெறுமதி மதிப்பீடு செய்யப்பட்டு நிதியற்ற சொத்துக்களாக கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | 2019 ஆம் ஆண்டிலிருந்து இன்றுவரை மதிப்பீட்டுத் திணைக்களத்தின் மூலம் மதிப்பீடு செய்யப்பட்ட 1500 அளவிலான கட்டிடங்களின் ஆவணங்கள் வலய அலுவலகம் மற்றும் தலைமை அலுவலகங்களின் மூலம் CIGAS கணக்கு முறைமைக்கு அறிக்கையிடப்பட்டிருந்தும் கணக்கு வைக்கும் போது ஒவ்வொரு கோவைகளில் குறிப்பிடப்பட்ட கட்டிடங்களின் பெறுமதிகளின் மொத்தம் (Bulk Values) கணக்கு வைக்கப்பட்டுள்ளது என தோன்றுகின்றது. இது தொடர்பாக தனித்தனியாகப் பரீட்சித்து சரியாக கணக்குவைக்கப்பட்டுள்ள | அனைத்து கட்டிடங்களும் மதிப்படு செய்யப்பட்டு கணக்கீடு செய்யப்படுதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | கட்டிடங்களின் அளவினை எதிர்காலத்தில் அறிக்கையிடுவேன். | |
| (இ) | அணை பாதுகாப்பு செயற்திட்டத்தின் மூலம் நீரியல் மற்றும் இடர் முகாமைத்துவ பிரிவிற்கு ஒப்படைக்கப்பட்டிருந்த 106 தானியங்கி நீர் மீற்றர் மற்றும் மழை மீற்றர்களின் பெறுமதி திணைக்களத்தின் நிதிக்கூற்றுக்களில் நிதியற்ற சொத்துக்களின் கீழ் காட்டப்பட்டிருக்கவில்லை. | அணை பாதுகாப்பு செயற்திட்டத்தின் மூலம் நீரியல் மற்றும் இடர் முகாமைத்துவ பிரிவிற்கு 106 தானியங்கி நீர் மீற்றர்கள் மற்றும் மழை மீற்றர்களை ஒப்படைக்கும் போது பொருட்களைப் பொறுப்பேற்றல் மற்றும் அதன் பெறுமதி தொடர்பான எந்த ஆவணமும் எங்கள் பிரிவிற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்காததனால் 2023 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு நிதியற்ற சொத்துக்கின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. செயற்திட்டத்தின் மூலம் திணைக்களத்திற்கு சொத்துக்களை வழங்கும் போது முறையான நடைமுறைகளை பின்பற்றுவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு தெரிவித்து நீர்ப்பாசன அமைச்சிற்கு கடிதம் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. | பல்வேறு செயற்திட்டங்களின் கீழ் கிடைக்கின்ற சொத்துக்களை சரியாக பொறுப்பேற்று கணக்கு வைத்தல் வேண்டும். |

**1.6.1.4 பதிவேடுகள் மற்றும் புத்தகங்கள் பேணப்படாமை.**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | நீர்பாசன பணிப்பாளர் நாயகத்தின் 11/1986 ஆம் இலக்க சுற்றறிக்கையின் 05 ஆம் பந்தியில் காட்டப்படுகின்றவாறு நீர்ப்பாசனம் 6 படிவத்திற்கு இணங்க வெளிக்கள பொருள் குறிப்பு புத்தகங்கள் பேணப்பட்டிருக்கவில்லை. | சுற்றறிக்கை அறிவுறுத்தல்களுக்கு இணங்க வெளிக்கள இருப்பு புத்தகத்தினை பேணுவது சம்பந்தமாக மேற்பார்வை செய்வதற்காக வலய மற்றும் பிராந்திய அலுவலகங்கள் IA/01/COM/03/2023 ஆம் இலக்க 2023 மே 04 ஆந் திகதிய கடிதத்தின் மூலம் தெரியப்படுத்தப்பட்டது. | சுற்றறிக்கை அறிவுறுத்தல்களின் பிரகாரம் வெளிக்கள இருப்பு புத்தகங்கள் பேணப்படுதல் வேண்டும். |
| (ஆ) | நி.பி 1647(உ) இன் பிரகாரம் வாகனங்களை பட்டியல்படுத்தும் ஒரு பதிவேடு முறைப்படியாக | திணைக்களத்தின் வாகனங்களது பதிவுசெய்தல் சான்றிதழ் தொடர்பான விபரம் | திணைக்களத்தின் அனைத்து வானகங்கள் சம்பந்தமாகவும் |

| | | |
|---|---|---|
| பேணப்பட்டிருக்கவில்லை. 2004 வாகனங்களுக்காக பதிவுசெய்யும் சான்றிதழ்களும் உரிய வருமான அனுமதிப்பத்திரங்களும் நீர்ப்பாசனத் திணைக்களத்தின் போக்குவரத்துப் பிரிவிற்குப் பொறுப்பான உத்தியோகத்தரினால் பேணப்பட்டிருக்கவில்லை. மேலும் அந்த வாகனங்கள் தற்பொழுது பயன்படுத்தப்படுகின்ற இடம் மற்றும் பொறுப்பு ஒப்படைக்கப்பட்டுள்ள உத்தியோகத்தர் சம்பந்தமான விபரம் நாளதுவரையாக பேணப்பட்டிருக்கவில்லை. | பட்டியல்படுத்தப்பட்டுள்ளதுடன் உத்தியோகத்தர்களிடமிருந்து உத்தியோகத்தர்களுக்கு ஒப்படைக்கும் போது முறைப்படியாக ஒப்படைக்கும் நடைமுறை தற்பொழுது தயாரிக்கப்பட்டுள்ளது. இந்த நடவடிக்கையானது தலைமை அலுவலகத்தின் இயந்திர பொறியியலாளர் மற்றும் பிரதம இயந்திர பொறியியலாளரினால் மேற்பார்வை செய்யப்படுகின்றது.<br><br>இது தொடர்பாக தனித்தனியாக 03 தரவு முறைமைகள் பேணப்படுவதுடன் இந்த அனைத்து செயற்பாடுகயையும் தரவுகளையும் உள்ளடக்கிய ஒரு தரவு முறைமையுடனான ஒரு மென்பொருளினை உருவாக்கும் நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளது. | வாகனங்களை பட்டியல்படுத்தும் ஒரு பதிவேடு பேணப்படுதல் வேண்டும். |

### 1.6.1.5 கணக்காய்விற்கான சான்றுகள் இல்லாமை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| திணைக்களத்தினால் மீளாய்வாண்டில் 2105 மற்றும் 2506 ஆம் இலக்க 14 மூலதன செலவு விடயங்களுக்காக ரூபா 8,785,000,000 நிதி ஏற்பாட்டில் ரூபா 6,602,584,532 செலவு செய்யப்பட்டிருந்ததுடன் அச்செயற்திட்ட மதிப்பீட்டின் கீழ் காட்டப்படுகின்ற ஒவ்வொரு வேலை விடயத்திற்குமாக செலவு செய்யப்பட்ட பெறுமதி தொடர்பான விபரமான தகவல்களை உள்ளடக்கிய அறிக்கை கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை. | எதிர்காலத்தில் சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | ஒரு செயற்திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்படுகின்ற செலவுகளை தனித்தனியாக அடையாளங்காணக் கூடிய வகையில் கணக்கீடு செய்யப்படுதல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 வருமான முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
| --- | --- | --- |
| தெதுருஓயா பலநோக்கு அபிவிருத்தி செயற்திட்டத்தின் மின்வலு நிலையத்தினை செயற்படுத்துவதற்காக நீர்பாசன பணிப்பாளர் நாயகத்தினால் ஒரு தனியார் கம்பனியுடன் 2017 ஒக்தோபர் 13 ஆந் திகதி ஏற்படுத்திக்கொள்ளப்பட்ட புரிந்துணர்வு உடன்படிக்கையின் பிரகாரம் உரிய கம்பனியால் 2021 சனவரி மாதத்திலிருந்து 2022 திசெம்பர் மாதம் வரை உற்பத்தி செய்த 11,519.679 (Kwh) மின்சார அலகுகளை இலங்கை மின்சார சபைக்கு விற்பனை செய்ததன் மூலம் உழைத்த ரூபா 200,934,154 வருமானத்தில் உடன்படிக்கையின் பிரகாரம் 15 சதவீதம் அல்லது ரூபா 30,140,123 தொகை நீர்ப்பாசனத் திணைக்களத்திற்குச் செலுத்த வேண்டியிருந்தது. அதில் ரூபா 6,085,051 தொகை அதாவது 20 சதவீதம் மாத்திரம் அறவீடு செய்யப்பட்டிருந்த போதிலும் மிகுதி ரூபா 24,055,072 தொகையை முறைப்படியாக அறவீடு செய்வதற்கு இன்றுவரை நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. மேலும் நீர்ப்பாசனத் திணைக்களத்திற்கு கிடைக்க வேண்டிய வருமானத்தை அடையாளங்காண்பதற்கு உரிய பதிவேடுகளும் பேணப்பட்டிருக்கவில்லை. | ரூபா 24,055,072 தொகையை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுப்பது தொடர்பாக உத்தியோகத்தர்களுக்கு தெரியப்படுத்தப்பட்டுள்ளது. | வருமானத்தை சேகரிப்பது சம்பந்தமாக விசேட கவனம் செலுத்தி அவற்றினை சேகரிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 2.2 செலவு முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
| --- | --- | --- |
| (அ) மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு 02 மூலதனச் செலவு விடயங்களுக்காக ஒதுக்கீடு செய்யப்பட்ட ரூபா 222,000,000 தொகையான தேறிய நிதி ஏற்பாடு பயன்படுத்தப்படாது முழுமையாகச் சேகரிக்கப்பட்டிருந்தது. | அபிவிருத்தி செயற்திட்டங்களை மீண்டும் தந்திரோபாயப்படுத்துதல் மற்றும் துரிதப்படுத்துதல் (RAMP) குழு தீர்மானம் தொடர்பாக பிரதம மந்திரியின் செயலாளரின் PMO/DEV-11/01/01/MTG/SEP-02 ஆம் இலக்க மற்றும் 2022 ஒக்தோபர் 07 ஆந் திகதிய | பாதீட்டினைத் தயாரிக்கும் போது தேவைப்பாட்டினை அடைாளங்கண்டு முடியுமான அளவிற்கு முறைப்பாடுகளை குறைக்கும் வகையில் செலவுகளை மதிப்பீடு செய்து சமர்ப்பிப்பதற்கு |

| | | | |
|---|---|---|---|
| | | கடிதத்திற்கு இணங்க செயற்திட்டத்திற்காக மேற்கொள்ளப்பட்ட செலவுகள் வெளிநாட்டு கடனின் (AFD) கீழ் தீர்த்துவைப்பதற்கு இணங்கி கொண்டமை சம்பந்தமாக தீர்மானம் எடுக்க வேண்டியுள்ளது. எனினும் இதுவரை தீர்மானம் எடுக்காமையின் காரணமாக நிதி ஏற்பாட்டினை பயன்படுத்த முடியாதுள்ளது. | நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | 20 செலவு விடயங்களுக்காக ஒதுக்கீடு செய்யப்பட்ட மொத்தமாக ரூபா 5,824,675,000 தொகையான தேறிய நிதி ஏற்பாட்டில் மொத்தமாக ரூபா 2,358,346,016 தொகை அல்லது 40 சதவீதம் சேமிக்கப்பட்டிருந்தது. | மொரான வெல்லஸ்ஸ, குடாவெலச்சிய, எல்லே ஆகிய குளங்கள் மற்றும் யான் ஓயா என்ற செயற்திட்டத்திற்காக காணிகளை சுவீகரிக்கும் இழப்பீட்டுப் பணத்தில் ஒரு பகுதியை மாத்திரம் அந்த ஆண்டின் போது பூர்த்திசெய்வதற்கு முடியுமாக இருந்தது. இழப்பீட்டினைச் செலுத்தும் செயற்பாடு சில நிறுவனங்களின் தலையீட்டின அடிப்படையில் மேற்கொள்ளும் ஒரு செயற்பாடு என்பதனால் அனைத்து சந்தர்ப்பங்களிலும் திட்டமிட்டவாறு எதிர்பார்த்த செயல்முன்னேற்றத்தினை பெற்றுக்கொள்ள முடியாதிருந்தது. | பாதீட்டினை தயாரிக்கும் போது தேவைப்பாட்டினை அடையாளங்கண்டு செலவு மதிப்பீடு சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும். |

**2.3 பொறுப்புக்கள் மற்றும் கடப்பாடுகளை மேற்கொள்ளல்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 16 செலவு விடயங்கள் தொடர்பாக 279 சந்தர்ப்பங்களின் போது ரூபா 70,553,984 தொயையான பொறுப்புக்கள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. | ஆண்டின் இறுதியில் பொறுப்புக்கள் மற்றும் கடப்பாடுகளை மேற்கொள்ளும் போது நிதி ஏற்பாடு முறைப்படியாக உள்ளது என உறுதிப்படுத்திக்கொண்டு கடப்பாடுகளை மேற்கொள்ளுமாறு தெரிவித்து 2023/12/13 ஆந் திகதிய F/Cash book | எந்த பொறுப்பும் அடுத்துவரும் ஆண்டில் தீர்த்துவைக்கும் நோக்கத்துடன் முன்கொர்ண்டு செல்வதற்கு நடவடிக்கை எடுக்காதிருத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | closing/2022 ஆம் இலக்க கடிதத்தின் மூலம் 02/2020 ஆம் இலக்க நிதி சுற்றறிக்கைக்கு இணங்க நடவடிக்கை எடுக்குமாறு எழுத்துமூலம் அறிவித்தல் வழங்கப்பட்டுள்ளது. | |
| (ஆ) | யான் ஓயா நீர்த்தேக்கத்தினை நிர்மாணிக்கும் செயற்திட்டம் தொடர்பாக 157,234 கியூப் மண் மற்றும் 81,905 கியூப் மணல் மற்றும் 201,784 கியூப் கருங்கற்களை தோண்டி எடுப்பதற்காக அறவிட வேண்டிய அரசிறையாக ரூபா 24 மில்லியன் நிலுவை காணப்பட்டது என புவிச்சரிதவியல் ஆய்வு மற்றும் சுரங்கங்கள் பணியகத்தினால் தெரியப்படுத்தப்பட்டிருந்தது. உரிய நிலுவைப் பணத்தை நிதிக்கூற்றுக்களில் ஒரு பொறுப்பாக அல்லது கடப்பாடாக காட்டப்பட்டிருக்கவில்லை. | யான் ஓயா செயற்திட்டத்தினை நீர்ப்பாசனத் திணைக்களத்திற்கு ஒப்படைக்கும் போது ஒப்பந்தக்காரரினால் புவிச்சரிதவியல் ஆய்வு மற்றும் சுரங்கங்கள் பணியகத்திற்கு ரூபா 30,681,926 தொகை செலுத்தப்பட்டது. அந்த ஆவணங்களுக்கு இணங்க ரூபா 2,836,435 நிலுவைப் பணம் புவிச்சரிதவியல் ஆய்வு மற்றும் சுரங்கங்கள் பணியகத்திற்கு செலுத்த வேண்டி இருந்தது. செலுத்த வேண்டியுள்ள பணமாக ரூபா 38,044,762 தொகை புவிச்சரிதவியல் ஆய்வு மற்றும் சுரங்கங்கள் பணியகத்தின் கடிதத்தின் பிரகாரம் குறிப்பிடப்பட்டுள்ளது. ஒப்பந்தக்காரர் இப்பணத்தை செலுத்தியிருந்தும் அப்பணம் அவருக்கு மீண்டும் மீளளிப்புச் செய்யப்படவில்லை. அதற்கிணங்க இந்த அரசிறையை ஒரு பொறுப்பாக குறிப்பிடுவது சரியானதாகும். | பொறுப்புக்கள் மற்றும் கடப்பாடுகளை தனித்தனியாக அடையாளங்கண்டு ஆவணப்படுத்தி கணக்குகளின் மூலம் சமர்ப்பித்தல் வேண்டும். |

**2.4 கணக்கீட்டு உத்தியோகத்தரினால் மேற்கொள்ளப்பட வேண்டிய சான்றுபடுத்தல்கள்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 38 ஆம் பிரிவிலுள்ள ஒழுங்குவிதிகளின் பிரகாரம் கணக்கீட்டு உத்திரோயகத்தரினால் திணைக்களத்தின் நிதிக்கட்டுப்பாட்டிற்காக | மேற்கூறிய விடயம் சம்பந்தமாக 2022 திசெம்பர் 19 ஆந் திகதி நடைபெற்ற திணைக்கள கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுக் கூட்டத்தின் போது கலந்துரையாடப்பட்டது. | 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 38 ஆம் பிரிவிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் |

| | | |
|---|---|---|
| ஆக்கபூர்வமான உள்ளக கட்டுப்பாட்டு முறைமை தயாரித்து பேணப்படுகின்றது என்பதற்கு பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தர் சான்றுபடுத்த வேண்டியதுடன் அந்த முறைமையின் ஆக்கபூர்வத் தன்மை தொடர்பாக காலத்துக்கு காலம் மீளாய்வு செய்து அதற்கிணங்க முறைமையினை ஆக்கபூர்வமானதாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்பட வேண்டும் எனவும் அந்த மீளாய்வினை எழுத்துமூலம் மேற்கொண்டு அதன் பிரதியை கணக்காய்வாள்ர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்க வேண்டியிருந்தும் அவ்வாறான மீளாய்வு மேற்கொள்ளப்பட்டது என்பதற்கான வெளிப்படுத்தல் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை. | அதற்கிணங்க பிரிவுத் தலைவரின் தலைமைத்துவத்தில் வாராந்தம் நடாத்தப்படுகின்ற கூட்டத்தின் அறிக்கையினை அடிப்படையாகக் கொண்டு உரிய சான்றுபடுத்தலினை மேற்கொள்ள வேண்டும் என தீர்மானிக்கப்பட்டது. 2023 பெப்ரவரி 15 ஆந் திகதிய IA/01/COM/04/2022 ஆம் இலக்கத்தின் கீழ் உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையை வலுப்படுத்துதல் என்ற தலைப்பில் ஒரு கடிதம் வழங்கப்பட்டுள்ளது. | நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**2.5 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மைகள்**

| அவதானிப்புக்கள் | | | சபையின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|---|
| | **சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முதலியவற்றுடனான தொடர்பு** | **இணக்கமின்மைகள்** | | |
| (அ) | 1983 இன் 23 ஆம் இலக்க நீர்ப்பாசன (திருத்திய) அதிகாரச்சட்டத்தின் 11 ஆம் பிரிவு | நீர்ப்பாசன தண்டப்பண நிதியம் பேணப்பட்டிருக்கவில்லை. | திருத்திய நீர்ப்பாசன கட்டளைச் சட்டத்தின் 110(4) ஆம் பிரிவின் பிரகாரம் நீர்ப்பாசன விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரின் செயலாளரினால் நிதியம் தொடர்பாக பொறுப்பு வகித்தல் வேண்டும். எனவே பொருத்தமான வகையில் செயலாளரினால் நடவடிக்கை எடுக்க வேண்டியுள்ளது. இது சம்பந்தமாக செயலாளருக்கு தெரியப்படுத்தப்பட்டது. | நீர்ப்பாசன திருத்திய அதிகாரச் சட்டத்தின் பிரகாரம் நீர்ப்பாசன தண்டப் பண நிதியம் பேணப்படுதல் வேண்டும். |

**(ஆ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக் கோவை**

| | | | | |
|---|---|---|---|---|
| (i) | XXIV ஆம் அத்தியாயத்தின் 4.4 மற்றும் 4.5 ஆம் பிரிவுகள் | மரணமடைந்த 20 ஊழியர்களிடமிருந்து அறவிட வேண்டிய ரூபா 2,494,518 தொகை, ஓய்வு பெற்றுச் சென்ற 122 ஊழியர்களிடமிருந்து அறவிட வேண்டிய ரூபா 13,079,770 தொகை, வேவையிலிருந்து தற்காலிகமாக நீக்கப்பட்ட சேவையைக் கைவிட்டுச் சென்ற மற்றும் சேவையிலிருந்து நீக்கப்பட்ட 35 ஊழியர்களிடமிருந்து அறவிட வேண்டிய ரூபா 2,864,197 தொகையை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. இந்த மீதியினுள் மூன்று ஆண்டுகளைவிட பழைய ரூபா 3,280,334 தொகையான 32 கடன் மீதிகளும் ஐந்து ஆண்டுகளுக்கு மேற்பட்ட ரூபா 2,047,790 தொகையான 33 கடன் மீதிகளும் உள்ளன. | 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அரசாங்க உத்தியோகத்தர்களின் முற்பணங்கள் பீ கணக்கின் கீழ் அரசாங்கத்தினால் அறவிட வேண்டியுள்ள நிலுவையாக இருந்த கடன் மீதிகளின் 2024 மே 1 இல் உள்ளவாறான செயல் முன்னேற்றமாக வைப்புக் கணக்கின் மீதி சமர்ப்பிக்கப்பட்டுள்ளது . | கடனை மீளச் செலுத்தாத உத்தியோகத்தர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை பின்பற்றப்படுதல் வேண்டும். |
| (ii) | XIX ஆம் அத்தியாயத்தின் 5.2.1 மற்றும் 5.3.1 ஆம் பிரிவுகள் | திணைக்களத்தின் 14 வலயங்களில் அமைந்துள்ள ள உத்தியோகபூர்வ இல்லங்களில் குடியிருக்கும் உத்தியோகத்தர்கள் மற்றும் ஊழியர்களிடமிருந்து தாபன விதிக் கோவையின் பிரகாரம் உத்தியோகபூர்வ இல்ல வாடகை அறவீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | தாபனவிதிக் கோவையின் பிரகாரம் உத்தியோகபூர்வ இல்ல வாடகையினை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்குமாறு நீர்ப்பாசன பணிப்பாளர்களுக்கு தெரியப்படுத்தப்பட்டுள்ளது. | உத்தியோகபூர்வ இல்லங்களில் குடியிருக்கும் உத்தியோகத்தர்களிடமிருந்து உத்தியோகபூர்வ இல்ல வாடகை அறவீடு செய்யப்படுதல் வேண்டும். |

**(இ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணக் கோவை**

| | | | | |
|---|---|---|---|---|
| (i) | நி.பி 104-109 | 1984 இலிருந்து 2012 வரையான இடைக்காலத்தில் இடம்பெற்றிருந்த ரூபா 18,292,188 தொகையான 25 நட்டங்களும் சேதங்களும் சம்பந்தமாக நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இக்காலத்தில் இடம்பெற்று இதுவரை முடிவடைந்திருக்காத நட்ட சம்பவங்களின் எண்ணிக்கை 09 ஆகும். அவை சம்பந்தமாக நிதிப்பிரமாணங்களுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | நிதிப்பிரமாணம் 104 இலிருந்து 109 வரையான அறிவுறுத்தல்களின் பிரகாரம் நட்டங்கள் மற்றும் சேதங்கள் சம்பந்தமாக நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ii) | நி.பி 136 - 139 | பிராந்திய நீர்ப்பாசன பொறியியலாளர் அலுவலகத்தின் மூலம் வாடகை அடிப்படையில் இயந்திரங்களை பெற்றுக்கொள்ளும் போது தொழிலாளர்களை வழங்கும் போது மற்றும் விவசாய அமைப்புக்களுக்கு கொடுப்பனவு செய்யும் போது அந்த நிறுவனங்களிடமிருந்து இன்வொயிஸ்களை பெற்றுக்கொள்ளாது பொறியியல் உதவியாளர்களின் அளவீட்டு புத்தககத்தில் காணப்படுகின்ற அளவீட்டினை அடிப்படையாகக் கொண்டு கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. | இது சம்பந்தமாக 2023 பெப்ரவரி 15 ஆந் திகதிய கடிதத்தின் மூலம் கணக்கு நடவடிக்கைகள் தொடர்பான அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளன. | வழங்குனர்களிடமிருந்து இன்வொயிஸ்களை முறைப்படியாக திணைக்களத்திற்குப் பெற்றுக்கொண்டு அவற்றினை சான்றுபடுத்துதல் அங்கீகரித்தல் மற்றும் கொடுப்பனவு செய்தல் சம்பந்தமான நடைமுறைகளைப் பின்பற்றுதல் வேண்டும். |
| (iii) | நி.பி 571(2) | மீளாய்வாண்டின் இறுதித் திகதியில் 02 ஆண்டுகள் காலத்தை மிகைத்திருந்த ரூபா 158,921,486 தொகையான வைப்புக்கள் அரசாங்க வருமானத்திற்கு செலவு வைக்கப்பட்டிருக்கவில்லை. அந்த வைப்பு மீதியினுள் 05 ஆண்டுகளை மிகைத்திருந்த ரூபா | பொதுவைப்புக் கணக்கு தொடர்பாக 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 02 ஆண்டுகள் காலத்தை மிகைத்த 165 வைப்புக்களில் ரூபா 158,921,487 காணப்பட்டது. அந்த வைப்பு மீதியினுள் 02 ஆண்டுகளுக்கும் 05 ஆண்டுகளுக்கும் இடைப்பட்ட | 02 ஆண்டுகள் காலத்தை மிகைத்த வைப்புக்கள் நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் அரசாங்க வருமானத்திற்கு எடுத்துக்கொள்ளப்படுதல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | 7,071,727 வைப்புக்களும் உள்ளடங்கி இருந்தது. | வைப்பாகிய ரூபா 151,849,759 வைப்புக்களுக்கு மத்தியில் ரூபா 24,233,784 தொகை 2024 மே 31 ஆந் திகதி தீர்த்து வைக்கப்பட்டது. அவ்வாறே 05 ஆண்டுகளை மிகைத்த வைப்பு மீதியான ரூபா 7,071,728 இற்கு மத்தியில் ரூபா 165,000.00 தொகை 2024 மே 31 ஆந் திகதி தீர்த்துவைக்கப்பட்டதுடன் மிகுதி வைப்பு மீதியினை தீர்த்துவைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. | |
| (iv) | நி.பி 753(1) மற்றும் (2) | நானாவித செயற்திட்டங்களின் கீழ் குளங்கள்/ நீர்த் தேக்கங்களை நிர்மாணித்தல் மற்றும் புனரமைப்புச் செய்வதற்காக துறைக்கு நேரடியாக கிடைக்கின்ற பொருட்கள் சம்பந்தமாக நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இது சம்பந்தாமக அனைத்து வலய அலுவலகங்கள் மற்றும் பிரதேச செயலகங்களுக்கு தெரியப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுப்பேன். | துறைக்கு நேரடியாக கிடைக்கின்ற பொருட்கள் சம்பந்தமாக நிதிப்பிரமாணங்களின் அறிவுறுத்தல்களுக்கு இணங்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (எ) | நி.பி 756 | பிராந்திய நீர்பாசன பொறியியலாளர் அலுவலகங்களின் செயற்பாடுகளும் பராமரிப்பு வேலைகளும் மற்றும் நிர்மாண வேலைகளுக்குமாக வழங்கி பொறியியல் உதவியாளர்களின் பொறுப்பில் உள்ள மீளாய்வுச் சபையின் மூலம் பௌதீகரீதியாக பரீட்சிக்கப்பட்டிருக்கவில்லை. | நீர்ப்பாசன பணிப்பாளர் நாயகத்தின் FIN/ST/VR/2023 ஆம் இலக்க 2023 நவம்பர் 24 ஆந் திகதிய கடிதத்தின் மூலம் தேவையான அறிவுறுத்தல்கள் மற்றும் மாதிரிப் படிவங்கள் உரிய அனைத்து உத்தியோகத்தர்களுக்கும் வழங்கப்பட்டுள்ளன. திணைக்களத்தின் வேைலைத் தலங்களில் பொறியியல் உதவியாளர்களின் பெறுப்பில் உள்ள பொருள் மீதிகளை | வருடாந்த பொருள் மீளாய்வானது நிதிப்பிரமாணம் மற்றும் திணைக்கள அறிவுறுத்தல்களையும் படிவங்களையும் பின்பற்றி மேற்கொள்ளப்படுதல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | பௌதீகரீதியாக பரீட்சித்ததன் பின்னர் பிரிவு உதவியாளர் மற்றும் நீர்ப்பாசன பணிப்பாளரினால் வழங்கப்படுகின்ற அறிக்கையானது மீளாய்வுச் சபையினால் உறுதிப்படுத்தி பொருள் மீளாய்வு அறிக்கைக்கு உள்ளடக்கப்படும். | |
| (ஈ) | 2017 யூன் 26 ஆந் திகதிய 01/2017 ஆம் இலக்க சொத்துக்கள் முகாமைத்துவ சுற்றறிக்கை | திணைக்களத்தினால் பேணப்பட்டு வருகின்ற தகவல் முறைமை சரியாகவும் நாளதுவரையாகவும் பேணப்பட்டிருக்கவில்லை. | கொள்வனவு செய்தல்கள் மற்றும் கைதவிர்ப்புச் செய்கின்ற சொத்துக்களை ஆவணப்படுத்துதல் சம்பந்தமான தகவல்கள் கொம்பட்ரோலர் நாயகம் அலுவலகத்தின் அறிவுறுத்தல்களின் பிரகாரம் நிதியற்ற சொத்துக்களை முகாமைத்துவம் செய்தல் மற்றும் தகவல்களை அறிக்கையிடுவதற்கான 06/2023 ஆம் இலக்க சொத்துக்கள் முகாமைத்துவ சுற்றறிக்கையின் மூலம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள நிதியற்ற சொத்துக்கள் முகாமைத்துவ முறைமையின் (NFAMS) கீழ் நடவடிக்கை எடுக்க வேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. | சொத்துக்கள் முகாமைத்துவ சுற்றறிக்கையின் அறிவுத்தல்களின் பிரகாரம் திணைக்கள தகவல் முறைமையை சரியாக நாளதுவரையாக்குதல் வேண்டும். |
| (உ) | 2022 பெப்ரவரி 07 ஆந் திகதிய 01/2022 ஆம் இலக்க முகாமைத்துவ கணக்காய்வு சுற்றறிக்கையின் 04 ஆம் பந்தி | திணைக்களத்தின் கீழ் அமுல்ப்படுத்தப்பட்ட செயற்திட்டங்களுக்காக செயற்திட்ட உள்ளகக் கணக்காய்வு மீளாய்வுக் குழுக் கூட்டங்கள் நடாத்தப்பட்டிருக்கவில்லை. | 2023 ஆம் ஆண்டில் செயற்திட்டங்களுககாக கலந்துரையாட வேண்டிய விடயங்கள் அதிக அளவானவை என்பதனால் 2024 மார்ச் 13 ஆந் திகதி செயற்திட்டங்களுக்காக தனியான செயற்திட்ட உள்ளகக் கணக்காய்வு மீளாய்வுக் குழுக் கூட்டம் நடாத்தப்பட்டது என | சுற்றறிக்கையின் பிரகாரம் உள்ளகக் கணக்காய்வுக் குழுக் கூட்டம் நடாத்தப்படுதல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | தயவாக தெரிவிக்கிறேன். | |
| (ஊ) | 1982 இன் 23 ஆம் இலக்க நீர்ப்பாசன திணைக்கள சுற்றறிக்கையின் (அ) பந்தி | பொறியியல் உதவியாளரினால் அடுத்துவரும் மாதத்தின் வேலை செய்யும் 05 நாட்களுக்குள் மாதாந்த பொருள் அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | நிர்ணயிக்கப்பட்ட திகதிக்கு முன்னர் பொருள் அறிக்கையினை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு IA/01/COM/03/2023 ஆம் இலக்க 2023 மே 04 ஆந் திகதிய கடிதத்தின் மூலம் உரிய உத்தியோகத்தர்களுக்கு தெரியப்படுத்தப்பட்டுள்ளது. | திணைக்கள சுற்றறிக்கையின் பிரகாரம் மாதாந்த பொருள் அறிக்கை பெற்றுக்கொள்ளப்படுதல் வேண்டும். |
| (எ) | நீர்ப்பாசன பணிப்பாளர் நாயகத்தின் 2023 பெப்ரவரி 28 ஆந் திகதிய 03/2023 ஆம் இலக்க நீர்ப்பாசன சுற்றறிக்கை | திணைக்களத்திற்கு இணைத்துக்கொள்ளப்பட்டுள்ள அனைத்து ஆளணியினர்களுக்குமாக கடமை ஒப்படைப்பிற்காக தொழில் விபரம் தயாரிக்கப்பட வேண்டிய போதிலும் அனைத்து ஆளணியனர்களுக்காகவும் அவ்வாறான தொழில் விபரம் தயாரிக்கப்படவில்லை. | தேவையான நடவடிக்கை எடுப்பதற்கு முயற்சி எடுக்கப்பட்டுள்ளது. | நீர்ப்பாசன பணிப்பாளர் நாயகத்தின் சுற்றறிக்கையின் பிரகாரம் அனைத்து ஆளணியினர்களுக்கும் கடமை ஒப்படைப்பிற்காக தொழில் விபரம் தயாரிக்கப்படுதல் வேண்டும். |
| (ஏ) | நீர்ப்பாசன பணிப்பாளர் நாயகத்தின் 2023 பெப்வரரி 28 ஆந் திகதிய 04/2023 ஆம் இலக்க நீர்ப்பாசன சுற்றறிக்கையின் 04 ஆம் பந்தி | வெளிக்கள உத்தியோகத்தர்கள் தமது கடமைகளை மேற்கொள்வதற்காக முறைப்படியான மாதாந்த நிகழ்ச்சித்திட்டங்களை முன்னைய மாதத்தின் 25 ஆந் திகதி அல்லது அத்திகதிக்கு முன்னர் தமது நிறுவன தலைவருக்குச் சமர்ப்பித்து அங்கீகாரத்தினைப் பெற்றுக்கொள்ள வேண்டிய போதிலும் திணைக்களத்திற்கு இணைத்துக்கொள்ளப்பட்ட பொறியியல் உதவியாளர்கள் மற்றும் தொழில்நுட்ப உதவியாளர்களால் வெளிக்கள கடமைகளுக்கான எதிர்கால நிகழ்ச்சித்திட்டங்களை | தேவையான நடவடிக்கை எடுப்பதற்கு முயற்சிகள் எடுக்கப்பட்டுள்ளன. | நீர்ப்பாசன பணிப்பாளர் நாயகத்தின் சுற்றறிக்கையின் பிரகாரம் வெளிக்கள உத்தியோகத்தர்கள் முறைப்படியாக மாதாந்த எதிர்கால நிகழ்சித்திட்டங்களை சமர்ப்பித்து அங்கீகாரத்தினைப் பெற்றுக்கொள்ளுதல் வேண்டும். |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | தயாரிக்காதிருந்தும் அது தொடர்பாக கவனத்திற்கு எடுத்துக் கொள்ளாது அந்த உத்தியோகத்தர்களுக்கு வெளிக்கள கடமைகளுக்கு அனுமதி வழங்கப்பட்டிருந்தது. | | |
| (ஐ) | வெளிக்கள கணக்கு வைத்தல் மற்றும் விலையிடல் சம்பந்தமான - ii ஆம் தொகுதி கோவை - ii ஆம் தொகுதி - வாகனங்களும் உபகரணங்களும் | | | | |
| | (i) | 21 ஆம் பந்தி | நாளாந்த ஓட்ட அட்டவணைகளின் பிரகாரம் செய்த வேலைகளைப் பற்றிய மாதாந்த பொழிப்பு அடுத்துவரும் மாதத்தின் 10 ஆந் திகதிக்கு முன்னர் இயந்திர பணிப்பாளருக்குச் சமர்ப்பிக்க வேண்டிய போதிலும் 2023 ஆம் ஆண்டில் திணைக்களத்தின் நாளாந்த ஓட்ட குறிப்புக்கள் சமர்ப்பிக்க வேண்டிய 559 வாகனங்களில் 243 வாகனங்களின் அட்டவணைகளை முறைப்படியாக சமர்ப்பித்திருக்கவில்லை. | அந்த அறிக்கையின் பிரதிகளை வலய நீர்ப்பாசன பணிப்பாளர்களுக்கு அனுப்பிவைத்து உரிய நிர்ணயிக்கப்பட்ட திகதியில் கிடைக்காத அறிக்கைகளை இயந்திரங்கள் மற்றும் இயந்திர பிரிவிற்கு பெற்றுக்கொள்வதற்கு தற்பொழுது நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | சுற்றறிக்கைகள் மற்றும் நிதிப்பிரமாணங்களில் குறிப்பிட்ட அறிவுறுத்தல்கக்கு இணங்க ஓட்ட அட்டவணைகள் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும். |
| | (ii) | 24 மற்றும் 25 ஆம் பந்திகள் | மாதாந்த கிரய அறிக்கையானது அடுத்துவரும் மாதத்தின் 20 ஆந் திகதிக்கு முன்னர் இயந்திர பணிப்பாளருக்குச் சமர்ப்பிக்க வேண்டிய போதிலும் 2023 ஆம் ஆண்டில் திணைக்களத்தின் 482 இயந்திரங்களில் 210 இயந்திரங்களின் மாதாந்த கிரய அறிக்கைகள் முறைப்படியாக | அந்த அறிக்கைகளின் பிரதிகளை வலய நீர்ப்பாசன பணிப்பாளர்களுக்கு அனுப்பிவைத்து உரிய நிர்ணயிக்கப்பட்ட திகதியில் கிடைக்காத அறிக்கைகளை இயந்திரங்கள் மற்றும் இயந்திரவியல் பிரிவிற்கு பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு | சுற்றறிக்கைகள் மற்றும் நிதிப்பிராணங்களின் பிரகாரம் மாதாந்த கிரய அறிக்கை சமர்ப்பக்கப்படுதல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | வருகின்றது. | |

## 2.6 வைப்பு மீதிகள்

வைப்பு மீதிகள் சம்பந்தமாக வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அவதானிப்புக்கள் கீழே தரப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| (அ) திணைக்களத்தினால் ஆறுகள் கால்வாய்களுக்கு அருகாமையில் சிறிய நீர் மின்நிலையங்களை நிர்மாணித்தல், மணலை அகற்றுதல் என்பவைகள் உள்ளடங்கலாக ஏனைய பொருளாதார நடவடிக்கைகளுக்காக அனுமதிப்பத்திரத்தினை வழங்குதல் மற்றும் பல்வேறு அரசாங்க நிறுவனங்களுக்கு சிபாரிசுகளைச் சமர்ப்பிப்பதற்காக ரூபா 10,000 வீதம் கட்டணமாக அறவிட்ட ரூபா 8,925,901 மீதி 6000-0-0-13-0-36-0-0 இலக்க கணக்கிற்கு வைப்புச்செய்து முறையான அங்கீகாரமின்றி செலவு செய்யப்பட்டிருந்துடன் நி.பி 569 இன் பிரகாரம் மீளாய்வாண்டில் உரிய செயற்பாடுகளின் மூலம் சேகரித்த வருமானம் மற்றும் மேற்கொள்ளப்பட்ட செலவுகள் தொடர்பாக உறுதியாக அடையாளம் காணக்கூடிய வகையில் கணக்கு வைக்கப்பட்டிருக்கவில்லை. | 2023 யூன் மாதத்திற்கு முன்னர் மணல் அகழ்வதற்காக சிபாரிசுகளை வழங்கும் போது அறவிடப்படுகின்ற ரூபா 10,000 கட்டணம் திணைக்களத்தின் வலய அலுவலகத்தின் மூலம் அறவீடு செய்தல் இடம்பெற்றுள்ளதுடன் அப்பணம் நிருவாகச் செலவுகளாக வழங்கப்படுவதனால் உரிய அச்செயற்பாடுகளுக்காக பிராந்திய நீர்பாசன பொறியியலாளருக்கு விடுவிக்கப்படும். 2023 யூன் மாதத்திலிருந்து மணல் அகழ்வதற்கான நிருவாகச் செலவு புவிச்சரித்தரவியல் ஆய்வு மற்றும் சுரங்கங்கள் பணியகத்தினால் அறவிட்டு காசோலைகளின் மூலம் நீர்ப்பாசன பணிபாளர் நாயகத்திற்கு வழங்கப்படுவதுடன் அப்பணம் சிபாரிசுகளை வழங்கிய வலய அலுவலகத்திற்கு வழங்கப்படும். சிறிய நீர் மின் நிலையங்களுக்கு சிபாரிசுகளை வழங்குவதற்கு ரூபா 50,000 தொகை அறவிடப்படுவதுடன் அதில் ரூபா 15,000 தொகை அரசிறையாகக் கொடுப்பனவு செய்து மிகுதித் தொகை சிறிய நீர் மின் நிலையங்களுக்கு சிபாரிசுகளை வழங்குவதற்காக வலய அலுவலகத்தின் மற்றும் தலைமை அலுவலகத்தின் | பல்வேறு செயற்பாடுகளின் மூலம் சேகரிக்கப்படுகின்ற வருமானத்திற்காக திறைசேரி அங்கீகாரத்தினைப் பெற்று அந்த வருமானத்தினை சேகரிப்பதற்கு முறையான கட்டுப்பாட்டு முறைமை ஸ்தாபிக்கப்படுதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | நிருவாகச் செலவுகளாக ஈடுபடுத்தப்படும். | |
| (ஆ) | மேற்கூறிய வைப்புக் கணக்கின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி ரூபா 389,040,899 ஆக இருந்ததுடன் அவற்றில் சில வைப்புக்கள் உரிய செயற்பாடுகளுக்காக ஈடுபடுத்தப்படாது 2020 ஆம் ஆண்டிலிருந்து நிறுத்திவைக்கப்பட்டிருந்தது. | ரூபா 367,448,359 தொகைக்கு மத்தியில் ரூபா 100,268,832 தொகை 2023 மே 31 ஆந் திகதி தீர்த்துவைக்கப்பட்டு மிகுதி வைப்பு மீதியினை தீர்த்துவைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. | பல்வேறு செலவு செயற்பாடுகளுக்காக கிடைக்கின்ற நிதி ஏற்பாடுகளை உரிய செயற்பாடுகளுக்காக தாமதமின்றி ஈடுபடுத்துதல் வேண்டும். |
| (இ) | 6000-0-0-13-0-36-0-0 ஆம் இலக்க வைப்புக் கணக்கில் மூன்றாந் தரப்பினர்களுக்குரிய வைப்புக்கள் மாத்திரம் உள்ளடக்கப்பட வேண்டிய போதிலும் மூன்றாந் தரப்பினர்கள் அல்லாத 40 வைப்புக்கள் தொடர்பாக 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 292,518,772 மீதி காணப்பட்டது. நீர்ப்பாசன அமைச்சு மற்றும் நீர்ப்பாசன திணைக்களத்தின் செலவுத் தலைப்பின் கீழ் ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதி ஏற்பாட்டிலிருந்து நிர்ணயிக்கப்பட்ட செயற்பாடுகளை நிறைவேற்றாது செலவுகளாக கணக்கீடு செய்து வைப்புக் கணக்கில் நிறுத்திவைக்கப்பட்டிருந்தது. | மூன்றாந் தரப்பினர்கள் தொடர்பாக 6000-0-0-13-0-36 ஆம் இலக்க வைப்புக் கணக்கில் நிறுத்திவைத்தல் இடம்பெறுறுள்ளது. உரிய செயற்திட்டங்களிலிருந்து வைப்பு பணத்தை விடுவிக்குமாறு வேண்டுகோள் விடுக்கப்படாததனால் வைப்புக் கணக்கில் நிறுத்திவைக்கப்பட்டிருந்தது. | வைப்புக்களை நீண்டகாலம் நிறுத்திவைத்து உரிய செயற்பாடுகளுக்காக தாமதமின்றி ஈடுபடுத்ததல் வேண்டும். |
| (ஈ) | தெற்கு அதிவேக வீதியினை நிர்மாணித்த சீன கம்பனியால் மாத்தறை நில்வளா அணைச் செயற்திட்டத்தின் BR-5 அணை 2003 ஆம் ஆண்டில் சேதமடைந்ததனால் மாத்தறை கிரலகெலே பிரதேசத்தில் ஏற்பட்டிருந்த வெள்ள ஆபத்தினைக் கட்டுப்படுத்துவதற்காக காலி வலய நீர்ப்பாசன பணிப்பாளர் அலுவலகத்திற்கு செயற்திட்ட | சீன கம்பனியால் உரிய செயற்திட்டங்களுக்கு சமூக மற்றும் சுற்றாடல் தடைகளின் காரணமாக மேலதிக நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு முடியாதிருந்தது. அவ்வாறே தற்பொழுது தலைமை அலுவலகத்தின் திட்டப் பிரிவின் மூலம் மீண்டும் மாற்றமான திட்டத்திற்கு செயற்திட்டத்தினை அமுல்ப்படுத்துவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது. தற்பொழுது காணப்படுகின்ற அணை | செயற்திட்டத்தின் மூலம் ஒப்படைக்கப்பட்டுகின்ற பல்வேறு செயற்பாடுகளுக்காக கிடைக்கின்ற நிதி ஏற்பாட்டினை உரிய செயற்பாடுகளுக்காக தாமதமின்றி ஈடுபடுத்துதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | செயற்பாடுகளுக்காக வழங்கப்பட்டிருந்த ரூபா 21,364,992 பணத்தில் ரூபா 1,120,415 இனை மாத்திரம் செலவு செய்து 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 20,244,577 மீதி 6000-0-0-13-0-36-0-0 ஆம் இலக்க வைப்புக் கணக்கில் நிறுத்திவைக்கப்பட்டிருந்தது. | மட்டமானது கடல் மட்டத்திலிருந்து 2.7 மீற்றர் ஆனதுடன் அதனை கடல் மட்டத்திலிருந்து 3.9 மீற்றர் வரை உயர்த்துவதற்கு திட்டமிடப்பட்டுள்ளதுடன் தற்பொழுது அதற்காக மதிப்பீடு தயாரிக்கப்பட்டு வருகின்றது. | |
| (உ) | தெற்கு அதிவேக வீதியினை நிர்மாணிக்கும் போது ஹம்பாந்தோட்டை வலய நீர்ப்பாசன பணிப்பாளர் அலுவலகத்திற்குரிய நீர்பாசன கட்டமைப்புக்களுக்கு ஏற்பட்டுள்ள சேதத்தினை நல்ல நிலைக்கு கொண்டுவருவதற்கு கிடைத்துள்ள ரூபா 22,768,500 தொகை வைப்புக் கணக்கில் நிறுத்திவைக்கப்பட்டிருநதும் அந்த நீர்ப்பாசன கட்டமைப்புக்களை நல்ல நிலைமைக்கு மாற்றுவதற்கு இன்றுவரை நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு வைப்புக்களில் 41 சதவீதத்தினை செலுத்தி ரூபா 13,265,091 மீதி வைப்புக் கணக்கில் இன்னும் காணப்பட்டது. | உரிய செயற்திட்டத்திற்கு கிடைத்த பணத்தில் மேற்கொள்ள வேண்டியுள்ள செலவுகளுக்கு மத்தியில் ரூபா 861,207 தொகையான வவுச்சர்களை கட்டுநிதி கிடைத்ததன் பின்னர் செலுத்தி பூர்த்திசெய்து மிகுதிப் பணத்தை அரசாங்க வருமானத்திற்கு செலவு வைப்பதற்கும் திருத்திய மதிப்பீட்டின் பிரகாரம் மழை முடிவடைந்த உடன் வேலைகளை மேற்கொள்வதற்கும் அதற்காக ரூபா 5,221,476 விலைப் பட்டியல் கிடைத்துள்ளதுடன் கட்டுநிதி கிடைத்ததன் பின்னர் கொடுப்பனவு செய்யப்படும். இதன் வேலைகள் 90 சதவீதம் அளவில் முடிவடைந்துள்ளது. விவசாயிகள் அமைப்பின் மூலம் இன்னும் அத்தியவசியமான வேலைப் பகுதிகளை செய்து தருமாறு வேண்டுகோள் விடுவிக்கப்பட்டுள்ளதனால் அந்த அங்கீகரித்த தொகைக்கு மற்றும் மதிப்பீட்டின் மிகுதிப் பணத்தில் அப்பகுதியினையும் மேற்கொள்வதற்காக பிரதான மதிப்பீடு திருத்தம் செய்து சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. அங்கீகாரம் கிடைத்த உடன் உரிய நிர்மாண வேலைகள் | செயற்திட்ட செயற்பாடுகளுக்காக கிடைத்த நிதி ஏற்பாட்டினை உரிய செயற்பாடுகளுக்காக தாமதமின்றி ஈடுபடுத்ததுல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | மேற்கொள்ளப்படும் என நீர்ப்பாசன பணிப்பாளர் தெரிவித்துள்ளார். | |
| (ஊ) | பலபிடிய பிரதேச செயலகப் பரிவிற்குரிய அகுங்கல்ல கமநல சேவை அதிகாரப் பிரதேசத்தில் ஹேகல்ல, கொஸ்கொடவில் அமைந்துள்ள 30 ஏக்கர் தரிசான வயல் நிலங்களை சோஜான் முறைமையில் தாழ் நிலங்களில் தென்னைப் பயிர்ச் செய்கையை மேற்கொள்வதற்காகவும் நீர்ப்பாசன முறையை தயார்படுத்துவதற்காகவும் தென்னைப் பயிர்ச் செய்கை சபையினால் 2021 ஆம் ஆண்டில் விடுவிக்கப்பட்ட ரூபா 15,243,945 பணம் காலி வலய நீர்ப்பாசன பணிப்பாளர் அலுவலகத்திற்கு கிடைததுத அப்பணம் 6000-0-0-13-0-36-0-0 ஆம் இலக்க வைப்புக் கணக்கில் வைப்புச் செய்யப்பட்டிருந்தது.. திணைக்களத்தின் நோக்கெல்லைக்கு நேரடியாக தொடர்பு இல்லாத இச்செயற்பாட்டினை முறையான அங்கீகாரமின்றி காலி வலய நீர்ப்பாசன பணிப்பாளரினால் பொறுப்பேற்கப்பட்டிருந்தது. விழாக்களை நடாத்துதல், எரிபொருள், பிரயாணச் செலவுகள் முதலிய பல்வேறு நிருவாகச் செலவுகளாக ரூபா 1,886,064 செலவு செய்யப்பட்டிருந்ததுடன் மிகுதி ரூபா 12,509,354 பணம் இன்று வரை உரிய செயற்பாடுகளுக்காக ஈடுபடுத்தப்படாது மேற்கூறிய வைப்புக் கணக்கில் நிறுத்திவைக்கப்பட்டிருந்தது. செயற்திட்டத்தின் கீழ் 05 | திணைக்களத்தினால் 10 ஏக்கர்களுக்கு மாத்திரம் மதிப்பீடு தயாரிக்கப்பட்டு முதலாம் கட்டத்தின் கீழ் 05 ஏக்கர் பகுதியில் வேலைகள் ஆரம்பிக்கப்பட்டது. அதற்கிணங்க 10 ஏக்கர்களுக்காக அங்கீகரித்த மதிப்பீட்டுப் பணம் ரூபா 4,202,000 ஆகும். இதற்காக தென்னை பயிர்ச்செய்கை சபையினால் ரூபா 15,243,945 தொகை காலி வலய நீர்ப்பாசன பணிப்பாளர் அலுவலகத்திற்கு வழங்கப்பட்டிருந்ததுடன் தற்பொழுது ரூபா 12,509,354 மீதி தீர்த்துவைக்கப்படாது காணப்பட்டது. செயற்திட்டமானது சமூக மற்றும் சுற்றாடல் தடைகளின் காரணமாக தற்காலிகமாக நிறுத்திவைக்கப்பட்டிருந்தது. புதிய மதிப்பீடு அங்கீகரிக்கப்பட்டதன் பின்னர் செயற்திட்டம் ஆரம்பிக்கப்பட்டிருந்தும் காணிப் பிரச்சினையால் இச்செயற்திட்டத்தினை எதிர்காலத்தில் செயற்படுத்த முடியாதிருக்கும். எனவே இச்செயற்திட்டத்தினை எதிர்காலத்தில் செயற்படுத்துவதற்கு தென்னைப் பயிர்ச்செய்கை சபையின் நேரடி தலையீட்டின் மூலம் காணிப் பிரச்சினையை தீர்த்துவைக்குமாறும் அவ்வாறு இல்லையாயின் பொதுவைப்பில் காணப்படுகின்ற பணத்தை மீளப்பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்குமாறும் | கிடைத்த நிதி ஏற்பாட்டினை பொதுவைப்புக் கணக்கில் நிறுத்திவைப்பதற்கு நடவடிக்கை எடுக்காதிருக்க வேண்டியதுடன் உரிய செயற்பாடுகளுக்கு தாமதமின்றி ஈடுபடுத்துதல் வேண்டும். |

| | |
|---|---|
| ஏக்கர் நிலத்தை தயார்படுத்தி பயிர்ச் செய்கை மேற்கொள்வதற்காக ரூபா 4.2 மில்லியன் மதிப்பீடு அங்கீகரிக்கப்பட்டு ஒரு ஒப்பந்தக்காரருக்கு ஒப்படைத்து ரூபா 721,241 தொகையான வேலைகள் சான்றுபடுத்தப்பட்டு செலுத்தப்பட்டிருந்த போதிலும் மிகுதியான வேலைகள் இடைநடுவில் நிறுத்திவைக்கப்பட்டு 05 பாத்திகளில் 125 தென்னை நாற்றுக்கள் பயிர்ச் செய்கை பண்ணப்பட்டிருந்தன. அதற்கிணங்க இன்னும் 1,375 தென்னை நாற்றுக்களை நடுகை செய்வதற்காக 55 பாத்திகள் தயார்படுத்த வேண்டி இருந்தது. அவ்வாறே முழுப்பணமும் செலுத்தப்பட்டிருந்தும் தற்பொழுது சந்தை விலைகள் உயர்வடைந்துள்ளதற்கு இணங்க எஞ்சியுள்ள பணத்தில் உரிய செயற்பாடுகளை எதிர்பார்த்தவாறு பூர்த்திசெய்வதற்கு முடியாதிருந்தது. | தென்னைப் பயிர்ச் செய்கை சபைக்கு தெரியப்படுத்தப்பட்டது. |

## 2.7 முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| (அ) கம்பஹா, அத்தனகல்ல மற்றும் மினுவாங்கொட ஒருங்கிணைந்த நீர் வழங்கல் செயற்திட்டத்தினை அமுல்ப்படுத்துவதற்காக தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையின் தலைவருக்கும் சீன கம்பனியின் தலைவருக்குமிடையே 2013 மே 15 ஆந் திகதி மேற்கொள்ளப்பட்ட ஒப்பந்த உடன்படிக்கையின் பிரகாரம் அமெரிக்க டொலர் 229.5 மில்லியன் பெறுமதியான செயற்திட்டம் 2014 - 2017 | | |

| | | | |
|---|---|---|---|
| | காலப்பகுதியில் அமுல்ப்படுத்தி முடிவுறுத்துவதற்கு நிர்ணயிக்கப்பட்டிருந்தது.<br>செயற்திட்டத்தின் பிரதான நீர் மூலமான பஸ்னாகொட நீர்த் தேக்கத்தினை நிர்மாணிப்பதற்காக நீர்ப்பாசன திணைக்களத்துடன் தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை 2016 மார்ச் 22 ஆந் திகதி மற்றும் 2019 யூன் 12 ஆகிய திகதிகளில் 02 புரிந்துணர்வு உடன்படிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன.<br>செயற்திட்டத்தின் பிரதான நீர் மூலத்தினை திட்டமிடுதல் நிர்மாணித்தல் மற்றும் மேற்பார்வை செய்யும் முழுமையான பொறுப்பினை நீர்ப்பாசனத் திணைக்களம் பொறுப்பேற்றிருந்தது. | | |
| (i) | மேற்கூறிய செயற்திட்டம் சம்பந்தமாக நீர்ப்பாசனத் திணைக்களத்தின் 2022 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக 2018 இன் 18 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 11(1) ஆம் பிரிவின் பிரகாரம் விபரமான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கையின் மூலம் சமர்ப்பிக்கப்பட்ட அவதானிப்புக்களுக்காக கணக்காய்வாளர் தலைமை அதிபதியினால் வழங்கப்பட்டிருந்த சிபாரிசுகள் இன்றுவரை அமுல்ப்படுத்தப்பட்டிருக்கவில்லை. அதில் தாபன விதிக் கோவையின் II ஆம் தொகுதியின் XLVIII ஆம் அத்தியாயத்தின் 29 ஆம் பிரிவின் கீழ் ஒழுக்காற்று நடைமுறைகள் பின்பற்றப்பட வேண்டும் என்பதற்கான 05 சிபாரிசுகள், 2018 இன் 18 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 38(1) ஆம் பிரிவின் பிரகாரம் சட்டத்தை அமுல்ப்படுத்தும் முகவர் நிறுவனத்திற்கு | செயற்திட்டம் தொடர்பாக சாத்தியவள ஆய்வு மேற்கொள்ளப்பட்டிருந்தும் இது சம்பந்தமாக விசேட அமைச்சரவை அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை. தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழு மேற்கொண்ட அப்பிழைகள் அடையாளங்காணப்பட்ட சந்தர்ப்பத்திலிருந்து சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அதற்கிணங்க முற்பணம் செலுத்தும் போது ரூபா 50,811,416 மேலதிகமாக செலுத்தப்பட்டிருந்ததுடன் அப்பணத்தை ஒப்பந்தக்காரருக்கு செலுத்தும் போது (Interim payment) அப்பணத்தில் ரூபா 40,223,654 தொகை கழிக்கப்பட்டு மிகுதிப் பணமான ரூபா 10,587,862 மிகுதிக் கொடுப்பனவு நடவடிக்கைகளின் | புரிந்துணர்வு உடன்படிக்கைகளை மேற்கொள்வதற்கு முன்னர் சாத்தியவள ஆய்விற்காக அமைச்சரவை அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட வேண்டியதுடன் தொழில் நுட்ப மதிப்பீட்டுக் குழு அங்கத்தவர்கள் பெறுகை வழிகாட்டிக் கோவையிலுள்ள ஏற்பாடுகளை கவனிக்காது நடவடிக்கை எடுத்தல் சம்பந்தமாக ஒழுக்காற்று நடவடிக்கையினைப் பின்பற்றி மிகையாக செலுத்திய பணத்தை தாமதமின்றி அறவீடு செய்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | முறைப்பாடு செய்யப்பட வேண்டும் என்பதற்கான 02 சிபாரிசுகள், ஒப்பந்த நிருவாகத்தினை வலுப்படுத்த வேண்டும் என்பதற்கான 04 சிபாரிசுகள், பெறுகை நடைமுறைகளானது. மேலதிக கிரயம் மற்றும் காலம் கழிக்கப்படாத வகையில் மேற்கொள்ளப்பட வேண்டும் என்பதற்கான ஒரு சிபாரிசு மற்றும் புரிந்துணர்வு உடன்படிக்கையினை மேற்கொள்வதற்கு முன்னர் அமைச்சரவை அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட வேண்டும் என்பதற்கான ஒரு சிபாரிசு என்பவைகளுக்காக தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | போது குறைத்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவில் சேவையாற்றிய அங்கத்தவர்கள் சம்பந்தமாக ஆராய்ந்து பார்த்து பொருத்தமான நடவடிக்கை எடுப்பதற்கு எதிர்பார்க்கிறேன். புரிந்துணர்வு உடன்படிக்கை (MOU) மேற்கொண்ட 2016 மார்ச் 12 ஆந் திகதி வரை ஒருங்கிணைந்த நீர் வழங்கல் செயற்திட்டத்தினை பூர்த்திசெய்வதற்கு ஒரு ஆண்டிற்கு குறைந்த காலம் மாத்திரம் எஞ்சியுள்ளதுடன் அக்காலப் பகுதிக்குள் நீர் மூலத்தின் நிர்மாண நடவடிக்கைகளை பூர்த்தி செய்தல் நடைமுறைச் சாத்தியமற்றது என கவனம் செலுத்தப்படவில்லை. | |
| (ii) | ஒப்பந்தக்காரரினால் 2022 பெப்ரவரி 05 ஆந் திகதி சமர்ப்பிக்கப்பட்ட காலத்தை நீடிப்புச் செய்வதற்கான வேண்டுகோள் கடிதத்தின் மூலம் உடன்படிக்கையின் சாதாரண நிபந்தனையின் கீழான 2.1 உப பிரிவின் பிரகாரம் ஒப்பந்தக்காரருக்கு வேலைத்தளத்திற்கு நுழையும் இயலுமை இல்லாததன் அடிப்படையில் காலநீடிப்பு வேண்டிக் கொள்ளப்பட்டதுடன் உடன்படிக்கையின் 20.1 ஆம் உபபிரிவின் மூலம் கால நீடிப்புச் செய்வதற்கான மேலதிக கிரயத்தினை மேற்கொள்ளும் உரிமை ஒப்பந்தக்காரரினால் | குழு அறிக்கைக்கு இணங்க தாமத கால அளவிற்கு காணிகளை சுவீகரிப்பதில் தாமதங்கள், முறைப்படியாக உரிய காலத்திற்குள் உரிய வேலைத்தளத்தினை ஒப்பந்தக்காரருக்கு ஒப்படைப்பதற்கு முடியாமை, பிரதேசத்திலுள்ள மக்களின் எதிர்ப்பு மற்றும் கொவிட் தொற்றுநோய் நிலைமை போன்ற ஒப்பந்தக்காரரின் கட்டுப்பாட்டிற்கு அப்பாற்பட்ட விடயத்தினால் காலம் நீடிக்கப்பட்டது. இந்த தவிர்க்க முடியாத | ஒப்பந்தக்காரருடன் ஏற்படுத்திக் கொள்ளப்பட்ட உடன்படிக்கையில் குறிப்பிட்ட நிபந்தனைகளுக்கு இணங்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | குறிப்பிடப்பட்டிருந்தது. | விடயங்கள் சம்பந்தமாக குழு அறிக்கையில் ஒரு குறிப்பு இல்லை என ஏற்றுக்கொள்கிறேன். எனினும் ஒப்பந்தக்காரரினால் தற்பொழுது மேலதிக கிரயத்தினை மேற்கொள்வது சம்பந்தமாக தெரியப்படுத்தப்பட்டுள்ளது. | |
| (iii) | நீண்டகால தாமதத்தின் காரணமாக ஒப்பந்ததக்காரரிற்கு மேற்கொள்ள வேண்டி ஏற்பட்ட மேலதிக கிரயத்திற்கான (பொருட்களின் விலைகள் அதிரிகத்தல் போன்ற) இழப்பீட்டினை அவர்களினால் ஒப்பந்த செயலாற்றல் கால எல்லைக்குள் விபரமாக சமர்ப்பிக்குமாறு தெரியப்படுத்தி இருத்தல் | இந்த உடன்படிக்கையின் பிரகாரம் 18 மாதம் போன்ற குறுகிய காலத்திற்குள் இலங்கைப் பணத்தில் கொடுப்பனவு நடவடிக்கை மேற்கொள்ள வேண்டியிருந்தது. எனினும் ரூபா எதிர்பாராத வகையில் வீழ்ச்சியடைதல், ஒப்பந்த காலம் எதிர்பாராதவாறு நீடிக்கப்படுதல், விலைகள் உயர்வடைதல் என்பன எதிர்பாராத நிலைமைகள் ஆகும். இது உடன்படிக்கை செய்த சந்தர்ப்பத்தின் போது காணப்பட்ட நிலைமையினை விட தெளிவான வித்தியாசமான சூழ்நிலையாகும். | உடன்படிககையில் குறிப்பிட்ட நிபந்தனைகக்கு இணங்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (iv) | பஸ்னாகொட நீர்த்தேக்க செயற்திட்டத்தினை அமுல்ப்படுத்துவதற்காக சீன கம்பனியுடன் ஏற்படுத்திக் கொள்ளப்பட்ட உடன்படிக்கை கால அட்டவணையை திருத்தம் செய்வதற்கு 2023 சனவரி 15 அந் திகதி சமர்ப்பித்த IR/2023/05 ஆம் இலக்க அமைச்சரவை விஞ்ஞாபனத்தின் மூலம் 2023 நவம்பர் 01 ஆந் | பெறுகை நிறுவனத்திற்கு கால நீடிப்பு செய்வதற்குரிய கிரயம் அல்லது விலை முரண்களுக்கான கிரயம் தொடர்பான உறுதிப்படுத்தலினை இச்சந்தர்ப்பத்தில் செய்யமுடியாது காணப்பட்டது. | காலநீடிப்பு செய்ததன் காரணமாக ஏற்படுகின்ற காலநீடிப்பு கிரயம் மற்றும் விலை முரண்களுக்கான கிரயத்தினை மேற்கொள்ள வேண்டி ஏற்படுவதில்லை என பெறுகை நிறுவனத்தினால் உறுதிப்படுத்துதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | திகதியிலிருந்து மூன்று மாதம் ஒப்பந்த காலத்தை நீடிப்பதற்கான அங்கீகாரம் எதிர்பார்க்கப்பட்டிருந்ததுடன் அதற்காக நிதி மற்றும் பொருளாதார ஸ்திரத்தன்மை அமைச்சினால் 2023 சனவரி 25 ஆந் திகதி சமர்ப்பித்த அவதானிப்புக்களின் பிரகாரம் நடவடிக்கை எடுப்பதற்கு உட்பட்டு 2023 சனவரி 30 ஆந் திகதி அங்கீகாரம் கிடைத்திருந்தது. மேற்கூறிய அவதானிப்புக்களின் பிரகாரம் காலநீடிப்புச் செய்ததன் காரணமாக காலத்தை நீடிப்புச் செய்யும் கிரயம் மற்றும் விலை முரண்களுக்கான கிரயத்தினை மேற்கொள்ள வேண்டியவதில்லை என பெறுகை நிறுவனத்தினால் உறுதிப்படுத்தப்பட வேண்டிய போதிலும் அவ்வாறான உறுதிப்படுத்தல் பெற்றுக்கொள்ளப்பட்டிருக்க வில்லை. செயற்திட்ட காலத்தினை நீடிப்பதற்காக செயற்திட்ட பணிப்பாளரால் நீர்ப்பாசன பணிப்பாளர் நாயகத்திற்கு விலாசமிடப்பட்ட 2023 திசெம்பர் 04 ஆந் திகதிய ID/BRP/06/01 ஆம் இலக்க கடிதத்தின் மூலம் 77 நாட்கள் காலநீடிப்பு செய்வதற்கு சிபாரிசு வழங்கப்பட்டிருந்தது. | | |
| (v) | உடன்படிக்கை கால அட்டவணையை திருத்தம் செய்வதற்காக நீர்ப்பாசன அமைச்சினால் 2023 சனவரி 15 ஆந் திகதி சமர்ப்பித்த அமைச்சரவை விஞ்ஞாபனத்தின் மூலம் நீடிப்புச் செய்யப்பட்ட காலப்பகுதிக்குள் அனைத்து நிர்மாண வேலைகளையும் | இது சம்பந்தமான கால நீடிப்பு 2024 யூன் 13 ஆந் திகதி வரை பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. தற்பொழுது வரை பௌதீக செயல்முன்னேற்றம் 81 சதவீதமாகும். | செயற்திட்டத்தின் நடவடிக்கைகளை பூர்த்திசெய்து பொதுமக்கள் பிரதிபலன்களை பெற்றுக்கொள்வதற்கு ஏற்பாடு செய்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | பூர்த்திசெய்து செயற்திட்டத்தினை முறைப்படியாக நிர்மாண வேலைகளின் உரிமையாளர்களுக்கு ஒப்படைத்தல் என்ற நிபந்தனைக்கு உட்பட்டு 2023 ஒக்தோபர் 31 ஆந் திகதிக்கு முன்னர் நீர்த்தேக்கத்திலிருந்து பஸ்னாகொட குடிநீர் செயற்திட்டத்திற்காக நீரினை வழங்குவதற்கு அத்தியவசியமான நிர்மாண வேலைகளை பூர்த்திசெய்வதற்கும் 2023 நவம்பர் 01 ஆந் திகதியிருந்து 03 மாத கால எல்லைக்குள் நீரினை வழங்குவதற்குத் தடையற்ற வகையில் மிகுதியான அனைத்து வேலைகளையும் பூர்த்திசெய்வதற்கும் சமர்ப்பிக்கப்பட்ட பிரேரணைகளுக்கு அங்கீகாரம் கிடைத்திருந்தது. அதற்கிணங்க 2024 சனவரி 31 ஆந் திகதியில் உள்ளவாறு செயற்திட்டத்தின் நடவடிக்கைகள் பூர்த்திசெய்யப்பட வேண்டி இருந்தும் அப்போது வரை 25 சதவீதமான வேலைகள் இன்னும் பூர்த்தி செய்ய வேண்டி காணப்பட்டிருந்தது. | | |
| (vi) | 2023 சனவரி 30 ஆந் திகதிய அமைச்சரவை தீர்மானத்திற்கு முரணாக EPC ஒப்பந்த உடன்படிக்கையின் கொள்கைகளுக்கு முரணாக பஸ்னாகொட நீர்த் தேக்க செயற்திட்டத்தினை அமுல்ப்படுத்துவதற்காக சீன கம்பனியுடன் நிர்மாண வேலைகளுக்கான மேலதிக கிரயத்தினை செலுத்துவது தொடர்பான | இச்செயற்திட்டத்தினை 18 மாதம் போன்ற மிகவும் குறுகிய கால எல்லைக்குள் வேலைகளை பூர்த்தி செய்வதற்கு எதிர்பார்த்ததன் காரணமாக தொடக்க உடன்படிக்கைக்கு இணங்க விலை முரண்களுக்காக உரிமை கோரல் வழங்கப்படவில்லை. நிலைமை அவ்வாறு இருந்த போதிலும் | 2023 சனவரி 30 ஆந் திகதிய மேற்கூறிய அமைச்சரவை தீர்மானத்திற்கு மற்றும் EPC உடன்படிக்கையின் கொள்கைகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்க வேண்டியதுடன் திறைசேரிக்கு எந்த மேலதிக சுமையினை சுமத்தாது நிதிகளை வழங்குதல் வேண்டும். |

உடன்படிக்கையின் நிபந்தனைகளை திருத்தம் செய்வதற்காக 2024 சனவரி 23 ஆந் திகதி அமைச்சரவை விஞ்ஞாபனம் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. அதன் மூலம் இலக்கம் 11 (IPC 11) இலிருந்து இலக்கம் 21 (IPC 21) வரையான இடைக்கால விலைப்பட்டியல்களின் கொடுப்பனவுகளில் உள்ளடக்கப்பட்ட விலை முரண்களுக்காக (Price Variation) ரூபா 1,085,860,158 இனை செலுத்துவதற்கும் அதற்கு தேவையான நிதி ஏற்பாட்டினை செயற்திட்டத்திற்கான நிதியினை வழங்குகின்ற தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையில் இருக்கின்ற நீர்ப்பாசன பணிப்பாளர் நாயகத்தினால் உறுதிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. அதன் போது அமைச்சரவை விஞ்ஞாபனத்தை அமைச்சரவைக்கு சமர்ப்பிப்பதற்கு முன்னர் நீர்ப்பாசன அமைச்சு உரிய நிறுவனத்திடமிருந்து தேவையான அங்கீகாரங்களை பெற்றுக்கொள்ள வேண்டும் என்பதற்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது. அது மாத்திரமின்றி திறைசேரிக்கு எந்த மேலதிக சுமையினையும் சுமத்தாது நீர்ப்பாசன அமைச்சினால் இது சம்பந்தமாக தேவையான நிதியை வழங்க வேண்டும் என சிபாரிசு செய்யப்பட்டிருந்தது.

காணிகளை சுவீகரிப்பதிலுள்ள தாமதங்கள், சீரற்ற காலநிலை போன்ற தவிர்க்க முடியாத காரணங்களால் இந்த உடன்படிக்கையின் காலத்தை அடிக்கடி நீடிப்பு செய்ய வேண்டி ஏற்பட்டது. உடன்படிக்கை செய்த காலத்திற்கு நேரொத்த வகையில் தற்பொழுது ரூபா பெறுமதி குறைப்பு செய்யப்பட்டதன் காரணமாக விலை முரண்களை வழங்குமாறு ஒப்பந்தக்காரரரின்ால் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளதுடன் அதற்கிணங்க மேலதிக நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இந்த நீர் செயற்திட்டத்தின் தொடக்க உடன்படிக்கையின் பிரகாரம் அது அமெரிக்க டொலர்களில் கொடுப்பனவு செய்யப்படுதல் வேண்டும். அதற்கிணங்க இந்த உப ஒப்பந்தத்திற்காக நிதிகள் உரிய அமெரிக்க டொலர்களில் ஒதுக்கீடு செய்யப்பட்டிருத்தல் வேண்டும். விலை முரண்களை கணிக்கும் போது இந்த ஒதுக்கீடு செய்யப்பட்ட அளவில் அதிகரிக்கின்ற மேலதிக ரூபா அளவு காணப்படுதல் வேண்டும். அதற்கிணங்க திறைசேரிக்கு மேலதிக சுமையினை சுமத்தாதிருத்தல் வேண்டும். எவ்வாறாயினும் இந்த

| | | | |
|---|---|---|---|
| | | விடயங்கள் சம்பந்தமாக உரிய தரப்பினர்களுடன் கலந்துரையாடப்பட்டுள் ளது. | |
| (vii) | அதன் போது அமைச்சரவையினால் சுட்டிக்காட்டப்பட்டுள்ள அறிவுறுத்தல்களின் பிரகாரம் அமைச்சரவையினால் நியமிக்கப்பட்ட நிரந்தர பெறுகைக் குழுவினால் அங்கீகரிக்கப்பட்டுள்ள தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவின் சிபாரிசின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படாது நி.பி 40, 72, 94(1) என்பவற்றில் காட்டப்படுகின்ற ஒழுங்கு விதிகளை கவனத்திற்கு எடுத்துக் கொள்ளாது விலை முரண்களுக்கு கொடுப்பனவு செய்வதற்கு முடியுமான வகையில் தொடக்க ஒப்பந்த உடன்படிக்கையின் iv ஆம் பகுதியின் 13.8 ஆம் பிரிவின் பிரகாரம் விலை முரண்களுக்கு கொடுப்பனவு செய்வதில்லை என்ற நிபந்தனையை திருத்தம் செய்து 2024 ஏப்ரல் 16 ஆந் திகதி 02 திருத்தம் செய்து திருத்திய ஒப்பந்த உடன்படிக்கைகள் கையொப்பமிடப்பட்டிருந்த ன. அதற்கிணங்க முழுக் கிரய மதிப்பீட்டில் 47 சதவீதம் அல்லது ரூபா 1,085,860,158 தொகையினை மிகையாகச் செலுத்த வேண்டி ஏற்பட்டிருந்ததுடன் இதற்காக தேசிய நீர்வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையின் இணக்கப்பாடு கிடைத்திருக்கவில்லை. அதற்கிணங்க ரூபா 1,085,860,158 தொகையினை செலுத்தும் பொறுப்பு நீர்ப்பாசன | தேசிய நீர் வழங்கல் சபைக்கு தெரியப்படுத்தப்பட்டுள் ளது. அவர்களின் பிரதிநிதி தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவின் ஒரு அங்கத்தவராக நடவடிக்கை எடுத்துள்ளார். | திறைசேரிக்கு எந்த மேலதிக சுமையும் சுமத்தப்படாது நிதி வழங்கப்படுதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | அமைச்சிற்கு ஒப்படைக்கப்பட்டிருந்தது. | | |
| (viii) | தொடக்க ஒப்பந்த உடன்படிக்கையின் சாதாரண நிபந்தனையின் (Fidic- first edition 1999 EPC/Turnkey Project) பிரகாரம் செயற்திட்டத்தினை முடிவுறுத்தும் அறிக்கையினை சமர்ப்பித்ததன் பின்னர் ஒப்பந்த நிறுத்திவைக்கும் பணம் விடுவிக்கப்பட வேண்டும் என்ற நிபந்தனையை திருத்தம் செய்து 2024 சனவரி 31 வரை அறவீடு செய்துள்ள நிறுத்திவைத்தல் பணம் செயற்திட்டத்தின் நடவடிக்கைகளை முடிவுறுத்துவதற்கு முன்னர் செலுத்துவதற்கு முடியுமான வகையில் 2024 ஏப்ரல் 16 ஆந் திகதி திருத்திய ஒப்பந்த உடன்படிக்கையில் கையொப்பமிடப்பட்டிருந்தது. அதற்கிணங்க செயற்திட்டத்தின் நடவடிக்கைகள் 25 சதவீதம் மிகுதியாக இருந்தும் ரூபா 104,667,237 தொகையான நிறுத்திவைத்தல் பணத்தை ஒப்பந்தக்காரர் பெற்றுக்கொள்வதற்கான வாய்ப்பு கிடைத்திருந்தது. | தற்பொழுது பொருட்களின் விலை அதிகரித்துள்ளதனால் ஒப்பந்தக்காரர் நிதி ரீதியாக சிக்கலுக்கு உள்ளடக்கியுள்ளார் என தெரிவித்து அதற்கான பரிகாரமாக நிறுத்திவைத்தல் பணத்தை விடுவித்துக்கொள்வதற்கு வேண்டுகோள் விடுவிக்கப்பட்டுள்ளது. நிறுத்திவைத்தல் பணத்திற்காக வங்கிப் பிணையை சமர்ப்பிப்பதற்கு அவரினால் இணக்கப்பாடு தெரிவிக்கப்பட்டது. | முடிவுறுத்தும் அறிக்கையை சமர்ப்பித்ததன் பின்னர் ஒப்பந்த நிறுத்திவைத்தல் பணத்தை விடுவித்தல் வேண்டும். |
| (ix) | 2016 மார்ச் 21 ஆந் திகதிய புரிந்துணர்வு உடன்படிக்கையின் 11 ஆம் பிரிவு மற்றும் 2019 யூன் 12 ஆந் திகதிய ஏற்படுத்திக் கொண்ட புரிந்துணர்வு உடன்படிக்கையின் D2 பந்தியின் பிரகாரம் நீர்த்தேக்கத்தின் கீழேயுள்ள பள்ளத்தாக்கில் அமைந்துள்ள மொரண மற்றும் கெடவெல நிர்ப்பாசன முறைமையில் நீர் வீணாகுவதனைக் குறைப்பதற்காக அந்த நீர்ப்பாசன முறைமையை | இதுவரை நீர்ப்பாசனத் திணைக்களத்திற்கு நீர் வழங்கல் சபையினால் தேவையான நிதி ஏற்பாடு வழங்கப்படவில்லை. | நீர் விணாகிச் செல்வதனைக் குறைப்பதற்காக தாமதமின்றி நீர்ப்பாசன முறைமையை மேம்படுத்துதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | மேம்படுத்துவதற்காக நீர்ப்பாசனத் திணைக்களத்திற்கு ரூபா 100 மில்லியனை வழங்குவதற்கு தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை இணக்கப்பாட்டினை வழங்கியிருந்தும் அச்செயற்பாடுகள் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை. | | |
| (x) | செயற்திட்ட ஆளணியினர்களாக நீர்ப்பாசனத் திணைக்களத்திற்கும் நீர்ப்பாசன அமைச்சிற்கும் இணைத்துக்கொள்ளப்பட்ட உத்தியோகத்தர்கள் விடுவிக்கப்பட்டிருந்தனர். அவ்வாறு விடுவிக்கப்பட்ட உத்தியோகத்தர்களுக்கு செலுத்தப்படுகின்ற சம்பளங்கள் மற்றும் பொதுச் செயற்பாட்டு செலவுகள் 2019 யூன் 12 ஆந் திகதிய புரிந்துணர்வு உடன்படிக்கையின் D3 பிரிவின் கீழ் நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச சபையினால் செலுத்தப்படுகின்ற 06 சதவீத ஒப்பந்த நிருவாக மற்றும் கண்காணிப்பு கிரயத்திலிருந்து அறவிட்டு திரண்ட நிதியத்திற்கு செலவுவைக்கப்பட்டிருக்கவில்லை. | பஸ்னாகொட குடிநீர் வழங்கும் பிரதான செயற்திட்டம் வெளிநாட்டு கடனின் கீழ் அமுல்ப்படுத்தப்படுகின்றது. நீர்ப்பாசனத் திணைக்களத்தினால் பஸ்னாகொட நீர்த்தேக்கத்தினை நிர்மாணித்து கண்காணிப்பதன் மூலம் செலவினைக் குறைப்பதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. அக்குறிக்கோளானது நீர்ப்பாசன திணைக்களத்தினால் தற்பொழுது இருக்கின்ற உத்தியோகத்தர்களைப் பயன்படுத்தி நிறைவேற்றுவதற்கு அக்காலப்பகுதியின் போது தீர்மானிக்கப்பட்டுள்ளது. இக்காரணத்தினால் இச்செயற்பாடு நீர்ப்பாசனத் திணைக்கத்தினால் தற்பொழுது மேற்கொள்ளப்பட்டு வருகின்ற நிர்மாண செயற்பாடுகளின் போது பயன்படுத்தப்படுகின்ற 6 சதவீதமான நிருவாகச் செலவுகளின் அளவே இச்செயற்பாடுகளுக்கும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதன் மூலம் உத்தியோகத்தர்களுக்கு சம்பளத்தை | திணைக்களம் மற்றும் நீப்பாசன அமைச்சு நிதி ஏற்பாட்டிலிருந்து செலுத்தப்படுகின்ற சம்பளம் மற்றும் பொதுச் செயற்பாட்டு கிரயம் ஒப்பந்த நிருவாக மற்றும் கண்காணிப்பு கிரயத்திலிருந்து அறவிட்டு திரண்ட நிதியத்திற்கு செலவு வைக்கப்படுதல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| | செலுத்துவதற்கு எதிர்பார்க்கப்படவில்லை. 2024 யூன் மாதமளவில் நீர்ப்பாசன திணைக்களத்திலிருந்து பஸ்னாகொட நீர்த்தேக்க செயற்திட்ட அலுவலகத்திற்கு இணைத்துக்கொள்ளப்பட்ட ஆளணியினர்களுக்கான மாதாந்த சம்பளம் மற்றும் படிகளின் கிரயம் ரூபா 18,960,818 ஆகும். | |

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 எதிர்பார்த்த பூர்த்தியாக்கல் மட்டத்தினைப் பெற்றுக்கொள்ளாமை**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| (அ) சியம்பலான்கமுவ ஓயாவிலிருந்து மஹகல்கமுவ குளத்தின் போசன கால்வாய்களை நிர்மாணிக்கும் செயற்திட்டம் | | |
| (i) 2012 - 2014 காலப்பகுதியில் அதாவது 03 ஆண்டுகளுக்குள் பூர்த்திசெய்வதற்கு எதிர்பார்க்கப்படடிருந்ததுடன் 09 ஆண்டுகள் தாமதித்திருந்தும் இன்றுவரை பூர்த்திசெய்யப்பட்டிருக்கவில்லை. 2014 - 2023 காலப்பகுதியில் செயற்திட்டத்திற்காக ரூபா 580 மில்லியன் நிதி ஏற்பாடு வழங்கப்பட்டு அதில் ரூபா 375 மில்லியன் அல்லது 64 சதவீதம் மாத்திரம் செலவு செய்யப்பட்டிருந்தது. முழுக்கிரய மதிப்பீடு அங்கீகரிக்கப்படாது குருனாகல் நீர்ப்பாசன பணிப்பாளரால் அவ்வப்போது மதிப்பீடு அங்கீகரிக்கப்பட்டு திட்டமிடப்படாது 14 கிலோமீற்றர் நீளத்திற்கு நிர்மாணிப்பதற்கு உத்தேசிக்கப்பட்ட கால்வாயில் இடத்துக்கு இடம் 2 கிலோ மீற்றர் | செயற்திட்டத்திற்காக முழுக் கிரய மதிப்பீடு உள்ளது. தொடக்க மதிப்பீடானது 2011 ஆம் ஆண்டில் அப்போது காணப்பட்ட விலைகளின் கீழ் தயாரித்து செயற்திட்டத்தின் வேலைகள் 2014 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டது. 2014 ஆம் ஆண்டிலிருந்து 2023 ஆம் ஆண்டுவரை பகுதி பகுதியாக நிதி ஏற்பாடு கிடைத்ததனால் அச்செயற்பாட்டினை மேற்கொள்ளும் போது விலை முரண்கள் தொடர்பாக கவனம் செலுத்தாமை இதன் பிரதான குறைபாடாகும். தற்பொழுது மதிப்பீட்டினை | முழுக்கிரய மதிப்பீடும் அங்கீகரிக்கப்பட்டு முறையான மேற்பார்வையின் அடிப்படையில் செயற்திட்டத்தினை பூர்த்தி செய்வதற்கு கவனம் செலுத்துதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | அளவில் அகழ்தல்கள் மேற்கொள்வதற்காக மேற்கூறிய கிரயம் செலவு செய்யப்பட்டிருந்த போதிலும் ஒரு பகுதி அல்லது கால்வாய் முறையாக தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. அதற்கிணங்க செலவு செய்த ரூபா 375 மில்லியன் செலவில் எந்த பிரதிபலனும் இன்றுவரை தேசிய பொருளாதாரத்திற்கு சேர்த்துக்கொள்ளப்பட்டிருக்க வில்லை. | திருத்துதல் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.<br><br>காணப்படுகின்ற விலைகளின் கீழ் இச்செயற்பாட்டினை நிறைவேற்றுவதற்குச் சென்று உத்தேச வேலைகளை முடிவுறுத்துவதற்கு முடியாத நிலைமைக்கு மாறியுள்ளது. | |
| (ii) | திணைக்களம் சொந்த ஊழியர்களையும் உபகரணங்களையும் பயன்படுத்தி நிறைவேற்றுகின்ற பெறுகை முறைமையின் கீழ் (Force Account) அமுல்ப்படுத்தப்பட்டுள்ள இச்செயற்திட்டத்திற்காக இன்றுவரை அங்கீகரிக்கப்பட்டுள்ள மதிப்பீடுகள் - மற்றும் அதன் கீழ் நிறைவேற்றப்பட்ட செயற்பாடுகள் மற்றும் சான்றுபடுத்திய வேலைகளின் பெறுமதியை முறைப்படியாக அடையாளங்காண்பதற்கு முடியுமான வகையில் கோவைகள் பேணப்பட்டிருக்கவில்லை. | செயற்திட்டத்தின் வேலைகள் நிறைவேற்றப்பட்டுள்ள முறைமை சம்பந்தமான பரீட்சிப்பு அறிக்கை கிடைத்ததன் பின்னர் மேலதிக நடவடிக்கை மேற்கொள்வதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. | அங்கீகரித்த செயற்பாடுகள் மற்றும் சான்றுபடுத்திய வேலைகளின் பெறுமதியை அடையாளங்காணக்கூடிய வகையில் கோவைகள் பேணப்படுதல் வேண்டும். |
| (iii) | மேற்கூறிய செயற்திட்டத்தின் சாத்தியவள ஆய்வு அறிக்கையின் பிரகாரம் செயற்திட்டத்தினை அமுல்படுத்துவதன் மூலம் பளுகடவலயில் 800 ஏக்கர்கள், மஹகடுவவில் 400 ஏக்கர்கள், புதிய காணிகள் 200 ஏக்கர்கள் என்பனவாக 1400 ஏக்கர்களாக இருந்த போதிலும் அதற்கிணங்க பாசன நீரினை வழங்குவதற்கான காணிகள் இன்றுவரையேனும் அடையாளங்காணப்பட்டிருக்க வில்லை. | செயற்திட்டத்தினை பூர்த்திசெய்யாமையின் காரணமாக உத்தேச பிரதேசம் வரை நீரினை வழங்க முடியாதுள்ளது. | சாத்தியவள ஆய்வு அறிக்கையின் பிரகாரம் பாசன காணிகளை அடையாளங்கண்டு நீரினை வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**3.2 எதிர்பார்த்த பிரதிபலன்கள் (Outcome) பெற்றுக்கொள்ளப்படாமை**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| (அ) தெதுருஓயா பல்நோக்க அபிவிருத்தி செயற்திட்டத்தின் கீழ் 1.5 மெகாவோட் நீர்மின் நிலையத்தினை நிர்மாணித்தல் | | |
| (i) தெதுரு ஓயா நீர்த் தேக்கத்தினை நிர்மாணிப்பதன் கீழ் நீர்மின் நிலையத்தினை நிர்மாணிப்பதற்காக ரூபா 249 மில்லியன் ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தது. அத்தொகையானது கிரய மதிப்பீட்டினைத் திருத்தம் செய்யும் போது 1.5 மெகாவோட் நீர் மின்சாரத்தினை உருவாக்கும் மின்நிலையத்தினை நிர்மாணிப்பதற்காக போதியளவான பகுப்பாய்வினையும் நியாயமான காரணத்தினையும் காட்டாது நீர்மின் நிலையத்திற்கான நிதி ஏற்பாடு ரூபா 50 மில்லியனாகக் குறைக்கப்பட்டிருந்தது. | இச்சிறிய அளவு நீர்மின் நிலையத்தினை நிர்மாணிப்பதற்காக தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டின் பிரகாரம் இந்த நிர்மாண வேலைக்காக ரூபா 50 மில்லியன் நிதி ஏற்பாடு ஒதுக்கீடு செய்யப்பட்டது. எனினும் நீர்மின் நிலையத்தினை நிர்மாணித்தல் மற்றும் பராமரிப்பதற்குத் தேவையான தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள் நீர்ப்பாசனத் திணைக்களத்திடம் இல்லாததனால் இம்மின் நிலையத்தினை நிர்மாணிப்பதற்கு இத்திணைக்களத்திற்கு இயலுமை இல்லை. | போதியளவான பகுப்பாய்வு இல்லாது அம்மின் நிலையத்தினை நிர்மாணிப்பதனை கைவிடுவது தொடர்பாக மீண்டும் விசாரித்துப் பார்த்தல் வேண்டும். |
| (ii) தெதுரு ஓயா பல்நோக்கு அபிவிருத்தி செயற்திட்டத்தின் கீழ் நீர்மின் நிலையத்தினை செயற்படுத்துவதற்காக நீர்ப்பாசன பணிப்பாளர் நாயகத்தினால் ஒரு தனியார் கம்பனியுடன் 2017 ஒக்தோபர் 13 ஆந் திகதி புரிந்துணர்வு உடன்படிக்கையினை மேற்கொள்ளும் போது அமைச்சரவையின் கொள்கை ரீதியான அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை. அதன் போது உரிய உடன்படிக்கையின் சட்டரீதியான தன்மை மற்றும் நிபந்தனைகளின் இணக்கப்பாடு தொடர்பாக | மின்சார அமைச்சின், மின்சார சபையின் மற்றும் மின்சார திணைக்களத்தின் உத்தியோகத்தர்களின் பங்குபற்றலில் நடைபெற்ற கூட்டத்தின் போது தீர்மானிக்கப்பட்டவாறு இலங்கை மின்சார சபையின் கீழ் காணப்படுகின்ற தனியார் கம்பனிக்கு மின்வலு அமைச்சின் செயலாளரின் அங்கீகாரத்தின் பிரகாரம் இச்சிறிய அளவிலான நீர்மின் | புரிந்துணர்வு உடன்படிக்கையினை மேற்கொள்ளும் போது அமைச்சரவையின் கொள்கை ரீதியான அங்கீகாரம் உரிய உடன்படிக்கையின் சட்டரீதியான தன்மை மற்றும் நிபந்தனைகளின் இணக்கப்பாடு தொர்பாக சட்டமா அதிபரின் சிபாரிசு பெற்றுக்கொள்ளப்படுதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | சட்டமா அதிபர் திணைக்களத்தின் சிபாரிசினைப் பெற்றுக்கொள்ளாததுடன் நீர்ப்பாசன திணைக்களம் அல்லது நீர்ப்பாசன அமைச்சின் மூலம் உடன்படிக்கை உறுதிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | நிலையத்தை நிர்மாணித்தல் மற்றும் செயற்படுத்துதல் ஒப்படைக்கப்பட்டுள்ளது. | |
| (iii) | மேற்கூறிய புரிந்துணர்வு உடன்படிக்கையின் முதலாவது மற்றும் ஆறாவது பிரிவுகளின் பிரகாரம் மின்நிலையத்தினை நிர்மாணிக்கும் போது தனியார் கம்பனிக்கு அதனை அடமானமாக வைத்து சம்பத் வங்கியிடமிருந்து கடனைப் பெற்றுக்கொள்வதற்கு முடியும் எனவும் நிபந்தனை உள்ளடக்கப்பட்டிருந்தது. மேற்கூறிய நிபந்தனை அரசாங்ககத்தின் காணிக் கட்டளைச் சட்டத்திலுள்ள ஏற்பாடுகளுக்கு முரணானதுடன் எதிர்காலத்தில் நீர்மின் நிலையம் அமைந்துள்ள காணியின் உரிமை அரசாங்கத்திடமிருந்து கைமாறும் ஆபத்தும் உருவாகியிருந்தது. | நிர்மாண வேலைகளுக்கான கிரயத்தை வழங்குவதற்காக கடன் பெற்றுக்கொள்ளப்பட்டது எனவும் கடனை திருப்பிச் செலுத்த தவறினால் சம்பத் வங்கிக்கு உரிய மின்நிலையத்தின் செயற்பாடு கடனை தீர்த்துவைக்கும் வரை பொறுப்பேற்கப்படும் எனவும் புரிந்துணர்வு உடன்படிக்கையில் குறிப்பிடப்பட்டுளளது. அவ்வாறு பொறுப்பேற்கப்பட்டாலே இந்த புரிந்துரணர்வு உடன்படிக்கையின் விடயங்கள் அமுல்ப்படுத்தப்படும் என குறிப்பிடப்பட்டுள்ளது. அதற்கிணங்க மின்நிலையத்தின் உரிமையை ஒப்படைத்தல் சம்பந்தமான பிரிவு உள்ளடக்கப்படாததனால் காணியின் உரிமை அரசாங்கத்திடமிருந்து வெளியாகுவதற்கான வாய்ப்பு இல்லை. எனினும் இது சம்பந்தமாக மேலும் நடவடிக்கை எடுப்பதற்கு அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளன. | புரிந்துணர்வு உடன்படிக்கையினை மேற்கொள்ளும் போது அமைச்சரவையின் கொள்கை ரீதியான அங்கீகாரம் உரிய உடன்படிக்கையின் சட்டரீதியான தன்மை மற்றும் நிபந்தனைகளின் இணக்கப்பாடு தொடர்பாக சட்டமா அதிபர் திணைக்களத்தின் சிபாரிசு பெற்றுக்கொள்ளப்படுதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (iv) | இந்த புரிந்துணர்வு உடன்படிக்கையின் 7.1, 7.2, 8 மற்றும் 9 ஆம் பிரிவுகளில் உள்ளடக்கப்பட்ட பின்வரும் நிபந்தனைகள் நிதிப்பிரமாணங்களின் ஏற்பாடுகளுக்கு முரணானதாகும். | புரிந்துணர்வு உடன்படிக்கையில் குறிப்பிட்ட நிதிப்பிரமாணங்களுக்கு முரணான 7.1, 7.2, 8 மற்றும் 9 ஆம் பிரிவுகளை சரிசெய்வதற்கு அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளன. | புரிந்துணர்வு உடன்படிக்கைகளை மேற்கொள்ளும் போது அமைச்சரவையின் கொள்கைரீதியான அங்கீகாரம், உரிய உடன்படிக்கையின் சட்டரீதியான தன்மை மற்றும் நிபந்தனைகின் இணக்கப்பாடு என்பன தொடர்பாக சட்டமா அதிபரின் சிபாரிசு பெற்றுக்கொள்ளப்படுதல் வேண்டும். |
| | **(i) 7.1 ஆம் பிரிவு**<br><br>நியம தரமான மின்வலுவினை கொள்வனவு செய்வதற்கு இணங்க மின்சார சபையினால் தோற்றுவிக்கின்ற மின்வலு கொள்வனவு செய்யப்பட்டது. வருமானத்தில் 15 சதவீதம் மாதாந்த அடிப்படையில் கணிப்பிட்டு அரசிறையினை செலுத்துவதற்கு தனியார் கம்பனி இணங்கி கொண்டுள்ளது. | | |
| | **(ii) 7.2 ஆம் பிரிவு**<br><br>தெதுரு ஓயா நீர்த்தேக்கத்தினை பராமரிப்பது சம்பந்தமாக எந்தவொரு செலவினையும் நீர்ப்பாசன பணிப்பாளரினால் (குருனாகல்) அல்லது நீர்ப்பாசன திணைக்களத்தின் உயர்மட்ட உத்தியோகத்தர்களினால் அங்கீகரிக்கப்பட்ட 7.1 ஆம் பிரிவில் சேர்த்துக்கொள்ளப்பட்ட திரண்ட அரசிறையினை கொடுப்பனவு செய்யும் | | |

உச்ச அளவு வரை கொடுப்பனவினை அங்கீகரிக்கின்ற தரப்பினர்களுக்கு மீளச் செலுத்தப்படும்.

**(iii) 8 ஆம் பிரிவு**

மேற்கூறிய 7.1 ஆம் பிரிவு அல்லது மேலேயுள்ள 7.2 ஆம் பிரிவின் பிரகாரம் செலவுக் கொடுப்பனவுகளை தீர்த்துவைத்ததன் பின்னர் அல்லது நிர்ணயிக்கப்பட்டுள்ள மிகுதிப் பணம் இருக்குமாயின் நீர்ப்பாசன திணைக்களத்தின் வைப்புக் கணக்கிற்கு எடுத்துக்கொள்ளுதல் வேண்டும்.

**(iv) 9 ஆம் பிரிவு**

செயற்திட்டத்தின் ஆயுள்காலம் வரை மெஸ்டொக் மற்றும் இன்டேக் கட்டமைப்பிற்குரிய எந்தவொரு பராமரிப்பு மற்றும் திருத்தம் செய்யும் நடவடிக்கை தனியார் கம்பனியால் மேற்கொள்ளப்படும்

(v) நீர்த்தேக்கத்தை நிர்மாணிக்கும் பிரதான குறிக்கோள் விவசாய நடவடிக்கைகளுக்காக நீரினை வழங்குவதாக இருந்த போதிலும் மேற்கூறிய புரிந்துணர்வு உடன்படிக்கையின் 4 மற்றும் 5 ஆம் பிரிவுகளின் பிரகாரம் உச்சளவு மின்சாரத்தினை உருவாக்கக்கூடிய வகையில் நீரினை விடுவிப்பதற்கு நீர்ப்பாசன திணைக்களம் உதவி வழங்க வேண்டும் என்ற நிபந்தனை உள்ளடக்கப்பட்டுள்ளதனால் மேற்கூறிய குறிக்கோளுக்காக 4.5 ஆம் பிரிவிற்கு இணங்க நீர்பாசன நடவடிக்கைகளுக்காக வழங்கப்படுகின்ற நீர் மற்றும் சிந்திய நீரினை பயன்படுத்தி உச்ச இயலளவில் மின்சாரத்தினை உருவாக்குதல் என குறிப்பிடப்பட்டுள்ளது. 5 ஆம் பிரிவின் பிரகாரம் தாழ்ந்த பகுதியிலுள்ள விவசாயத்திற்கு தடைகள் ஏற்படாத வகையில் மின்சாரத்தினை தோற்றுவித்தல் என பஸ்களை புரிந்துணர்வு உடன்படிக்கையினை மேற்கொள்ளும் போது அமைச்சரவையின் கொள்கைரீதியான அங்கீகாரம் உரிய உடன்படிக்கைகளின் சட்டரீதியான தன்மை மற்றும் நிபந்தனைகளின் இணக்கப்பாடு தொடர்பாக சட்ட மா அதிபரின் இக்கப்பாடு பெற்றுக்கொள்ளப்படுதல் வேண்டும்.

| | | | |
|---|---|---|---|
| | முன்னுரிமை வழங்குவது தொடர்பாக பாதகமான தாக்கம் ஏற்பட்டிருந்தது. | குறிப்பிடப்பட்டுள்ளது. நீர் மின்சாரத்தினை தோற்றுவிப்பதற்காக நீரினை விடுவிக்கும் தொழில்நுட்பம் மற்றும் விவசாயத்திற்கு நீரினை விடுவிக்கும் தொழில்நுட்பத்தினை பொருத்தமான வகையில் மேற்கொண்டு உச்ச அளவு வினைத்திறனுடன் மின்சாரத்தினை தோற்றுவிக்கும் குறிக்கோள் என அப்பிரிவுகளில் குறிப்பிடப்பட்டுள்ளது. இது இரு தரப்பினர்களாலும் சமரசமாக புரிந்துணர்வுடன் மேற்கொள்ள வேண்டிய செயற்பாடு என்பதனால் அவ்வாறு மேற்கொள்வது சம்பந்தமாக அப்பிரிவின் மூலம் தெளிவுபடுத்தப்பட்டுள்ளது. மின்சாரத்தை தோற்றுவிக்கின்ற தீர்மானத்தின் பிரகாரம் இந்த மின் நிலையத்தின் செயற்பாடுகளை மேற்கொள்வது கண்டிப்பானது என்பதனால் அதற்காக தீர்மானம் எடுப்பதற்கு ஒரு குழு நியமிக்கப்பட்டுள்ளது. நீர்த்தேக்கத்திலிருந்து விடுவிக்கப்படுகின்ற நீரின் மூலம் உச்ச அளவு மின் வலுவினைத் தோற்றுவிப்பதற்காக இப்பிரிவு உள்ளடக்கப்பட்டுள்ளது. | |
| (vi) | கிரயப் பிரதிபலன் தொடர்பான பகுப்பாய்வின்றியும் திறைசேரியின் அங்கீகாரம் | இது தொடக்கத்தில் தயாரிக்கப்பட்ட புரிந்துணர்வு உடன்படிக்கையானது | மின்பிறப்பாக்கி வருமானம் தாமதிப்பதற்கான தாமதக் கட்டணம் |

| | | | |
|---|---|---|---|
| | இன்றியும் மின்பிறப்பாக்கத்தின் மூலம் உழைக்கின்ற வருமானத்தில் 15 சதவீதத்தினை நீர்ப்பாசனத் திணைக்களத்திற்கு செலுத்த வேண்டும் என்ற நிபந்தனை உள்ளடக்கப்பட்டிருந்தது. மேலும் கட்டணம் செலுத்துவது தாமதமடையுமாயின் அதற்காக அறவிடப்படுகின்ற வட்டி அல்லது தாமதக் கட்டணம் முதலிய விடயங்கள் உடன்படிக்கையில் உள்ளடக்கப்பட்டிருக்காததுடன் அதன் காரணமாக மேற்கூறிய உடன்படிக்கை அரசாங்கத்திற்கு பாதகமானதாகும். | டன் அதற்கான முதலீடு மற்றும் செயலாற்றலினை கருத்தில்கொண்டு நாளதுவரையாக்குவதற்கு தேவையான ஏற்பாடு 10 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ளது. அதற்கிணங்க நீர்ப்பாசனப் பணிப்பாளர் (குருனாகல்) மற்றும் நீர்ப்பாசன பணிப்பாளர் (நீர் முகாமைதத்துவம்) ஆகியோருக்கு அதற்காக தேவையான நடவடிக்கை எடுக்குமாறு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. | தொடர்பான புதிய உடன்படிக்கை மேற்கொள்ளப்படுதல் வேண்டும். |
| (vii) | 2021 சனவரியிலிருந்து 2022 திசெம்பர் வரையான காலத்தில் நீர் மின் நிலையத்திலிருந்து கிடைத்த ரூபா 3,085,051 வருமானம் திரண்ட நிதியத்திற்குச் செலுத்தப்படாததுடன் அப்பணத்தில் 2021 சனவரியிலிருந்து 2022 திசெம்பர் வரையான காலத்திற்காக வாரியபொல பிரதேச நிர்ப்பாசன பொறியியலாளர் அலுவலகத்தில் ரூபா 3,085,051 தொகையான தொலைபேசிப் பட்டியல் நீர்ப்பட்டியல் மற்றும் மின்சாரப்பட்டியல்களைச் செலுத்துவதற்காக ஒரு தனியார் கம்னிக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. 2023 யூன் 13 ஆந் திகதி தனியார் கம்பனியிடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட ரூபா 2,000,000 பொது வைப்புக் கணக்கில் நிறுத்தி வைக்கப்பட்டு அதில் ரூபா 1,968,532 தொகை மீளாய் வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு அலுவலக தொலைபேசி, நீர்ப்பட்டியல் | பதில் சமர்ப்பிக்கப்படவில்லை. | திரண்ட நிதியத்திற்கு செலவு வைக்கப்பட வேண்டிய வருமானத்தை செலவு செய்வதற்காக ஈடுபடுத்தாதிருத்தல். |

மற்றும் மின்சாரப் பட்டியல் தீர்த்துவைப்பதற்கு செலவு செய்யப்பட்டிருந்தது.

**(ஆ) யான்ஓயா நீர்த்தேக்க செயற்திட்டம்**

| | | | |
|---|---|---|---|
| (i) | யான் ஓயா நீர்த்தேக்க செயற்திட்டம் 2012 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டு 2021 ஆம் ஆண்டில் முடிவடைவதற்கு திட்டமிடப்பட்டிருந்ததுடன் 2023 திசெம்பர் 31 வரை காலம் நீடிக்கப்பட்டிருந்தது. 2011 ஆம் ஆண்டிலிருந்து 2023 திசெம்பர் 31 வரை ரூபா 39,375 மில்லியன் இச்செயற்திட்டத்திற்காக செலவு செய்யப்பட்டிருந்தது. பெரிய அளவிலான அபிவிருத்தி செயற்திட்டங்களை மீண்டும் தந்திரோபாயபடுத்துதல் மற்றும் துரிப்படுத்துதல் குழுவின் (RAMP) சிபாரிசின் அடிப்படையில் செயற்திட்டத்தின் கீழ் இஸ்ஸன் குளத்தின் அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காக மாத்திரம் முன்னுரிமை வழங்கி அதன் நிர்மாண நடவடிக்கைகளைப் பூர்த்திசெய்து உரிய குடும்பங்களை உடன்டியாக குடியிருக்கச் செய்வதற்கு நடவடிக்கை எடுத்து ஏனைய செயற்பாடுகள் தற்காலிகமாக நிறுத்தப்பட வேண்டிய போதிலும் முறையான அங்கீகாரத்தினைப் பெற்றுக்கொள்ளாது செயற்திட்டம் அமுல்ப்படுத்தப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் இன்றுவரை செயற்திட்டம் நிர்ணயிக்கப்பட்டவாறு பூர்த்திசெய்யாமையின் காரணமாக மேற்கொள்ளப்பட்ட ரூபா 39,375 மில்லியன் கிரயத்திற்கு போதியளவான பொருளாதார நலன்கள் தேசிய பொருளாதாரத்திற்கு | செயற்திட்டத்தின் பிரதிபலன்கள் சம்பந்தமாக தயாரிக்கப்பட்ட அறிக்கையின் பிரகாரம் கமத்தொழில் நடவடிக்கைகளுக்காக பயன்படுத்தப்பட்ட காணியின் அளவு, செயற்திட்டம் ஆரம்பிப்பதற்கு முன்னைய மற்றும் பின்னைய நிலையை காட்டுவதுடன் அதற்கிணங்க சிறுபோகத்தில் பயிர்ச்செய்கை 19,787 ஏக்கர்களாலும் பெரும்போகத்தில் பயிர்செய்கை 5,382 ஏக்கர்களாலும் அதிகரித்துள்ளது. இதன் மூலம் கிடைக்கின்ற பொருளாதார நலன்கள் இலகு முறைமை கணிக்கப்படுமாயின் னரு ஏக்கருக்கு 115 புசல் நெல் கிடைக்கும் என்ற அடிப்படையில் மற்றும் நெல்லின் விலை ரூபா 80 ஆக கணிக்கப்படுமாயின் வருடாந்தம் ரூபா 5,000 மில்லியனுக்கு அண்மித்த தொகை கிடைக்கும். இதற்கு மேலதிகமாக இச்செயற்திட்டத்திலிருந்து கிடைக்கின்ற நிதிரீதியிலான பிரதிபலன்களும் குறிப்பிடத்தக்க அளவில் உள்ளன. | செயற்திட்டத்தின் கீழுள்ள இஸ்ஸன் குளத்தின் அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காக முன்னுரிமை வழங்குவதற்கு உரிய குடும்பங்களை உடனடியாக குடியிருக்கச் செய்வதற்கும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | சேர்த்துக்கொள்ளப்பட்டிருக்க வில்லை. | | |
| (ii) | பெரிய அளவிலான செயற்திட்டங்களை முடிவுறுத்தியதன் பின்னர் பொறுப்பேற்கும் போது பின்பற்றப்பட வேண்டிய நிரந்தர நடைமுறையினைக் காட்டும் அறிவுறுத்தல்களை வழங்குதல், செயற்திட்டத்திலிருந்து எதிர்பார்த்த பிரதிபலன்களை அடைந்துகொள்வது சம்பந்தமாக பகுப்பாய்வு ரீதியான அறிக்கையினைத் தயாரித்து பின்தொடர் நடவடிக்கை எடுத்தல், காணியை சுவீகரித்தல், குடியமர்த்துதல், இழப்பீட்டினைச் செலுத்துதல் ஆகிய நடவடிக்கைகளின் அனைத்து தகவல்களையும் உள்ளடக்கிய ஒரு தகவல் முறைமையை பேணுதல் மற்றும் ஆவணங்களை முறையாகப் பேணுதல், காணிகளை சுவீகரித்தல், மீளக்குடியமர்த்துதல் மற்றும் இழப்பீட்டினைச் செலுத்துதல் ஆகிய நடவடிக்கைகளை துரிதமாக பூர்த்திசெய்தல், EPC ஒப்பந்த உடன்படிக்கையின் பிரகாரம் ஒப்பந்தக்காரரினால் பூர்த்திசெய்ய வேண்டிய அனைத்து வேலைகளும் பூர்த்திசெய்யப்படாதிருந்தும் செயலாற்றல் சான்றிதழினை வழங்கி கொடுப்பனவுகளை சான்றுபடுத்திய உத்தியோகத்தர்கள் சம்பந்தமாக தாபனவிதிக் கோவையின் II ஆம் தொகுதியின் XLVIII ஆம் அத்தியாயத்தின் 29 ஆம் பிரிவின் கீழ் ஒழுக்காற்று நடவடிக்கைகளைப் பின்பற்றுதல், செயலாற்றல் சான்றிதழினை வழங்கியதன் பின்னர் வேலைத் தளத்திலிருந்து முறைப்படியாக நீங்கிக்கொள்ளாது பயன்படுத்துகின்ற அரசாங்க | விசாரித்துள்ள சில விடயங்கள் சம்பந்தமாக திணைக்கள மட்டத்தில் பதில் வழங்குவது சிக்கலானதாகும். இந்த அறிக்கையில் விசாரித்துள்ள சில விடயங்கள் சம்பந்தமான விபரம் காணப்படவில்லை. எனினும் காணியை சுவீகரிப்பதற்குரிய பொழிப்பான தகவல்கள் கணக்கு பொழிப்புக்கள் மற்றும் இறுதிக் கணக்கறிக்கைகள் தயாரிக்கப்பட்டுள்ளன. செயற்திட்டத்தின் கீழ் காணப்படுகின்ற சொத்துக்களை ஏனைய இடங்களுக்கு மற்றும் அனுப்பிவைக்கும் போது வழங்கப்படுகின்ற வழங்கல் மற்றும் பெறுவனவு கட்டளைப்படுத்தல் தொடர்பான விபரம் உள்ளது. வழங்குனர் உரிமையை உறுதிப்படுத்துவதற்குத் தேவையான செயற்திட்ட நிருவாகத்திற்குரிய ஆவணங்களும் இல்லை.தொழில்தருனரின் உரிமைகளை உறுதிப்படுத்துவதற்குத் தேவையான செயற்திட்ட நிருவாகத்திற்குரிய ஆவணங்களும் இல்லை. பெரிய அளவிலான செயற்திட்டங்களை பொறுப்பேற்கும் போது பெரிய அளவிலான செயற்திட்டங்களை | பெரிய அளவிலான அபிவிருத்தி செயற்திட்டங்களின் ஒப்பந்த நிருவாகத்திற்கு தொடர்புபட்ட விடயங்கள், கொள்கை ரீதியான விடயங்களாக கருதி செயற்படாதிருக்க வேண்டியதுடன் அமைச்சரவை விஞ்ஞாபனத்தை சமர்ப்பிக்கும் போது அவதானிப்புக்களில் குறிப்பிட்ட விடயங்கள் உள்ளடங்கலாக பொருளாதார தாக்கங்கள் தொடர்பான விபரமான தகவல்கள் அறிக்கையிடப்படுதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | காணிகள் மற்றும் ஆதனங்களின் பெறுமதியை மதிப்பீடு செய்து குத்தகை வாடகையினை அறவீடு செய்தல், ஒப்பந்தக்காரரினால் பயன்படுத்திய மணல், கருங்கல் மற்றும் மணலுக்காக அரசாங்கத்தினால் அறவிட வேண்டிய காணியை பயன்படுத்துதல் கட்டணம் மற்றும் அரசிறையை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்ற கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் சிபாரிசு அமுல்ப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | முடிவுறுத்தி ஒப்படைத்தல் சம்பந்தமாகப் பின்பற்றப்பட வேண்டிய நடவடிக்கைகள் சம்பந்தமாக அறிவுறுத்தல்கள் தற்பொழுது தயாரிக்கப்பட்டுள்ளது. | |
| (iii) | ஹொரவபதான மற்றும் சோமரங்கடவல பிரதேச செயலகப் பிரிவுகளின் மேட்டு மற்றும் சேற்று நிலங்களில் 4,148 ஹெக்டயர்கள் நீர்த்தேக்கத்தின் நீரினால் மூடப்பட்டிருந்தன. 1,515 ஹெக்டயர் புதிய காணிக்கு பாசன நீர் வசதிகளை வழங்கி விவசாயத்திற்குச் சேர்க்கும் தொடக்க குறிக்கோளில் செயற்திட்டம் அமுல்ப்படுத்தப்பட்டிருந்தும் இன்றுவரை 421 ஹெக்டயர் புதிய வயல் காணிகளுக்கு மாத்திரம் விவசாயம் செய்வதற்கான பாசன வசதிகள் வழங்கப்படடிருந்தன. அதற்கிணங்க திட்டமிடப்பட்ட புதிய வயல்களின் அளவில் 1,094 ஹெக்டயர் அல்லது 72 சதவீதம் இன்றுவரை அடையாளங்காணப்பட்டு விவசாயம் செய்வதற்காக விவசாயிகளுக்கு வழங்கப்பட்டிருக்கவில்லை. | செயற்திட்டத்தின் கீழ் அபிவிருத்தி செய்வதற்காக திட்டமிடப்பட்ட பாசன காணிகளின் அளவானது வன பாதுகாப்பு மற்றும் வன சீவராசிகள் பாதுகாப்பு திணைக்களத்தின் மூலம் விடுவிப்பதற்கு இணங்கிக்கொண்ட அளவு மற்றும் இதுவரை அபிவிருத்தி செய்து முடிவடைந்த அளவின் பிரகாரம் விடுவிக்கப்பட்ட காணிகளின் அளவில் 83 சதவீதம் அளவானவை தற்பொழுது அபிவிருத்தி செய்யப்பட்டுள்ளதுடன் மிகுதிக் காணிகளை அபிவிருத்தி செய்யும் நடவடிக்கை இடம்பெற்று வருகின்றது. | திட்டமிடப்பட்டவாறு காணிகளை அடையாளங்கண்டு பயிர்ச்செய்கை பண்ணுவதற்காக விவசாயிகளுக்கு ஒப்படைத்து நீர் வழங்கப்படுதல் வேண்டும். |
| (iv) | செயற்திட்டத்தின் காரணமாக வயல் காணிகளை இழந்தவர்களுக்கு உச்ச அளவாக 1.5 ஏக்கர் வீதம் | யான் ஓயா நீர்த்தேக்கத்தினை நிர்மாணிக்கும் போது பாசனக் காணிகளை இழந்து பாசன | வயல் காணிகளை இழந்தவர்களுக்கு வழங்குவதற்கு திட்டமிடப்பட்ட காணிகளை வன |

வழங்குவதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும் அதற்குத் தேவையான காணிகளை அடையாளங்கண்டு வன பாதுகாப்பு திணைக்களத்திடமிருந்து விடுவிக்கப்பட்டிருக்கவில்லை. இதன் காரணமாக வயல் காணிகளை இழந்தவர்களுக்கு மாற்று வயல் காணிகளை வழங்குவதற்கு முடியாதிருந்தது. அதற்குப் பதிலாக 506 குடும்பங்களுக்கு ரூபா 1,800,000 வீதம் ரூபா 910,800,000 மேலதிக இழப்பீடு 2024 மே 31 ஆந் திகதி வரை செலுத்தப்பட்டிருந்தது.

காணிகள் வழங்கப்பட வேண்டிய 1,113 ஆவணங்கள் ஹொரவ்பதான பிரதேச செயலகத்தினால் செயற்திட்டத்திற்குச் சமர்ப்பிக்கப்பட்டது. அந்த ஆவணத்தின் பிரகாரம் இந்த 1,113 நபர்களுக்கு பாசனக் காணி வழங்கப்பட வேண்டியிருந்த போதிலும் அனுராதபுர மாவட்டத்தில் வழங்கிய அளவான வன ஓமாரகடின 507 ஹெக்டயர்களில் 40 ஹெக்டயர்கள் மற்றும் இஸ்ஸன் வெவவில் 444 ஹெக்டயர்களில் 377.45 ஹெக்டயர்கள் மாத்திரம் விடுவிக்கப்பட்டிருந்தன. இதற்கிணங்க பாசனக் காணிகள் போதியளவில் இல்லாமையின் மூலம் விவசாயம் வாழ்வாதாரமாக இல்லாத மற்றும் வெளிப் பிரதேசங்களிலிருந்து குடியிருக்கும் 614 குடும்பங்களுக்கு மாற்றுக் காணிகளுக்கு பதிலாக ரூபா 1.8 மில்லியன் இழப்பீட்டு பணம் 1.5 ஏக்கர்களுக்கு செலுத்துவதற்கு අමප/24/0395/623/009 ஆம் இலக்க 2024 மார்ச் 26 ஆந் திகதிய அமைச்சரவை தீர்மானத்தின் பிரகாரம் தொடக்கத்தில் பிரதேச செயலகங்களினால் அனுப்பிவைத்த 506 குடும்பங்களுக்கு ரூபா 1.8 மில்லியன் வீதம் செலுத்தப்பட்டது.

பாதுகாப்பு திணைக்களத்திடமிருந்து விடுவித்து விவசாயிகளுக்கு வழங்குவதற்கும் மேலதிக இழப்பீட்டுக் கிரயத்தினை குறைப்பதற்கும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

| | | | |
|---|---|---|---|
| (v) | யான் ஓயா நீர்த்தேக்கத்தினை நிர்மாணிப்பதற்காக 2,044 பாசனக் காணி துண்டுகளும் இடது கறை கால்வரினை நிர்மாணிப்பதற்காக 313 பாசக் காணித்துண்டுகளும் ஆக 2,355 காணித்துண்டுகள் முன்னேற்ற நிரல்களுக்கு இணங்க சுவீகரிக்கப்பட்டிருந்தன. செயற்திட்டத்தின் கீழ் ஓமாரகட 506 ஹெடயர்கள், இஸ்ஸன்வெல 444 ஹெக்டயர்கள், மோராகம மற்றும் இதுல்ஹிடியாவ 337 ஹெக்டயர்கள், கொஹம்பகஸ்வெவ 227 ஹெக்டயர்கள் என்பனவாக 1,514 புதிய வயல் காணிகளை அபிவிருத்தி செய்வதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும் அவற்றில் ஒரு பகுதியினை மாத்திரம் அபிவிருத்தி செய்து நீர்த்தேக்கத்தில் நீரில் மூழ்கிய காணி உரிமையாளர்களுக்கு பகிர்ந்தளிக்கப்பட்டிருந்த போதிலும் அவ்வாறு பகிர்ந்தளித்த வயல் காணிகள் தொடர்பான விபரமான பட்டோலை பேணப்பட்டிருக்கவில்லை. அதன் காரணமாக வயல் காணிகளை இழந்தவர்களுக்கு மாற்றுக் காணிகளை வழங்கும் அளவினை சரியாக உறுதிப்படுத்துவதற்கு முடியாதிருந்தது. | மாற்றுபாசன காணிகள் வழங்கப்பட்ட குடும்பங்களின் பெயர்ப்பட்டியல் உரிய பிரதேச செயலகங்களினால் எங்களுக்கு அனுப்பிவைக்கப்பட்டு ள்ளது. அப்பட்டியல் நாளதுவரையாகப் பேணப்பட்டு வரும். | வயல் காணிகளை இழந்தவர்களுக்கு மாற்று வயல் காணிகளை வழங்கும் அளவினை சரியாக உறுதிப்படுத்தக்கூடிய வகையில் ஒப்பீட்டு ஆவணங்களை பேணுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (vi) | நீர்த்தேக்கத்தினை நிர்மாணிப்பதற்காக ஹொரவ்வபதான மற்றும் கோமரங்கடவல பிரதேச செயலகப் பிரிவுகளைச் சேர்ந்த 4,148 ஹெக்டயர் மேட்டு மற்றும் சேற்று காணிகளுக்கு உட்பட்ட 4,352 காணித்துண்டுகள் சுவீகரிக்கப்பட்டிருந்ததுடன் அவற்றில் இழப்பீடு செலுத்த | சுவீகரிக்கப்பட்ட காணிகளுக்கு இழப்பீட்டினைச் செலுத்தும் போது சுவீகரித்தல் பிரதேச செயலகத்தின் மூலம் இடம்பெறும் உரிமைகளைப் பரீட்சித்தல் பிரதேச செயலகத்தின் மூலம் இடம்பெறுவதுடன் | சுவீகரிக்கப்பட்டுள்ள காணிக்காக இழப்பீடு செலுத்தி முடிவுறுத்தப்படுதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | வேண்டிய காணித்துண்டுகளின் எண்ணிக்கை 3,621 ஆகும். 2024 மே 31 ஆந் திகதியில் உள்ளவாறு 3,515 காணித்துண்டுகளுக்காக இழப்பீடு செலுத்தி முடிவடைந்திருந்தும் 108 காணித்துண்டுகளுக்கு இழப்பீடு செலுத்த வேண்டியிருந்தது. இந்த 108 காணித்துண்டுகளை சுவீகரித்து 8 ஆண்டுகளுக்கும் 9 ஆண்டுகளுக்கும் இடைப்பட்ட காலம் கடந்திருந்த போதிலும் இக்காணிக்காக எந்த இழப்பீடும் 2024 மே 31 ஆந் திகதி வரை செலுத்தப்பட்டிருக்கவில்லை. | மதிப்பீடு செய்யும் நடவடிக்கை மதிப்பீட்டுத் திணைக்களத்தின் மூலம் மேற்கொள்ளப்படும். உரிய மதிப்பீட்டு அறிக்கை பிரதேச செயலகத்தினால் செயற்திட்ட அலுவலகத்திற்கு அனுப்பிவைக்கப்பட்டதன் பின்னர் கொடுப்பனவு செய்தல் இடம்பெறும். உரிய மதிப்பீடு தாமதமடைதல் மற்றும் உரிமையாண்மை பரீட்சிப்புக்களின் போது வருகின்ற சிக்கல்களின் அடிப்படையில் கொடுப்பனவு நடவடிக்கைகள் தாமதமடைதல் இடம்பெறும். | |
| (vii) | நீர்த்தேக்கத்தின் இடது கரை கால்வாயினை நிர்மாணிப்பதற்காக ஹொரவ்பதான, கெபிரிகொல்லாவ, பதவிய, மற்றும் சிறீபுர பிரதேச செயலகப் பிரிவுகளின் 75.5 ஹெக்டயர் காணிகளுக்கு கீழேயுள்ள 769 காணித்துண்டுகள் சுவீகரிக்கப்பட்டிருந்ததுடன் அவற்றில் இழப்பீடு செலுத்த வேண்டிய காணித்துண்டுகளின் எண்ணிக்கை 528 ஆகும். 2024 மே 31 ஆந் திகதியில் உள்ளவாறு 348 காணித்துண்டுகளுக்கு இழப்பீடு செலுத்தி முடிவடைந்துள்ளதுடன் 180 காணித்துண்டுகளுக்கு இழப்பீடு செலுத்த வேண்டியிருந்தது. காணி சுவீகரிக்கப்பட்டு 4 ஆண்டுகளுக்கும் 5 ஆண்டுகளுக்கும் இடைப்பட்ட காலம் கடந்திருந்தும் உரிய | சுவீகரிக்கப்பட்ட காணிகளுக்காக இழப்பீட்டினைச் செலுத்தும் போது காணிகளைச் சுவீகரித்தல், உரிமையாண்மை பரீட்சிபுக்களை நடாத்துதல் என்பன பிரதேச செயலகத்தின் மூலம் மேற்கொள்ளப்படுகின்றன. மதிப்பீட்டினை வழங்குதல் மதிப்பீட்டுத் திணைக்களத்தின் மூலம் மேற்கொள்ளப்படும். இத்திணைக்களத்தின் மூலம் உரிய மதிப்பீட்டினைப் பெற்றுக்கொள்ளும் வரை இழப்பீடு செலுத்தும் நடவடிக்கையினை மேற்கொள்ள முடியாது | சுவீகரிக்கப்பட்டுள்ள காணிக்களுக்காக இழப்பீட்டினைச் செலுத்தி முடிவுறுத்துதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | காணிகளுக்காக 2024 மே 31 ஆந் திகதி வரை எந்த இழப்பீடும் செலுத்தப்பட்டிருக்கவில்லை. | | |
| (viii) | இழப்பீட்டைச் செலுத்துவதிலுள்ள தாமதத்தின் காரணமாக சுவீகரிக்கப்பட்ட காணிகளுக்காக 38(அ) உப வர்த்தமானியில் ஏற்பாடு வெளியிடப்பட்ட திகதியிலிருந்து மதிப்பீட்டு அறிக்கையினை வழங்கும் தாமதத்தின் அடிப்படையில் முழுமையான இழப்பீட்டிற்குரிய நியதிச்சட்ட இழப்பீட்டிற்காக 7 சதவீத வட்டியினை 5 ஆண்டு களுக்கு மேற்பட்ட காலத்திற்கு செலுத்த வேண்டி ஏற்பட்டிருந்தது. அதற்கிணங்க 2024 மே 31 ஆந் திகதியில் உள்ளவாறு ரூபா 1,275,580,533 வட்டியாகச் செலுத்தப்பட்டிருந்தது. இவ்வாறு செலுத்திய வட்டி காணி இழந்தவர்களுக்கு செலுத்தப்பட்டது என்பதற்கு கணக்காய்விற்கு உறுதிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | 38(அ) உப கட்டளை வழங்கப்பட்டதுடன் பின்னர் நில அளவை நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல் நிலஅளவை படங்களை தயாரித்தல் நில அளவையாளர் திணைக்களத்தின் மூலம் மேற்கொள்ளப்படுகின்றது. உரிமையாண்மையைப் பரீட்சித்தல் மற்றும் சுவீகரித்தல் பிரதேச செயலகத்தின் மூலம் மேற்கொள்ளப்படுகின்றது. மதிப்பீட்டு நடவடிக்கை மதிப்பீட்டு திணைக்களத்தின் மூலம் மேற்கொள்ளப்படுகின்றது. இந்த நடைமுறை முடிவடைந்து இறுதி மதிப்பீட்டு அறிக்கை செயற்திட்ட அலுவலகத்திற்கு கிடைக்கும் வரை இழப்பீட்டு கொடுப்பனவினை மேற்கொள்ள முடியாது. அதற்கிணங்க உரிய தாமதக் காலத்திற்காக வட்டியினை செலுத்த வேண்டி ஏற்பட்டுள்ளது. | செலுத்திய வட்டியானது காணியை இழந்தவர்களுக்கு செலுத்தப்படுகின்றது என்பதனை ஒப்பீட்டு ரீதியாக உறுதிப்படுத்தக்கூடிய வகையில் அறிக்கையினை தயாரித்து சமர்ப்பித்தல் வேண்டும். |
| (ix) | இழப்பீட்டினை செலுத்துவது சம்பந்தமாக 2024 பெப்ரவரி 21 ஆந் திகதி சமர்ப்பித்த அமைச்சரவை விஞ்ஞாபனத்தின் மூலம் 2022 ஆம் ஆண்டுவரை ஹொரவ்பதான, கெபிதிகொல்லேவ மற்றும் பதவிய பிரதேச செயலக பிரிவுகளுக்கு வெளியே | இடதுகரை கால்வாயின் கீழ் பாசளை காணிகளை இழந்த நபர்களுக்கு மாற்றுக் காணிக்காக மேலதிக இழப்பீட்டினை செலுத்துவது சம்பந்தமாக மீண்டும் கவனித:து | ரூபா 1,800,000 வரை இழப்பீட்டினை அதிகரிப்பதற்கு காரணமான விடயங்கள் மற்றும் மிகுதியான 328 நபர்களுக்காக எடுக்கப்படுகின்ற மாற்று நடைமுறைகள் தொடர்பான |

| | | | |
|---|---|---|---|
| | நிரந்தரமாக குடியிருக்கும் 614 குடும்பங்களுக்கு 1.5 ஏக்கர் பாசன காணிகளுக்காக ரூபா 1,800,000 ஆக திருத்திய கொடுப்பனவுக்கு அங்கீகாரம் வேண்டப்பட்டிருந்ததுடன் இதற்காக 2024 மார்ச் மாதம் 18 ஆந் திகதி අමප/24/0395/623/009 ஆம் இலக்க அமைச்சரவை தீர்மானத்தின் மூலம் அங்கீகாரம் கிடைத்திருந்தது. அதற்கிணங்க 2024 மே 31 ஆந் திகதி வரை 506 குடும்பங்களுக்கு ரூபா 1,800,000 வீதம் ரூபா 910,800,000 மேலதிக இழப்பீடு செலுத்தப்பட்டிருந்தது. அதன் போது ரூபா 1,800,000 வரை இழப்பீட்டினை அதிகரிப்பதற்கு காரணமான விடயங்கள் மற்றும் மிகுதியான 328 நபர்களுக்காக எடுக்கப்படுகின்ற மாற்று நடைமுறைகள் குறிப்பிடப்பட்டிருக்கவில்லை. | பார்ப்பதற்கும் அது சம்பந்தமாக ஒரு அறிக்கையினைத் தயாரிப்பதற்கும் அனுராதபுர மாவட்ட செயலளாளரின் தலைமைத்துவத்தில் ஒரு குழு நியமிக்கப்பட்டுளது. தற்பொழுது அக்குழு அறிக்கை கிடைத்துள்ளதுடன் அதற்கிணங்க மேலதிக நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | தகவல்கள் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும். |
| (x) | நிர்ணயிக்கப்பட்ட திகதியில் காணிகள் வழங்கப்படாமையின் காரணமாக நீர்த்தேக்கத்தின் அணைகளை நிர்மாணிக்கும் போது வயல் காணிகளை இழந்தவர்களுக்கு 2014/2015 பெரும் போகத்திலிருந்து 2018/2019 பெரும் போகம் வரை ஒரு ஏக்கருக்கு ரூபா 35,000 வீதம் பயிர்ச்செய்கை இழக்கப்பட்ட 09 போகங்களுக்கு ரூபா 345,452,574 இழப்பீடு செலுத்தப்பட்டது. இடது கரை கால்வாயினை நிர்மாணிக்கும் போது காணியை இழந்த வர்களுக்கு 2018 சிறு போகத்திலிருந்து 2020 பெரும் போகம் வரை | காணியை விடுவித்தல் மற்றும் அதனுடன் தொடர்புபட்ட முழுமையான இழப்பீட்டினையும் செலுத்தும் வரையான காலப்பகுதிக்காக விவசாய நடவடிக்கை களை மேற்கொள்ளமுடியாமைக்குரிய இழப்பீடு செலுத்தப்பட்டுள்ளது. இதற்கு தேவையான அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. | காணியை இழந்தவர்களுக்காகவே போகத்திற்கான இழப்பீடு செலுத்தப்பட்டது என்பதனை ஒப்பீட்டு ரீதியாக உறுதிப்படுத்தக்கூடிய வகையில் அறிக்கை சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | இழக்கப்பட்ட 04 போகங்களுக்காக ஒரு ஏக்கருக்காக ரூபா 50,700 தொயையும் மானாவரி பயிர்ச்செய்கை மேற்கொள்கின்ற விவசாயிகளுக்கு ஒரு ஏக்கருக்கு ரூபா 35,000 வீதம் போக இழப்பீடு ரூபா 123,494,081 தொகை செலுத்தப்பட்டிருந்தது. அதற்கிணங்க காணிகளை இழந்தவர்களுக்கு நிர்ணயிக்கப்பட்டவாறு வயல் காணிகள் வழங்காமையால் ரூபா 468,846,655 தொகையான போக இழப்பீடு செலுத்த வேண்டி ஏற்பட்டிருந்தது. இவ்வாறு செலுத்திய இழப்பீடுகள் காணியை இழந்தவர்களுக்காகவே செலுத்தப்பட்டது என்பது கணக்காய்வில் உறுதிப்படுத்தப்படவில்லை. | | |
| (xi) | பாசனக் காணிகள் வழங்கப்படாமையின் காரணமாக வாழ்வாதாரத்தினை இழந்த ஒரு நபருக்கு மாதாந்தம் ரூபா 2,000 வீதம் உச்ச அளவாக ரூபா 8,000 வரை வாழ்வாதார படியாக 2024 மே 31 வரை ரூபா 481,918,000 செலுத்தப்பட்டிருந்தது. இதற்காக ஒவ்வொரு நபருக்கும் செலுத்தப்பட்ட அளவினை தனித்தனியாக அடையாளங்காணக்கூடிய வகையயில் ஏடுகள் பேணப்பட்டிருக்காமையின் காரணமாக அதற்காக மேற்கொள்ளப்பட்ட செலவானது காணியை இழந்தவர்களுக்காகவே செலுத்தப்பட்டது என்பது கணக்காய்வில் உறுதிப்படுத்தப்படவில்லை. | நீர்த்தேக்கத்தின் கீழ் பாசனக் காணிகளை இழந்த குடும்பங்களுக்கு மாற்று பாசனக் காணியை வழங்கும் வரை மாதாந்த வாழ்க்கைச் செலவுப் படி செலுத்தப்பட்டதுடன் மாற்று பாசன காணிக்காக மேலதிக இழப்பீட்டினைப் பெற்றுக்கொண்ட நபர்களின் வாழ்க்கை செலவு படி நிறுத்தப்பட்டுள்ளது. வாழ்வாதார கொடுப்பனவு பதிவேடு பிரதேச செயலகத்தினால் மாதாந்தம் தயாரிக்கப்பட்டு செயற்திட்ட அலுவலகத்திற்கு அனுப்பிவைக்கப்படுவதுடன் அந்த ஆவணத்தை அடிப்படையாகக் | வாழ்வாதார படிகள் காணிகளை இழந்தவர்களுக்காகவே செலுத்தப்பட்டது என்பதனை ஒப்பீட்டு ரீதியாக உறுதிப்படுத்தக்கூடிய வகையில் அறிக்கைகள் பேணப்படுதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | கொண்டு பிரதேச செயலகத்திற்கு உரிய பணத்தை விடுவித்தல் இடம்பெறுகின்றது. வாழ்வாதாரத்தினைப் பெற்ற நபர்களின் பதிவேடு நாளதுவரையாக்கப்பட்டு வருகின்றது. | |
| (xii) | தற்பொழுது பயிர்ச்செய்கை மேற்கொள்ளப்படுகின்ற 8,700 ஹெக்டயர்களில் விளைச்சலினை அதிகரிப்பதற்காக பாசன நீர் வசதிகள் வழங்குவதற்கு எதிர்பார்க்கப்பட்டிருந்த போதிலும் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு காணப்பட்ட 5,956 ஹெக்டயர் காணிகளுக்காக மாத்திரம் இரண்டு போகங்களிலும் பயிர்ச்செய்கை மேற்கொள்வதற்கான வசதிகள் வழங்கப்பட்டிருந்தன. அதற்கிணங்க திட்டமிடப்பட்ட 2,794 வயல் காணிகள் அல்லது 32 சதவீதத்திற்காக இரண்டு போகங்களிலும் பயிர்ச்செய்கை மேற்கொள்வதற்கு வசதிகள் வழங்கப்பட்டிருக்கவில்லை. | இந்த விடயங்கள் தொடர்பாக பூரணமான விபரம் அறிக்கையிடப்பட்டுள்ளது | எதிர்பார்க்கப்பட்டவாறு வயல்காணிகளுக்காக பாசன வசதிகள் வழங்கப்படுதல் வேண்டும். |
| (xiii) | இந்த நீர்த்தேக்கத்தை நிர்மாணிப்பதன் மூலம் அனுராபுர மாவட்டத்தில் 50,000 குடும்பங்களுக்கும் திருகோணமலை மாவட்டத்தில் 20,000 குடும்பங்களுக்கும் குடிநீர் வழங்குவதற்குத் திட்டமிடப்பட்டிருந்த போதிலும் இன்றுவரை எத்தனை குடும்பங்களுக்கு குடிநீர் வசதிகள் வழங்கப்பட்டிருந்தது என்பதனை உறுதிப்படுத்தக்கூடிய ஆவணங்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை. | இச்செயற்திட்டத்தின் கீழ் குடிநீருக்காக 24 MCM நீர் அளவானது நீர் வழங்கல் சபைக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. அந்த நீர் அளவினை அவர்களுக்குத் தேவையான எச்சந்தர்ப்பத்திலும் பெற்றுக்கொள்ளலாம். | திட்டமிடப்பட்ட குடும்பங்கனளுக்கு குடிநீரினை வழங்குவது சம்பந்தமாக நாளதுவரையாக்கிய பேரேடு பேணப்படுதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (xiv) | பிரதேசத்தில் 16 கிலோ மீற்றர் நீளத்திலான யானை வேலியினை நிர்மாணித்தல் திட்டமிடப்பட்டிருந்தும் அந்த யானை வேலி இன்று வரை நிர்மாணிக்கப்பட்டிருக்கவில்லை. | யானை வேலியினை நிர்மாணித்தல் தற்பொழுது வன சீவராசிகள் திணைக்களத்தினால் செய்ய முடியாது என தெரியப்படுத்தியிருந்தும் அத்திணைக்களத்தின் மேற்பார்வையின் கீழ் ஒப்பந்தக்காரர் ஒருவரினை தெரிவுசெய்து அச்செயற்பாட்டினை நிறைவேற்றுவதற்கு எதிர்காலத்தில் எதிர்பார்க்கப்படுகின்றது. | திட்டமிட்ட யானை வேலி நிர்மாணித்தல் வேண்டும். |
| (xv) | ரூபா 36,855 மில்லியன் தொகையான யான் ஓயா செயற்திட்டத்தின் தொடக்க மதிப்பீடு 2021 ஆம் ஆண்டில் அமைச்சரவையின் அங்கீகாரத்தோடு ரூபா 48,355 மில்லியனாக திருத்தம் செய்யப்பட்டிருந்தது. மேற்கூறிய நிதி ஏற்பாடானது 06 பிரதான வேலைப்பகுதிகளுக்கு உட்பட்டதாக 22 உப விடயங்களின் கீழ் அடையாளங்காணப்பட்டிருந்ததுடன் அந்த ஒவ்வொரு உப விடயங்களின் கீழ் மேற்கொள்ளப்பட்ட செலவுகள் சம்பந்தமாக தனித்தனியாக கணக்கு வைக்கப்படாதிருந்ததன் காரணமாக அமைச்சரவையினால் அங்கீகரித்த எல்லைக்குள் உரிய செலவுகள் மேற்கொள்ளப்பட்டது என கணக்காய்வினால் உறுதிப்படுத்திக்கொள்ள முடியாதிருந்தது. | இச்செயற்திட்டத்தின் ஒரு பகுதி EPC ஒப்பந்தத்தின் கீழ் நிறைவேற்றப்பட்டுள்ளது. மற்றுமொரு பகுதி நீர்ப்பாசனத் திணைக்களத்தினால் தொடர்ந்தும் நிறைவேற்றப்பட்டு வருகின்றது. நீர்ப்பாசனத் திணைக்களத்தினால் மேற்கொள்கின்ற அனைத்து நிர்மாண வேலைகளுக்குமாக கொடுப்பனவுகளுக்குரிய செலவு அறிக்கைகள் உரிய முறைப்படி பேணப்படுகின்றது. EPC ஒப்பந்தத்தின் கொடுப்பனவுகளானது ஒப்பந்தக்காரர்களுக்கு தெரியப்படுத்தியுள்ள வரையறைகளுக்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்றது. அதற்கிணங்க உரிய கொடுப்பனவு அறிக்கைகள் அனைத்தும் பேணப்பட்டுள்ளன. | ஒவ்வொரு உப விடயங்களின் கீழ் மேற்கொள்ளப்பட்ட செலவுகளும் மதிப்பீடு செய்யப்பட்ட செலவுகளும் தனித்தனியாக கணக்கு வைக்கப்படுதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | **கீழ் ஊவா மத்திய மற்றும் சிறி அளவிலான அபிவிருத்தி செயற்திட்டம்.** | | |
| | மொனராகல மாவட்டத்திலுள்ள வடகல ஆரகுளம், மல்லிபொத குளம், தெபர ஆர குளம் என்பவற்றின் மூலம் 2.45 மில்லியன் கன மீற்றர் நீரினை வழங்கி காணப்படுகின்ற 971 ஹெக்டயர் காணிகளுக்கும் 728 ஹெக்டயர் புதிய காணிகளுக்கும் இரண்டு போகங்களிலும் பயிர்ச்செய்கை மேற்கொள்வதற்கு நீரினை வழங்குவதற்காக ரூபா 1,250 மில்லியன் மதிப்பீட்டின் கீழ் 2007 ஆம் ஆண்டிலிருந்து அச்செயற்திம்டம் அமுல்ப்படுத்தப்பட்டது. 2023 திசெம்பர் 31 வரை நிதிசார் செயல்முன்னேற்றம் ரூபா 776.23 மில்லியன் மற்றும் பௌதீக செயல்முன்னேற்றம் 91 சதவீதமாக இருந்ததுடன் 723 ஹெக்டயர்களுக்கு மாத்திரம் பாசன நீர் வழங்கப்பட்டிருந்தது. அதற்கிணங்க செயற்திட்டம் ஆரம்பிக்கப்பட்டு 17 ஆண்டுகள் கடந்திருந்தும் அபிவிருத்தி செய்வதற்கு எதிர்பார்க்கப்பட்ட 976 ஹெக்டயர் காணிகள் அல்லது 57 சதவீதத்திற்காக பாசன நீர் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. புதிய காணிகளை அடையாளங்கண்டு பாசன நீரினை வழங்குவதற்கு தாழ்ந்த பகுதிகளை அபிவிருத்தி செய்யும் நடவடிக்கை மேற்கொள்ளலாமையால் இச்செயற்திட்டத்தினை அமுல்ப்படுத்துவதன் மூலம் எதிர்பார்க்கப்பட்ட பொருளாதார நலன்கள் தேசிய பொருளாதாரத்திற்கு சேர்த்துக்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | செயற்திட்டத்தின் தொடக்கத்தில் 55 சிறிய குளங்களை அபிவிருத்தி செய்வதற்காக 03 கட்டங்களின் கீழ் உத்தேசிக்கப்பட்டிருந்தது. வன பாதுகாப்பு திணைக்களத்தின் அங்கீகாரம் கிடைக்காமை, சில குளங்கள் ஏனைய செயற்திட்டங்களின் மூலம் அமுல்ப்படுத்தப்படுகின்றமை மற்றும் தொழில்நுட்ப ரீதியான சாத்திய வளம் இல்லாமை போன்ற காரணங்களின் அடிப்படையில் சில விடயங்கள் நீக்கப்பட்டன. அதற்கிணங்க ஒவ்வொரு கட்டத்தின் கீழ் உத்தேசிக்கப்பட்டுள்ள வேலைகளின் பகுதிகள் நீக்கப்பட்டுள்ளன. எனவே செயற்திட்டத்தின் ஆரம்பத்தில் நீரினை வழங்குவதற்கு உத்தேசித்துள்ள பயிர்ச்செய்கை காணியின் அளவு 723 ஹெக்டயர் வரை குறைவடைந்துள்ளது. அவ்வாறே பெரிய அளவிலான அபிவிருத்தி செயற்திட்டங்களை மீண்டும் தந்திரோபாயப்படுத்தல் மற்றும் துரிதப்படுத்துதல் (RAMP) குழுத்தீர்மானம் சம்பந்தமாக பிரதம மந்திரியின் | கீழ் பள்ளத்தாக்கு அபிவிருத்தி நடவாடிக்கைகளின் மூலம் எதிர்பார்த்த பொருளாதார நலன்களை தேசிய பொருளாதாரத்திற்கு சேர்த்துக்கொள்ளுதல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| | செயலாளரின் PMO/DEV-11/01/01/MTG/SEP-02 ஆம் இலக்க 2022 ஒக்தோபர் 07 ஆந் திகதிய கடிதத்தின் பிரகாரம் வழங்கப்பட்ட அறிவுறுத்தல்களுக்கு இணங்க செயற்திட்டத்தின் மிகுதி வேலைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. | |
| **(ஈ) மொரான நீர்த்தேக்க செயற்திட்டம்** | | |
| பதுளை மாவட்டத்திலுள்ள 570 ஹெக்டயர் காணிகளுக்கு 16 மில்லியன் கனமீற்றர் கியூப் நீரினை வழங்குவதற்கு ரூபா 2,900 மில்லியன் மதிப்பீட்டின் கீழ் 2012 ஆம் ஆண்டிலிருந்து இந்த நீர்த்தேக்கத்தினை நிர்மாணிக்கும் செயற்திட்டம் அமுல்ப்படுத்தப்பட்டிருந்தது. 2023 திசெம்பர் 31 வரை நிதிசார் செயல்முன்னேற்றம் ரூபா 2,725.87 மில்லியன் மற்றும் பௌதீக செயல்முன்னேற்றம் 99 சதவீதமாக இருந்தும் பாசன நீரானது 449 ஹெக்டயர்களுக்கு மாத்திரம் வழங்கப்பட்டிருந்தது. அதற்கிணங்க செயற்திட்டத்தினை ஆரம்பித்து 14 ஆண்டுகள் கடந்திருந்த போதிலும் அபிவிருத்தி செய்வதற்கு எதிர்பார்த்த 121 ஹெக்டயர் புதிய காணிகள் அல்லது 21 சதவீதத்திற்காக பாசன நீர் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. மேலும் நீர்த்தேக்கம் மற்றும் பிரதான கால்வாய்களுக்காக சுவீகரிக்கப்பட்ட காணிகளுக்காக இழப்பீட்டினைச் செலுத்துதல் மற்றும் மாற்றுக் காணிகளை வழங்குவதும் கூட தாமதமடைந்திருந்தது. | இச்செயற்திட்டத்தின் பிரதான நிர்மாணங்கள் அணைத்தும் நிர்மாணித்து முடிவடைந்துள்ளது. இழப்பீடு செலுத்துவதற்குரிய நடவடிக்கைகளை பூரணப்படுத்துதல் மற்றும் உத்தேச பயிர்ச்செய்கை நிலங்களின் ஒரு பகுதியை தயார்படுத்துதல் மாத்திரம் மிகுதியாக உள்ளது. இழப்பீடு செலுத்தும் செயற்பாடானது பிரதேச செயலகங்களிடமிருந்து மதிப்பீட்டு அறிக்கை கிடைத்தன் பின்னர் மேற்கொள்ளப்படும். | அபிவிருத்தி செய்வதற்கு எதிர்பார்த்திருந்த புதிய காணிகளுக்காக பாசன நீரினை வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். செயற்திட்டத்திற்குரிய சுற்றாடல் தாக்க மதிப்பீட்டினை முறைப்படியாக மேற்கொண்டு நீர்த்தேக்கம் மற்றும் பிரதான கால்வாய்களுக்காக சுவீரித்த காணிகளுக்கு இழப்பீட்டினைச் செலுத்துதல் மற்றும் மாற்றுக் காணிகளை வழங்குதலும் மேற்கொள்ளப்படுதல் வேண்டும். |

**3.3 செயற்திட்டங்களை பூர்த்திசெய்யாது கைவிடுதல்**

**(அ) கும்புக்கன் ஓயா நீர்த்தேக்க செயற்திட்டம்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (i) | இச்செயற்திட்டத்திற்காக மேற்கொள்ளப்பட்ட ரூபா 521,548,736 கிரயத்திலிருந்து தேசிய பொருளாதாரத்திற்கு இன்று வரை எந்த பங்களிப்பும் கிடைத்திருக்கவில்லை. இதன் மூலம் எதிர்பார்த்த பிரதிபலனாகிய புதிய மற்றும் பாசன வசதிகள் இல்லாத 5,429 ஹெக்டயர் காணிகளுக்கு பாசன நீரினை வழங்குதல், குடிநீர் தேவைப்பாட்டிற்காக வருடாந்தம் 12 மில்லியன் கன மீற்றர் நீரினை வழங்குதல், 15 கிலோமீற்றர் அளவான மாற்று வீதிகளை அபிவிருத்தி செய்தல், வருடாந்தம் 16 கிகா வாட் மின்சாரத்தை தோற்றுவித்தல், நன்னீர் மீன்பிடிக் கைத்தொழிலை மேம்படுத்ததுதல் மீள்குடியமர்த்தப்படுகின்ற பிரதேசத்தின் நகரத்தை அபிவிருத்தி செய்தல், யானை மனிதர் பிரச்சினையை குறைப்பதற்காக யானை வேலிகளை நிர்மாணித்தல் என்பனவாக இருந்த போதிலும் இவற்றில் எதுவும் 2023 திசெம்பர் 31 ஆந் திகதி வரையும் அடைந்துகொள்ளப்பட்டிருக்க வில்லை. | கும்புக்கன் ஓயா நீர்த்தேக்க செயற்திட்டம் பெரிய அளவிலான நீர்ப்பாசனச் செயற்திட்ட டமானதுடன் அதன் கீழ் 48 மில்லியன் கன மீற்றர் அளவான பாரிய நீர்த்தேக்கத்தினை நிர்மாணித்தல் மற்றும் பல சிறிய குளங்களை புனரமைப்பதற்கும் உத்தேசிக்கப்பட்டுள்ளதுடன் தற்பொழுது அவற்றில் சில வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன. காட்டப்பட்டுள்ள பிரதிபலன்கள் நீர்த்தேக்கம் மற்றும் உத்தேச திட்டத்தினை நிர்மாணித்ததன் பின்னர் பெற்றுக்கொள்ளப்படுகின்ற பிரதிபலன்களாகும். நீர்த்தேக்கத்தினை நிர்மாணிப்பதற்காக நிதி ஏற்பாடு இல்லாமை மற்றும் செயற்திட்டம் சம்பந்தமாக பெரிய அளவிலான அபிவிருத்தி செயற்திட்டங்களை மீண்டும் தந்திரோபாயப்படுத்துதல் மற்றும் துரிதப்படுத்துதல் (RAMP) குழு தீர்மானம் சம்பந்தமாக பிரதம மந்திரியின் செயலாளரின் PMO/DEV-11/01/01/MTG/SEP-02 மற்றும் 2022 ஒக்தோபர் 07 ஆந் திகதிய கடிதத்தின் மூலம் வழங்கப்பட்ட அறிவுறுத்தல்களின் மூலம் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | மேற்கொள்ளப்பட்ட கிரயத்தின் மூலம் அடைந்து கொள்ளக்கூடிய பொருளாதார பிரதிபலன்கள் என்ன என்பதனை அடையாளங்கண்டு அவற்றினை தேசிய பொருளாதாரத்திற்கு சேர்த்துக்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ii) | கும்புக்கன் ஓயா நீர்த்தேக்க செயற்திட்டத்திற்காக காணிகளைச் சுவீகரித்ததன் காரணமாக ஆதனங்களை இழந்து இன்னல்களுக்கு | பெரிய அளவிலான அபிவிருத்தி செயற்திட்டங்களை மீண்டும் தந்திரோபாயப்படுத்துதல் மற்றும் துரிதப்படுத்துதல் | காணியை சுவீகரிப்பதற்காக பொதுவான இழப்பீட்டு நடைமுறையினை அறிமுகப்படுத்தி |

உள்ளாகின்ற மக்களுக்கு இழப்பீட்டினைச் செலுத்துதல் மற்றும் மீளக் குடியமர்த்துதல் என்ற தலைப்பில் சமர்ப்பிக்கப்பட்ட அமைச்சரவை விஞ்ஞாபனம் தொடர்பாக எடுக்கப்பட்ட අමප/17/0583/729/011 ஆம் இலக்க 2017 மார்ச் 28 ஆந் திகதிய அமைச்சரவை தீர்மானத்தின் மூலம் சனாதிபதி அவர்களால் இவ்வாறான சந்தர்ப்பங்களில் அமுல்ப்பதக்கூடிய பொதுவான இழப்பீட்டு முறைமையினை உருவாக்குதல் பொருத்தமானது என சிபாரிசு செய்யப்பட்டிருந்தது. நிதி அமைச்சர் பல்வேறு செயற்திட்டங்களின் கீழ் தாக்கத்திற்கு உள்ளாகியுள்ள ஓரே பிரதேசத்தில் வசிக்கின்ற நபர்களுக்கு பல்வேறு நடைமுறைகளின் கீழ் கவனம் செலுத்தியுள்ளார் என அவதானிக்கப்பட்டது. இப்பிரச்சினையை தவிர்த்துக்கொள்ளும் வகையில் காணியை/ பயிர்ச் செய்கையை இழந்த நபர்களுக்கு இழப்பீட்டினை செலுத்தும் புதிய பிரமாணங்களை தயாரித்தலினை துரிதமாக முடிவுறுத்துமாறு காணி அமைச்சின் செயலாளருக்கு அனுப்பிவைக்கப்பட்டிருந்தது. அதற்கிணங்க நீர்ப்பாசன அமைச்சு காணி அமைச்சுடன் ஒருங்கிணைந்து செயற்திட்டத்திற்கான காணிகளைச் சுவீகரித்தல் மற்றும் இழப்பீட்டினைச் செலுத்துவதற்காக ஒரு பொது நடைமுறையினைத் தயாரித்து அமைச்சரவைக்கு சமர்ப்பிக்க வேண்டியிருந்த போதிலும் அதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(RAMP) குழு தீர்மானம் சம்பந்தமாக பிரதம மந்திரியின் செயலாளரின் PMO/DEV-11/01/MTG/SEP-02 ஆம் இலக்க 2022 ஒக்தோபர் 07 ஆந் திகதிய கடிதத்தின் பிரகாரம் வழங்கப்பட்ட அறிவுறுத்தல்களுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அதற்கிணங்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

| | | | |
|---|---|---|---|
| (iii) | நிதி அமைச்சர் சமர்ப்பித்த அவதானிப்புக்களுக்குஇணங்க அமைச்சரவை விஞ்ஞாபனத்தில் குறிப்பிட்ட 07 பிரேரணைகளை அமுல்ப்படுத்துவதற்குத் தேவையான நிதி ஏற்பாட:டு அளவு மற்றும் இழப்பீடு செலுத்த வேண்டிய ஒவ்வொரு தொகுதியினதும் முழுக் குடும்பங்களை குறிப்பிட்டு அமைச்சரவை குறிப்பு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நிர்ணயிக்கப்பட்டிருந்தும் அதற்கிணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | 2017 மார்ச் மாதம் 14 ஆந் திகதி சமர்ப்பித்த அமைச்சரவை விஞ்ஞாபனத்திற்கு அங்கீகாரம் கிடைக்காமையால் 2022 திசெம்பர் 20 ஆந் திகதி ‘‘பஹல மல்வதுஓயா பல்நோக்கு அபிவிருத்தி செயற்திட்டம் மற்றும் கும்புக்கன் ஓயா நீர்த்தேக்க செயற்திட்டத்திற்காக காணிகளைச் சுவீகரித்ததன் காரணமாக பாதிப்புக்கு உள்ளாகிய மக்களுக்கு இழப்பீடு செலுத்துதல் மற்றும் மீளக் குடியமர்த்துவதற்காக அதிஷ்டம் விசேட அதிஷ்டம் நிவாரண படி மற்றும் ஆளிணியினருக்கு படிகளைச் செலுத்துகின்ற பிரேரணைகள்’’ என்ற தலைப்பில் அமைச்சரவை விஞ்ஞாபனம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. | அமைச்சரவை விஞ்ஞாபனத்தின் பிரதி கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும். |
| (iv) | அதற்கிணங்க காணிகளைச் சுவீகரித்தல் மற்றும் இழப்பீட்டினைச் செலுத்துவதற்காக அமைச்சரவை அங்கீகாரம் கிடைக்காதிருந்தும் அமைச்சின் செலவுத் தலைப்பின் கீழ் 2019, 2020, 2021 மற்றும் 2022 ஆம் ஆண்டுகளின் போது செயற்திட்டத்திற்காக ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதி ஏற்பாடுகளிலிருந்து செலுத்துவதற்கு மெதகம, படல்கும்புர, மொனராகலை பிரதேச செயலகங்களுக்கு ரூபா 43,998,988 தொகை செலுத்தப்பட்டிருந்தது. அதன் போது இழப்பீட்டினைச் செலுத்துவதற்காக நிரந்தரமான ஒரு நடைமுறை இல்லாது பிரதேச செயலகங்களுக்குச் செலுத்தப்பட்ட பணம் 04 ஆண்டுகள் காலமாக அந்த அலுவலகங்களின் பொது வைப்புக் கணக்குகளில் விளைவற்றுக் காணப்பட்டது. | காணிகளை சுவீகரிக்கும் பிரேரணைகளை சமர்ப்பிக்கும் போது அக்காணிகளின் மொத்த மதிப்பீட்டிற்கு இணங்க பெறுமதி உரிய பிரதேச செயலகங்களில் வைப்புச் செய்யப்பட்டு அந்த பற்றுச்சீட்டுடன் சுவீகரிக்கும் பிரேரணை சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும். அதற்கிணங்க சுவீகரிப்பதற்கு உத்தேசித்த காணிகளின் மொத்த பெறுமதிக்கு இணங்க பணத்தை வைப்புச் செய்து காணிகளை சுவீகரிக்கும் பிரேரணை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. காணிகளை சுவீகரிப்பதற்குரிய மேலதிக நடவடிக்கைகளை மேற்கொள்கையில் அபிவிருத்தி செயற்திட்டங்களை பெரிய அளவிலான அபிவிருத்தி செயற்திட்டங்களை மீண்டும் தந்திரோபாயப்படுத்துதல் மற்றும் துரிதப்படுத்துதல் (RAMP) குழு தீர்மானம் சம்பந்தமாக பிரதம | காணிகளை இழந்தவர்கள் மற்றும் இழப்பீடு செலுத்த வேண்டிய நபர்களை அடையாளங்கண்டு கொள்ளாது பணத்தை விடுவித்த ஊழியர்கள் சம்பந்தமாக காரணங்களைப் பரீட்சித்து ஒழுக்காற்று நடவடிக்கைகள் பயன்பற்றப்படுதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | மந்திரியின் செயலாளரின் PMO/DEV-11/01/01/MTG/SEP-02 ஆம் இலக்க 2022-10-07 ஆந் திகதிய கடிதத்தற்கு இணங்க நடவடிக்கை எடுக்க வேண்டி ஏற்பட்டது. இது சம்பந்தமாக உரிய பிரதேச செயலாளர்களுக்கு தெரியப்படுத்தி வைப்புச் செய்யப்பட்ட பணத்தை மீளப்பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | |
| (v) | நீர்ப்பாசன மற்றும் நீர் வளங்கள் முகாமைத்துவ அமைச்சினால் 2017 நவம்பர் 24 ஆந் திகதி சமர்ப்பித்த අමප/17/2716/729/029 ஆம் இலக்க “கும்புக்கன் ஓயா நீர்த்தேக்க செயற்திட்டம் மற்றும் ஹெட ஓயா நீர்த்தேக்க செயற்திட்டத்தினை சுவிஷ் சலேன்ஜ் முறைமையின் (Swius Challenge Method) கீழ் அமுல்ப்படுத்துவதற்காக ஒரு சீனக் கம்பனியுடன் புரிந்துணர்வு உடன்படிக்கை யினை மேற்கொள்லவதற்கான அங்கீகாரத்தினைப் பெற்றுக்கொள்ளல்” என்ற தலைப்பிலான அமைச்சரவை விஞ்ஞாபனம் தொடர்பாக நிதி அமைச்சரினால் சமர்ப்பித்த அவதானிப்புக்களின் மூலம் அந்த முறைமையின் கீழ் ஒரு செயற்திட்டத்தினை அமுல்ப்படுத்துவதற்கு உடன்படிக்கை செய்து கொள்வதாயின் சுவீஸ் சலேன்ஜ் நடைமுறை தொடர்பான வழிகாட்டிகளுக்கு இணங்க மீள் பிரேரணைகளைக் கோரி தெரிவுசெய்யும் நடைமுறை முடிவுறுத்தப்படுதல் வேண்டும். 2017 திசெம்பர் 12 ஆந் திகதிய අමප/17/2716/729/029 ஆம் இலக்க அமைச்சரவை | சாத்தியவள ஆய்வின் போது தொடக்கத்தில் செய்யப்படுவதானது செயற்திட்டத்தின் சாத்தியவளத்திற்குரிய விடயங்களை ஆய்வு செய்வதாகும். இதன் போது சுற்றாடல் ஆய்வில் எதிர்பார்க்கப்பட்ட சில விடயங்களுக்குரிய விபரங்களை பெற்றுக்கொள்ளலாம். சுற்றாடல் ஆய்வு என்பது தனியான ஆய்வு நடவடிக்கையாகும். இந்த ஆய்வின் மூலம் அச்செயற்பாடானது விசேட அறிவு உள்ள நபர்களினால் செய்யப்படுவதுடன் ஒரே உடன்படிக்கையின் கீழ் இந்த இரண்டு விடயங்களையும் ஆய்வு செய்வது நடைமுறைச் சாத்தியமற்றதாகும். இச்சுவிஸ் சலேன்ஸ் முறைமையின் கீழ் தொடக்கத்தில் சாத்தியவள ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. | அமைச்சரவையினால் தீர்மானிக்கப்பட்ட கொள்கை ரீதியான தீர்மானத்திற்கு முரணாக புரிந்துணர்வு உடன்படிக்கையில் உள்ளடக்கப்பட்ட உத்தியோகத்தர்கள் சம்பந்தமாக ஒழுக்காற்று நடவடிக்கைகள் பின்பற்றப்படுதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | தீர்மானத்திற்காக உரிய பணம் அமைச்சரின் அவதானிப்புக்களில் குறிப்பிட்டவாறு சுவிஸ் சலேன்ஜ் முறைமைக்குரிய நடைமுறைகளைப் பின்பற்றாது 2018 மார்ச் 30 ஆந் திகதி நீர்ப்பாசன நீர் வளங்கள் முகாமைத்துவ அமைச்சு சீன கம்பனியுடன் கும்புக்கன் ஓயா மற்றும் ஹெட ஓயா நீர்த்தேக்க செயற்திட்டத்திற்காக சாத்தியவள ஆய்வினை மேற்கொள்வதற்கு இணக்கப்பாட்டினை வழங்கி புரிந்துணர்வு உடன்படிக்கை மேற்கொள்ளப்பட்டிருந்தது. அதற்கிணங்க அமைச்சரவையினால் தீர்மானிக்கப்பட்ட கொள்கைரீதியான தீர்மானத்திற்கு முரணாக உடன்படிக்கைசெய்து ரூபா 8,929,126 தொகைக்கு புரிந்துரணர்வு உடன்படிக்கையில் கையொப்பமிடப்பட்டிருந்தது. மேலும் மேற்கூறிய உடன்படிக்கையின் சுற்றாடல் தாக்க ஆய்வு நடைமுறை உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. | | |
| (vi) | முறையான பெறுகை நடைமுறைகளைப் பின்பற்றாது சாத்திய வள ஆய்வின் ஒரு பகுதியான சுற்றாடல் தாக்க மதிப்பீட்டு அறிக்கையினைத் தயாரிப்பதற்காக ஒரு தனியார் கம்பனியுடன் உடன்படிக்கை செய்து கொள்ளப்பட்டிருந்ததுடன் அதன் கீழ் 2023 திசெம்பர் 31 ஆந் திகதி வரை ரூபா 5,150,880 செலுத்தப்பட்டிருந்தது. அமைச்சரவை தீர்மானத்தின் பிரகாரம் சுற்றாடல் அமைச்சரின் அவதானிப்புக்களில் குறிப்பிட்டவாறு சுற்றாடல் தாக்க ஆய்வு நடைமுறையும் தொடக்க ஆய்விற்குள் | சாத்தியவள ஆய்வின் போது தொடக்கத்தில் செய்யப்படுவது செயற்திட்டத்தின் சாத்தியவள ஆய்விற்குரிய விடயங்களை ஆய்வுசெய்வதாகும். இதன் போது சுற்றாடல் ஆய்வில் எதிர்பார்க்கப்படுகின்ற சில விடயங்களுக்குரிய விபரங்களைப் பெற்றுக்கொள்ளலாம். சுற்றாடல் ஆய்வு என்பது தனியான ஆய்வு நடவடிக்கையாகும். இந்த ஆய்வுகளானது அச்செயற்பாடுகளின் விசேட அளிவினைக் கொண்ட நபர்களால் மேற்கொள்ளப்படுவதுடன் ஒரே உடன்படிக்கையின் கீழ் இந்த இரண்டு | சுற்றாடல் தாக்க ஆய்வு நடைமுறையினை தொடக்க ஆய்வினுள் உள்ளடக்காது அதற்காக கொடுப்பனவு செய்தமை சம்பந்தமாக ஒழுக்காற்று நடைமுறை பின்பற்றப்படுதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | உள்ளடக்கப்பட வேண்டியிருந்த போதிலும் அத்தீர்மானத்திற்கு மேற்கூறிய உடன்படிக்கை யினை அமுல்ப்படுத்தி முறையற்ற வகையில் கொடுப்பனவு செய்யப்பட்டிந்தது. | விடயங்களையும் ஆய்வுசெய்தல் நடைமுறை சாத்தியமற்றதாகும். இந்த சுவிஸ் செலேன்ஜ் முறைமையின் கீழ் தொடக்கத்திலேயே சாத்தியவள ஆய்வு செய்யப்பட்டுள்ளது. | |
| (vii) | உடன்படிக்கையின் பிரகாரம் சுற்றாடல் தாக்க ஆய்வு அறிக்கையானது 04 மாதங்களுக்குள் தயாரித்து முடிவுறுத்தப்பட வேண்டிய போதிலும் 2023 நவம்பர் 30 ஆந் திகதி வரை 10 சந்தர்ப்பங்களின் போது 04 ஆண்டுகள் 10 மாதங்கள் காலத்திற்காக காலநீடிப்பு வழங்கப்பட்டிருந்தது. | சாத்தியவள ஆய்வினை மேற்கொள்ளும் போது சில தரவுகள் சுற்றாடல் ஆய்வினை மேற்கொள்வதற்கு உடன்படிக்கை செய்துள்ள நிறுவனத்திற்கு வழங்கும் போது தாமதங்கள் ஏற்பட்டுள்ளன. விசேடமாக மீள்குடியிருக்கும் செயற்பாட்டின் போது உரிய நிலத்தை தெரிவுசெய்தல், ஏனைய வரிசை அமைச்சுக்களிடமிருந்து அங்கீகாரத்தினைப் பெற்றுக்கொள்ளல், அறிக்கைகளைச் சமர்ப்பித்து மீளாய்வு செய்து தயாரித்தல் போன்ற விடயங்களின் போது குறிப்பிடத்தக்க அளவான தாமதத்தினால் இந்த உடன்படிக்கை காலத்தினை நீடிக்க வேண்டி எற்பட்டுள்ளது. | சுற்றாடல் ஆய்வினை உரிய கால எல்லைக்குள் வழங்கப்படாமை சம்பந்தமாக நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (viii) | கும்புக்கன் ஓயா நீர்த்தேக்க செயற்திட்டம் தொடர்பாக சமூகரீதியான மதிப்பீட்டு அறிக்கை மற்றும் மீள் குடியேற்ற செயல்நடவடிக்கைத் திட்டம் என்பவற்றை ரூபா 4,008,750 தொகைக்கு தயாரிப்பதற்காக 2018 யூலை 20 ஆந் திகதி ஒரு தனியார் கம்பனியுடன் நீர்ப்பாசன பணிப்பாளர் நாயகம் உடன்படிக்கை செய்து கொண்டிருந்தார். உரிய அறிக்கையினையும் திட்டத்தினையும் 03 மாதங்களுக்குள் அதாவது 2018 ஒக்தோபர் 14 ஆந் திகதியில் முடிவுறுத்த வேண்டிய போதிலும் 2020 ஆகஸ்ட் 30 ஆந் திகதி வரை 04 சந்தர்ப்பங்களின் | சமூக மதிப்பீட்டு அறிக்கை மற்றும் மீளக் குடியமர்த்தும் செயல் நடவடிக்கைத் திட்டத்திற்குரிய செயலாற்றல் பிணைமுறி 2023-05-29 ஆந் திகதி வரை கால நீடிப்புச் செய்யப்பட்டுள்ளது. எனவே பிணைமுறியினை பணமாக்க வேண்டிய தேவை இல்லை. | முதலாவது வரைபு அறிக்கைக்கு கொடுப்பனவு செய்த மற்றும் கால நீடிப்பினை வழங்கிய உத்தியோகத்தர்கள் சம்பந்தமாக புலனாய்வினை மேற்கொண்டு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | போது 01 ஆண்டு 10 மாதங்கள் காலநீடிப்புச் செய்யப்பட்டிருந்தது. உரிய உடன்படிக்கையின் பிரகாரம் முதலாவது வரைபு அறிக்கை தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவின் மூலம் அங்கீகரித்ததன் பின்னர் உடன்படிக்கை செய்யப்பட்ட பெறுமதியில் 70 சதவீத தொகையினை செலுத்தலாம். 2019 ஏப்ரல் 02 ஆந் திகதி சமர்ப்பித்த வரைபு அறிக்கைக்காக தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவின் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட்டது என்பதற்கான தகவல் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட வில்லை. அவ்வாறு இருந்தும் உடன்படிக்கைக்கு முரணாக மொத்த உடன்படிக்கை பெறுமதியில் 85 சதவீதம் 2018 ஆம் ஆண்டிலிருந்து 2022 ஆம் ஆண்டு வரை அதாவது ரூபா 3,778,247 தொகை செலுத்தப்பட்டிருந்தது. | | |
| (ix) | செயற்திட்டம் தொடர்பான சாத்தியவள ஆய்வு அறிக்கை சுற்றாடல் தாக்க மதிப்பீட்டு அறிக்கை, மீள் குடியேற்றசெயல் நடவடிக்கைத் திட்டம் என்பவற்றை தயாரிக்கும் நடவடிக்கை 2017 சனவரி மாதத்தின் பின்னர் ஆரம்பிக்கப்பட்டிருந்தும் 2017 சனவரி 28 ஆந் திகதி செயற்திட்டத்தின் தொடக்க விழாவினை நடாத்தி அதற்காக நீர்ப்பாசன திணைக்களத்தின் செலவுத் தலைப்பின் கீழ் ரூபா 22,771,296 செலவு செய்யப்பட்டிருந்தது. அதற்கிணங்க செயற்திட்டத்தின் தொடக்க நடவடிக்கைகளை மேற்கொள்ளாது தொடக்க விழாவினை நடாத்தி அதற்காக முறையான அங்கீகாரமின்றி செலவு | தொடக்க விழாவானது விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரினால் கௌரவ சனாதிபதி அவர்களுக்கு விடுக்கப்பட்ட அழைப்பிற்கு இணங்க நடாத்தப்பட்டது. கௌரவ சனாதிபதி அவர்கள் வருகை தருவதனால் இதனை தேசிய மட்டத்திலான ஒரு விழாவாக ஒழுங்குபடுத்தும் நடவடிக்கையினை மேற்கொள்ள வேண்டியிருந்தது. அதற்காக விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சர் மற்றும் நீர்ப்பாசன அமைச்சின் செயலாளரினால் தேவையான அறிவுறுத்தல்கள் நீர்ப்பாசனத் திணைக்களத்திற்கு வழங்கப்பட்டிருந்தது. அதற்கிணங்க தயாரித்த மதிப்பீட்டினை அங்கீகரித்து விழா நடவடிக்கைகள் | செயற்திட்டத்தின் தொடக்க நடவடிக்கைகளை மேற்கொள்ளாது தொடக்க விழாவிற்காக செலவு செய்த உத்தியோகத்தர்கள் சம்பந்தமாக புலனாய்வினை மேற்கொண்டு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | செய்யப்பட்டிருந்தது. | மேற்கொள்ளப்பட்டன. | |
| (x) | பெறுமதி சேர் விரியினை கொடுப்பனவு செய்வதற்கு பதிவுசெய்யப்பட வேண்டிய மொத்த கிரயம் 2020 சனவரி 01 ஆந் திகதியிலிருந்து அதிகரிக்கப்பட்டிருந்ததனால் தனியார் கம்பனி 2020 சனவரி 01 ஆந் திகதியிலிருந்து பெறுமதி சேர் வரிக்கு (VAT) தொடர்பு அற்ற ஒரு நிறுவனம் என உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் இணையதளத்தின் மூலம் தெரிவிக்கப்பட்டிருந்தது. அது தொடர்பாக கவனத்திற்கு எடுத்துக்கொள்ளாது அந்த நிறுவனத்திற்கு 2020 ஆம் ஆண்டின் போது ரூபா 160,350 தொகை VAT ஆகச் செலுத்தப்பட்டிருந்தது. அதில் ரூபா 112,245 தொகை மாத்திரம் மீண்டும் அறவிடப்பட்டிருந்ததுடன் அதனையும் ஒரு வருமானமாக எடுத்துக்கொள்வதற்குப் பதிலாக மூன்றாம் தரப்பினருக்கு மீளக் கொடுப்பனவு செய்வதற்காக தற்காலிகமாக நிறுத்திவைக்கப்பட்ட 6000-0-0-13-0-36-0 ஆம் இலக்க பொது வைப்புக் கணக்கில் வைப்புச் செய்யப்பட்டிருந்தது. | இதன் போது மேலதிகமாக செலுத்தப்பட்ட ரூபா 112,245 பணம் அறவீடு செய்யப்பட்டிருந்தது. | பதிவுசெய்தலினை பரீட்சிக்காது பெறுமதி சேர் வரியினை செலுத்திய உத்தியோகத்தர்கள் சம்பந்தாமக நடவடிக்கை எடுக்க வேண்டியதுடன் அறவீடு செய்த பெறுதியை திறைசேரிக்கு அனுப்பிவைத்தல் வேண்டும். |
| (xi) | செயற்திட்டத்தின் தொடக்க மதிப்பீட்டு அறிக்கைகளான சாத்தியவள ஆய்வு அறிக்கை, சுற்றாடல் தாக்க மதிப்பீட்டு அறிக்கை சமூக தாக்க மதிப்பீட்டு மற்றும் மீளக் குடியமர்த்தல் திட்டம் ஆகிய தொடக்க அறிக்கைகள் அங்கீகரிக்கப்பட்டு செயற்திட்டத்தினை ஆரம்பிப்பதற்கு முன்னர் கும்புக்கன் ஓயா நீர்த்தேக்க செயற்திட்டத்தின் கீழான தெனல்லந்த, இத்தேகடுவ ஆகிய 02 குளங்களின் கீழ் பள்ளத்தாக்கு அபிவிருத்தி | வான் கதவுகளுக்காக அங்கீகரிக்கப்பட்ட மதிப்பீட்டில் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள 1:2:4 கொங்கிரீட் அளவானது 62.4m3 ஆகும். MON/216/54 ஆம் இலக்க அளவீட்டு புத்தகத்தில் குறிப்பிட்டுள்ள வேலைகள் முடிவுறுத்தப்பட்ட கொங்கிரீட்டின் அளவு 25.11 m3 ஆகும். வான் கதவுகளை நிர்மாணிப்பதற்குரிய அங்கீகரிரித்த மதிப்பீட்டில் வான் கதவுகளின் மறைப்பினை நிர்மாணிப்பதற்குரிய விடயங்கள் | செயற்திட்டத்தின் தொடக்க அறிக்கையினை அங்கீகரிப்பதற்கு முன்னர் அபிவிருத்தி நடவடிக்கைகளை ஆரம்பித்தல் மற்றும் பிழைகளைக் கொண்ட மதிப்பீட்டினை தயாரித்து அங்கீகரித்த உத்தியொகத்தர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | நடவடிக்கைகளை நிறைவேற்றுவதற்கு ரூபா 95,262,039 செலவு செய்யப்பட்டிருந்தது. அவ்வாறு அபிவிருத்தி செய்யப்பட்ட தெனகல்லந்த குளத்தின் கீழ் பள்ளத்தாக்கின் அபிவிருத்தி நடவடிக்கைகளின் பிரச்சினைகளாக வான் கதவிலிருந்து 100 மீற்றர் தூரத்திற்கு கொங்கிரீட் மேடையானது திட்டமிட்டவாறு பூர்த்தி செய்யப்படாமை, வான் கதவின் மறைப்பு நிர்மாணிக்கப்படாமை, வான் வான் கதவின் கதவுகளை திறக்கும் கிரேடர்களுக்கு GI குழாய்கள் போடுதல், குளக்கட்டின் புற்கற்கள் பிடித்தல் முறைப்படியாகச் செய்யப்படாமை, குளத்திற்குள் ஒரு பக்கத்தில் மாத்திரம் சேற்று மண்ணை அகற்றி குளத்தில் அடுத்த பக்கத்தில் சேற்று மண் அகற்றப்படாதிருந்தமை மற்றும் குளத்தை புனரமைப்புச் செய்ததன் பின்னர் விவசாய அமைப்பிடம் ஒப்படைக்கப்பட்டிருக்காமை ஆகிய விடயங்கள் அவதானிக்கப்பட்டன. | உள்ளடக்கப்படவில்லை.இதற் குரிய rod இனை வழங்குதல் மதிப்பீட்டில் உள்ளடக்கப்படவில்லை. | |
| (xii) | நிதி பொருளாதார ஸ்திரத்தன்மை மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சினால் 2023 மே 31 ஆந் திகதி சமர்ப்பித்த අමප/23/1028/604/010- I ஆம் இலக்க அமைச்சரவை விஞ்ஞாபனத்தின் பிரகாரம் செயற்திட்ட முகாமைத்துவ பிரிவு 2023 மே 31 ஆந் திகதியின் பின்னர் முடிவுறுத்தப்பட வேண்டியதாகும். செயற்திட்ட செயற்பாடுகளை தொடர்ந்தும் மேற்கொள்வதற்கான பொறுப்பு மொனராகலை பிராந்திய நீர்ப்பாசன அலுவலகத்திற்கு ஒப்படைப்பதற்கும் காணிகள் சம்பந்தமாக பிரதேச செயலாளர்களுடன் | ஒப்படைப்பதற்குரிய ஆவணங்கள் முறைப்படியாகத் தயாரிக்கப்பட்டுள்ளதுடன் ஒப்படைத்தல் முறைப்படியாக இடம்பெற்றுள்ளது. செலவுகள் தொடர்பாக வகைப்படுத்தலுடன் தயாரிக்கப்பட்ட செயற்திட்டத்தின் இறுதிக் கணக்குகள் நிறைவேற்றப்பட்ட ஒவ்வொரு செயற்பாடுகள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட கிரயம் மற்றும் அதன் கீழ் நிறைவேற்றப்பட்ட செயற்பாடுகளைக் காட்டும் செயல்முன்னேற்ற அறிக்கை, செயற்திட்டத்திற்குரிய நிலையான சொத்துக்கள் | செயற்திட்ட முகாமைத்துவ பிரதியை மொனராகலை நிர்பாசன பணிப்பாளரக்கு ஒப்படைத்தமைக்குரிய எழுதுகருவிகளை முறைப்படியாக தயாரித்தல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| தொடர்புகொண்டு மேலதிக நடவடிக்கைகள் எடுப்பதற்கும் நீர்ப்பாசன செயலாளருக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. அதற்கிணங்க செயற்திட்ட முகாமைத்துவ பிரிவு மொனராகலை நீர்ப்பாசன பணிப்பாளருக்கு ஒப்படைக்கப்பட்டிருந்தும் அந்த ஒப்படைப்பிற்குரிய ஆவணங்கள் முறைப்படியாக தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | பொருள் பதிவேட்டுப் பொருட்கள், மிகுதியாக உள்ள எழுதுகருவிகள் மற்றும் பொதுப் பாவனைப் பொருட்களை முறைப்படியாக நீர்ப்பாசன பணிப்பாளர் அலுவலகத்திற்கும் மொனராகலை பிராந்திய நீர்ப்பாசன பொறியியலாளர் அலுவலகத்திற்கும் ஒப்படைத்தல், செயற்திட்டத்திகுரிய அறிக்கைகளை நீர்ப்பாசன பணிப்பாளர் நாயகத்திற்கு ஒப்படைக்கும் பிரதி, காணிகளை சுவீகரிப்பதற்காக பிரதேச செயலகங்களில் வைப்புச் செய்யப்பட்ட பணத்தை மீள வழங்குமாறு பிரதேச செயலாளருக்கு தெரியப்படுத்தும் கடிதம், அதற்கிணங்க மெதகம பிரதேச செயலகத்தினால் 234918 ஆம் இலக்க ரூபா 11,277,500 பெறுமதியான காசோலைகளின் மூலம் வைப்புச் செய்யப்பட்ட பணத்தை மீள ஒப்படைத்துள்ளமை , அலுவலக ஆவணங்களை முறைப்படியாக ஒப்’படைத்தல். | |

**(ஆ) குடாவிலச்சிய நீர்த்தேக்கத்தினை புனரமைப்புச் செய்தல்**

| | | |
|---|---|---|
| 2021 - 2023 காலத்தில் ரூபா 6,000 மில்லியன் மதிப்பீட்டின் கீழ் குடாவிலச்சிய நீர்த்தேக்கத்தினை அபிவிருத்தி செய்வதற்குத் திட்டமிடப்பட்டிருந்ததுடன் 2023 திசெம்பர் 31 வரை ரூபா 162.14 மில்லியன் செலவு செய்யப்பட்டிருந்தது. பெரிய அளவிலான அபிவிருத்தி செயற்திட்டங்களை மீள தந்திரோபாயப்படுத்துதல் மற்றும் துரிதப்படுத்துதல் (RAMP) குழுவின் சிபாரிசின் அடிப்படையில் இச்செயற்திட்டத்தினை 2023 ஆம் ஆண்டிலிருந்து | குறிப்பிடப்பட்ட உரிய விடயங்கள் சரியானதாகும். | அனைத்து செயற்திட்டங்கள் தொடர்பாகவும் மீளாய்வு செய்து முன்னுரிமையை அடையாளங்கண்டு செயற்திட்டங்களை மீளத் தந்திரோபாயப்படுத்துதல் மற்றும் துரிதப்படுத்துதல் (RAMP) குழுவிற்கு சமர்ப்பித்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | அமுல்ப்படுத்தாமல் இருப்பதற்கு தீர்மானிக்கபட்டிருந்தது. அதற்கிணங்க செயற்திட்டத்திலிருந்து எதிர்பார்த்த பிரதிபலன்களாக அடையாளங்காணப்பட்ட அனுராதபுரம் மாவட்டத்தில் 25,000 நபர்களுக்கு சுத்தமான குடிநீரினை வழங்குதல் மஹவிலச்சிய பெரிய பாசனத் திட்டத்தின் பயிர் அடர்த்தியினை 1.57 இலிருந்து 2.0 வரை அதிகரித்தல், யானை மனித பிரச்சினையை குறைத்தல், தொல்பொருள் இடங்கள் மேலும் அழிவடைவதிலிருந்து பாதுகாத்தல், அனுராதபுரத்திலுள்ள உத்தேச மருந்து வலயத்திற்காக நீரினை வழங்குதல், வில்பத்து தேசிய பூங்காவில் காட்டு மிருகங்களுக்குத் தேவையான நீர் வசதிகளை வழங்குதல் மற்றும் மோதரகம் ஆற்றின் சுற்றாடல் சமத்துவத்திற்காக நீர் ஓட்டத்தினை சான்றுபடுத்துவதற்கு முடியாதிருந்தது. | | |
| (இ) | வடமாராச்சிய தாம்போதியில் நீர் வளங்களை அபிவிருத்தி செய்வதன் மூலம் யாழ்ப்பாண தீபகற்பத்திலுள்ள மக்களுக்கு குடிநீரினை வழங்குவதற்காக 2019 ஆம் ஆண்டின் போது உள்நாட்டு நிதியத்திலிருந்து ரூபா 2,000 மில்லியன் மதிப்பீட்டுக் கிரயத்தின் கீழ் ஒரு செயற்திட்டத்திட்டத்தினை ஆரம்பித்து அந்த ஆண்டின் போதே முடிவுறுத்துவதற்கு நிர்ணயிக்கப்பட்டிருந்தும் 03 ஆண்டுகளின் பின்னர் 2021 திசெம்பர் 31 ஆந் திகதி வரை செயற்திட்டத்திற்காக ரூபா 28 மில்வியன் செலவு செய்ததன் பின்னர் செயற்திட்டம் கைவிடப்பட்டிருந்தது. | யாழ்பான தீபகற்பத்திலுள்ள மக்களுக்கு குடிநீரினை வழங்குவதற்காக சில செயற்திட்டங்கள் உத்தேசிக்கப்பட்டிருந்ததுடன் இது அதில் ஒரு செயற்திட்டமாகும். இச்செயற்திட்டத்திற்குரிய தொடக்க ஆய்வு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருந்தும் உத்தேச செயற்திட்டத்தினை முன்னுரிமைப்படுத்தும் போது இச்செயற்திட்டத்திற்கு ஆகக் குறைந்த முன்னுரிமை கிடைத்ததன் அடிப்படையில் செயற்திட்டத்தின் மேலதிக நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியாதுள்ளது. | செயலாற்றல் அறிக்கையில் இச்செயற்திட்டம் தொடர்பான தகவல்களை உள்ளடக்கி அதற்கான காரணத்தை காட்டுதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஈ) | மொனராகலை மாவட்டத்தில் துரித நீர்ப்பாசன அபிவிருத்தி செயற்திட்டத்தின் கீழ் (வெல்லஸ்ஸ நவோதய) நிதி ஏற்பாட்டு எல்லையினை மிகைத்து அங்கீகரிக்கப்பட்ட மதிப்பீட்டின் மூலம் ரூபா 189 மில்லியன் செலவு செய்து ஆரம்பிக்கப்பட்ட 09 செயற்திட்டங்கள் இடை நடுவில் கைவிடப்பட்டிருந்தன. | வெல்லஸ்ஸ நவோதய அபிவிருத்தி செயற்திட்டத்தின் வேலைகளானது பெரிய அளவிலான அபிவிருத்தி செயற்திட்டங்களை மீளத் தந்திரோபாயப்படுத்துதல் மற்றும் துரிதப்படுத்துதல் குழுத் (RAMP) தீர்மானம் சம்பந்தமான பிரதம மந்திரியின் செயலாளரின் PMO/DEV-11/01/01/MTG/SEP-02 ஆம் இலக்க 2022 ஒக்தோபர் 07 ஆந் திகதிய கடிதத்திற்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இச்செயற்திட்டத்தின் சில நிர்மாண வேலைகள் நிறுத்தப்பட்டுள்ளது எனத் தோன்றுவதுடன் அது சம்பந்தமாக ஆராய்நது பார்த்து நடவடிக்கை எடுப்பேன். | செயலாற்றல் அறிக்கைக்கு செயற்திட்டம் தொடர்பான தகவல்களை உள்ளடக்கி அதற்கான காரணத்தை காட்டுதல் வேண்டும். நிதி ஏற்பாட்டு எல்லையினை மிகைத்து மதிப்பீட்டினை அங்கீகரித்த உத்தியோகத்தர்கள் சம்பந்தமாக நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (உ) | தலுக்கல குளத்தினை புவிச்சரிதவியல் பரீட்சிப்பிற்காக 2022 ஆம் ஆண்டில் ரூபா 3,190,000 மதிப்பீடு அங்கீகரிக்கப்பட்டு செலவு செய்யப்பட்டிருந்தும் அக்குளத்தினை நிர்மாணிப்பதற்குரிய தொடக்க நடவடிக்கை எதுவும் ஆரம்பிக்கப்படாது இடைநடுவில் நிறுத்தப்பட்ட தன் காரணமாக மேற்கொள்ளப்பட்ட செலவு சிக்கனமற்றதாக இருந்தது. | அது சம்பந்தமான விபரத்தை வழங்குமாறு தெரிவிக்கப்பட்டது. | செயலாற்றல் அறிக்கையில் இச்செயற்திட்டம் தொடர்பான தகவல்கள் உள்ளடக்கப்படுதல் வேண்டும். |
| (ஊ) | நீர்ப்பாசனத் திணைக்களத்தின் திட்டப் பிரிவின் மூலம் சாத்தியவள ஆய்வு மேற்கொள்ளப்பட்டுள்ள 13 செயற்திட்டங்கள் அதாவது பெதியாகொடயில் அமைந்துள்ள நீர்ப்பம்பி நிலையத்தை நிர்மாணித்தல், கெகிரியோபட மேலதிக நீர் வெளிச்செல்லலினை நிர்மாணித்தல், களணி வெள்ளப் பாதுகாப்பு திட்டத்தின் நிகவேலயில் வெள்ளநீர் வெளியேற்றத்தின் கட்டமைப்பினை | பெதியாகொட நீர்ப்பம்பி நிலையத்தை நிர்மாணித்தல் - கிரயம் அதிகரித்ததன் காரணமாக மீண்டும். அமைச்சரவை அங்கீகாரத்திற்காகச் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. கெகிரிஓபட செயற்திட்டத்தின் மேலதிக நீர் வெளியேற்றத்தினை நிர்மாணித்தல் நீர் வழங்கல் சபையின் நிதி ஏற்பாட்டின் அடிப்படையில் நிர்மாணிக்கும் எதிர்பார்ப்பில் நிர்மாண வேலைகள் ஆரம்பிக்கப்படவில்லை. | செயற்திட்ட கிரயம் மற்றும் நிறைவேற்றப்படுகின்ற செயற்பாடுகள் தொடர்பாக விபரமான அறிக்கையை தயாரித்து பொறுப்புக்கூற வேண்டிய உத்தியோகத்தர்களுக் கு அனுப்பிவைத்தல் வேண்டும். முன்னுரிமை அடிப்படையில் செயற்திட்டங்களை ஆரம்பிப்பதற்கு |

| | | | | |
|---|---|---|---|---|
| | | நிர்மாணித்தல், மையாவ குளத்தின் மேலதிக நீர் வெளியேற்றத்தினை மேம்படுத்துதல், மல்வத்துஓயா விற்கு குறுக்காக RCC பாலத்தை நிர்மாணித்தல், பெராரு அணையை நிர்மாணித்தல், குடா வெலச்சிய என்பவற்றை 2024 மே 31 வரை ஆரம்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்காததுடன் அவற்றிற்காக மேற்கொள்ளப்பட்ட செலவுகளை அடையாளங்காணக்கூடிய வகையில் கோவைகள் பேணப்பட்டிருக்கவில்லை. | களணி ஆற்றினை எதிர்காலத்தில் நிதி ஏற்பாடு கிடைப்பதன் அடிப்படையில் மேற்கொள்வதற்கு எதிர்பார்க்கப்பட்டது. மையாவ குளத்தின் மேலதிக நீர் வெளியேறுவதனை மேம்படுத்துதல் தற்பொழுது பூரணப்படுத்தப்பட்டுள்ளது. RCC பாலத்தினை நிர்மாணிகும் செயற்திட்டம் அமுல்ப்படுத்தப்படுவதுடன் எதிர்காலத்தில் நிதி ஏற்பாடு கிடைக்கும் முறைமைக்கு ஏற்ப நிர்மாண வேலைகள் எதிர்பார்க்கப்படுகின்றது. குடா வெலச்சிய நிறுத்தப்பட்டுள்ளது. எல்லே குளம் நிர்மாணிக்கப்பட்டு வருகின்றது. எலுவன்குளம் அணையை நிர்மாணித்தல் திட்டமிடப்பட்டுள்ளது. நிதி ஏற்பாடு கிடைத்ததன் பின்னர் ஆரம்பிக்கப்படும். விலலோட அணையை நிர்மாணித்தல் திட்டமிடப்பட்டுள்ளது. நிதி ஏற்பாடு கிடைத்ததன் பின்னர் நிறைவேற்றபடலாம். மல்வதுஓயா மேலதிக நீர் வெளியேற்றதிற்காக கேள்வி கோரப்பட்டுள்ளது. நிதி ஏற்பாடு கிடைத்ததன் பின்னர் நிறைவேற்றப்படும். | நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (எ) | **கிராமங்களுடன் நல்லுறவு நிகழ்ச்சித்திட்டத்தி**ன | | | |
| | (i) | கிராமங்களுடன் நல்லுறவு நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் அனுராதபுரம் மாவட்டத்தில் கெப்பிதிகொல்லாவ பிரதேச செயலாளர் பிரிவில் பதவிய வாஹல்கொட விவசாய தொழில் முயற்சிகளின் கால்வாய் முறைமையினை மேம்படுத்துவதற்காக ரூபா 116 மில்லியன் மதிப்பீடு செய்து அவற்றில் ரூபா 31.2 மில்லியன் செலவு செய்யப்பட்டிருந்தது. நிர்ணயிக்கப்பட்ட | கிராமங்களுடன் நல்லுறவு செயற்திட்டத்தில் பதவிய மற்றும் வாஹல்கொட விவசாய தொழில்முயற்சிகளின் கால்வாய் முறைமையை மேம்படுத்துதல் உத்தேசிக்கப்பட்டிருந்தது. இதன் கீழ் 4-6 அங்குல அளவுடைய குழாய்களை பயன்படுத்தி வயல்களுக்கு நீரினை எடுத்துச் செல்வதற்கு திட்டமிடப்பட்டிருந்ததுடன் இது தொடர்பாக 2,411 சிறிய கொங்கிரீட் குழாய்கள் ரூபா 31.2 மில்லியன் செலவு செய்து கொள்வனவு செய்து தற்பொழுது விவசாய அமைப்புக்களுக்கு வழங்கி செயற்பாடுகளை | முறையான அங்கீகாரத்தின் அடிப்படையில் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியதுடன் மேற்கொள்ளப்பட்ட கிரயத்திற்கு எதிர்பார்த்த பிரதிபலன்களை மக்கள் பெற்றுக்கொள்ளும் வகையில் செயற்திட்டத்தின் வேலைகளை பூர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | அங்கீகரித்தல் நடைமுறை பின்பற்றப்படாது ஆரம்பிக்கப்பட்ட மேற்கூறிய செயற்திட்டத்திற்காக 2023 ஆம் ஆண்டில் நிதி ஏற்பாடு கிடைத்திருக்காததுடன் எதிர்பார்த்தவாறு பூர்த்திசெய்வதற்கு முடியாது இடைநடுவில் நிறுத்தப்பட்டதன் காரணமாக மேற்கொள்ளப்பட்ட கிரயம் விளைவற்றதாக இருந்தது. | நிறைவேற்றுவதற்கு திட்டமிடப்பட்டிருந்தது. இச்செயற்திட்டத்திற்கு தேசிய கொள்கை வகுத்தல் திணைக்களத்தின் அங்கீகாரத்தினைப் பெற்றுக்கொள்வது தொடர்பாக தேவையான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. | |
| (ii) | கிராமங்களுடன் நல்லுறவு நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் விவசாய காணிகளுக்கு நீர் வழங்கல்களை நிர்மாணிப்பதற்கு திட்டமிடப்பட்டு அதற்கு தேவையான 2411 ஹியூம் குழாய்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்ததுடன் அவற்றில் 1,245 குழாய்கள் விவசாய அமைப்புக்களுக்கு வழங்கப்பட்டிருந்தும் அவற்றின் மூலம் எதிர்பாரத்த நீர் வழங்கல்கள் நிர்மாணிக்கப்பட்டிருக்க வில்லை. மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு 1,166 ஹியூம் குழாய்கள் பதவிய நீர்ப்பாசன பொறியியலாளர் அலுவலகத்தில் பயன்படுத்தப்படாது வைக்கப்பட்டிருந்தன. | இச்செயற்திட்டத்திற்காக பிந்திய காலப் பகுதியில் நிதி ஏற்பாடு கிடைக்காமையால் அவை தொடர்பான மிகுதி வேலைகளை மேற்கொள்வதற்கு முடியாதிருந்தது. இதற்காக மாற்றீடு இல்லாததனால் அந்த 1592 குழாய்களையும் விவசாய அமைப்புக்களுக்கு வழங்கி அவை துறையின் நீர் வழங்கல் நடவடிக்கைகளுக்காக ஈடுபடுத்தப்பட்டிருந்தது. மிகுதிக் குழாய்களையும் எதிர்காலத்தில் விவசாய அமைப்புக்களுக்கு வழங்கி தேவையான நீர் வழங்கல்களை நாளதுவரையாக்குவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. | கொள்வனவு செய்த ஹியூம் குழாய்களை திட்டமிட்டவாறு பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 3.4 செயற்திட்டங்களை நிறைவேற்றுவதில் தாமதங்கள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | திணைக்களத்தின் கீழ் அமுல்ப்படுத்தப்படுகின்ற ரூபா 128,942 மில்லியன் மதிப்பீட்டுப் பெறுமதியான 09 அபிவிருத்திச் செயற்திட்டங்கள் திட்டமிடப்பட்ட காலத்தினை மிகைத்திருந்தும் பூர்த்திசெய்யப்பட்டிருக்கவில்லை. 2012 ஆம் ஆண்டிலிருந்து ஆரம்பிக்கப்பட்ட அச்செயற்திட்டங்களின் காலத்தை நீடிப்பதற்காக பல சந்தர்ப்பங்களில் அமைச்சரவை அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்தும் தாமதங்களின் காரணமாக செயற்திட்ட குறிக்கோள்களின் கீழ் அடையாளங்காணப்பட்ட நலன்களை திட்டமிட்டவாறு பெற்றுக்கொள்வதற்கு முடியாதிருந்தது. அது தொடர்பான பகுப்பாய்வினை அமைச்சரவைக்கு சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | கும்புக்கன் ஓயா நீர்த்தேக்க செயற்திட்டம் - RAMP குழு தீர்மானத்தின் பிரகாரம் வேலைகள் நிறுத்தப்பட்டுள்ளன. யான்ஓயா நீர்த்தேக்க செயற்திட்டம் - வயல் காணிகளை வழங்குதல் மற்றும் அத்தியவசியமான புனரமைப்பு நடவடிக்கைகளை 2024 ஆம் ஆண்டில் பூர்த்திசெய்வதற்கு எதிர்பார்க்கப்பட்டது. காணிகளுக்காக இழப்பீட்டினை செலுத்தும் நடவடிக்கை இடம்பெற்று வருகின்றது. மொரான நீர்த்தேக்க செயற்திட்டம் - காணிகளுக்காக இழப்பீட்டினை செலுத்தும் நடவடிக்கை இடம்பெற்று வருகின்றது. முந்தெனி ஆறு செயற்திட்டம் - AFD கடன் உடன்படிக்கை அங்கீகரிக்கப்படவில்லை. காணிகளை சவீகரிக்கும் நடவடிக்கை இடம்பெற்று வருகின்றது. வெல்லஸ்ஸ நவோதய செயற்திட்டம் - RAMP குழுவின் தீர்மானத்தின் பிரகாரம் நிறுத்தப்பட்டுள்ளது. உமா ஓயா செயற்திட்டம் - செயற்திட்டத்தின் வேலைகளில் 90 சதவீதம் பூர்த்திசெய்யப்பட்டுள்ளதுடன் 2024 ஆம் ஆண்டின் இறுதியில் வேலைகளைப் பூர்த்திசெய்வதற்கு எதிர்பார்க்கப்பட்டது. மஹகல்கமுவ பாசனக் கால்வாயின் சில நிர்மாண வேலைகள் இடையில் நிறுத்தப்பட்டுள்ளன. கொடிகமுவ செயற்திட்டம் - மதிப்பீட்டினைத் திருத்தம் செய்வதற்காக அமைச்சரவை | இது தொடர்பாக போதியளவு பகுப்பாய்வினை மேற்கொண்டு அமைச்சரவைக்கு அறிக்கையிடப்படுதல் வேண்டும். |

அங்கீகாரத்திற்குச் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

**(ஆ) உமா ஓயா கீழ் பள்ளத்தாக்கு அபிவிருத்தி செயற்திட்டம்**

| | | | |
|---|---|---|---|
| (i) | 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நீர்ப்பாசன திணைக்களம் வழங்கிய செயலாற்றல் அறிக்கையின் பிரகாரம் இதன் திரண்ட நிதி செயலாற்றல் ரூபா 15,130.40 மில்லியனாக இருந்ததுடன் செயற்திட்டத்தின் மூலம் எதிர்பார்த்த பிரதிபலன்கனான 4,500 ஹெக்டயர் புதிய காணிகளுக்கும் தற்பொழுது காணப்படுகின்ற 1,500ஹெக்டயர் காணிகளுக்கும் பாசன நீர் வசதிகளை வழங்குவதற்கு திட்டமிடப்பட்டிருந்தும் இன்றுவரை 750 ஹெகடயர் அளவிலான புதிய வயல் காணிகளில் பயிர்ச்செய்கை மேற்கொள்வதற்கு பாசன வசதிகள் மேற்கொள்ளப்பட்டிருந்தது. அதற்கிணங்க திட்டமிடப்பட்ட 5,250 ஹெக்டயர் அல்லது 87.5 சதவீதத்திற்கு நீர் வழங்கப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே மொனராகலை மற்றும் ஹம்பாந்தோட்டை மாவட்டங்களுக்காக 30 மில்லியன் கன மீற்றர் குடிநீர் மற்றும் கைத்தொழில் நீரினை வழங்குதல், கால்நடை பண்ணைகள் மற்றும் நன்னீர் மீன்பிடி அபிவிருத்தி, நவீன தொழில்நுட்ப அறிவினை பரிமாற்றம் செய்தல் மற்றும் 54 சிறிய குளங்களை மேம்படுத்துதல் மற்றும் 110 குளங்களுக்கு நீரினை வழங்கும் குறிக்கோளில் செயற்திட்டம் | செயற்திட்டத்தின் எதிர்பார்த்த பிரதிபலன்கள் பகுதிபகுதியாக கிடைத்துக் கொண்டிருக்கின்றன. செயற்திட்டத்தன் கீழ் பயிர்ச்செய்கை மேற்கொள்ளப்படுகின்ற பிரதேசங்களை தற்பொழுது அடையாளங்கண்டு அவற்றினை படம் வரைதல் இடம்பெற்று வருகின்றது. பெரிய அளவிலான அபிவிருத்தி செயற்திட்டங்களை மீண்டும் தந்திரோபாயப்படுத்துதல் மற்றும் துரிதப்படுத்துதல் (RAMP) குழுவின் திர்மானம் மற்றும் 2022 ஒக்தோபர் 07 ஆந் திகதிய கடிதத்தின் பிரகாரம் செயற்திட்டத்தின் அடையாளங்காணப்பட்ட அத்தியவசியமான வேலைகளுக்காக மாத்திரம் முன்னுரிமை வழங்கி இந்த ஆண்டில் முடிவுறுத்துவதற்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டது. 110 சிறிய குளங்களில் 65 குளங்கள் புனரமைப்புச் செய்வதற்கு தெரிவு செய்யப்பட்டுள்ளன. அவற்றில் 58 குளங்கள் தற்பொழுது புனரமைப்புச் செய்யப்பட்டுள்ளன. | எதிர்பார்த்த பிரதிபலன்கள் கிடைக்கும் வகையில் செயற்திட்டத்தை துரிதமாக பூர்த்தி செய்வதற்கும் பாசன வசதிகளை வழங்குகன்ற புதிய வயல் காணிகள் மற்றும் காணப்படுகின்ற வயல் காணிகளை தனித்தனியாக அடையாளங்காணக்கூடிய வகையில் ஆவணங்களைத் தயாரித்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | ஆரமபிக்கப்பட்டு 11 ஆண்டுகள் கடந்திருந்த போதிலும் இன்றுவரை அடைந்துகொள்ளப்பட்டிருக்கவில்லை. | | |
| (ii) | நீர் மின்வலுவினை தோற்றுவித்ததன் பின்னர் விடுவிக்கப்படுகின்ற நீரினை கிரிந்தி ஓயா பள்ளத்தாக்கின் கமத்தொழில் நடவடிக்கைகளுக்காக ஈடுபடுத்துவதற்கு உரிய திட்டங்களை தயாரித்து அமுல்ப்படுத்தும் பொறுப்பு ஒப்படைக்கப்பட்டிருந்த நீர்ப்பாசனத் திணைக்களம் அதற்காக 2009 ஆம் ஆண்டிலிருந்து ஒரு பிரதி செயற்திட்ட பணிப்பாளரின் கீழ் அலிகொட ஆர நீர்த்தேக்கத்திலிருந்து 18 கிலோ மீற்றர் தூரத்தில் அமைந்துள்ள மீகஸ் ஆர குளத்தினூடாக கொண்டு வரப்படுகின்ற நீரினை 24+365 தூரத்தில் குடா ஓயா நீர்த்தேக்கத்திற்கு கொண்டுவரப்பட்டதன் பின்னர் பிரியந்தகே குளம் வரை கொண்டு வருவதற்கு திட்டமிடப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் மீகஸ் ஆர குளம் வரை நீரினை கொண்டு செல்லக் கூடிய வகையில் கீழ் பள்ளத்தாக்கினை அபிவிருத்தி செய்யும் நடவடிக்கையை பூர்த்திசெய்யாமையின் காரணமாக அலிகொட ஆர நீர்த்தேக்கத்திலிருந்து விடுவிக்கப்படுகின்ற நீரினை மீகஸ்ஆரஅ குளம் வரை | புதுருவகல பள்ளத்தாக்கு பூர்த்திசெய்யப்பட்டதன் பின்னர் மீகஸ் ஆரகுளம் வரை நீரை எடுத்துச் செல்லலாம். கால்வாயினைத் தயார்படுத்தும் போது காணிகளைச் சுவீகரித்தல், கிடைக்கின்ற நிதி ஏற்பாடு மட்டுப்படுத்தப்பட்டுள்ளதாக இருத்தல், வன பாதுகாப்பு திணைக்களத்தால் மரங்களை அகற்றுதல், ஏனைய தொழில்நுட்ப ரீதியான பிரச்சினையால் இந்த நிர்மாண நடவடிக்கைகளுக்கு தடைகள் ஏற்பட்டிருந்தது. எனினும் தற்பொழுது பிரதான கால்வாயின் நிர்மாணங்களை துரிதமாக இடம்பெறுவதுடன் அச்செயற்பாடுகளை அடுத்துவரும் சில மாதங்களுக்குள் பூர்த்திசெய்வதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. அதற்கிணங்க மீகஸ் ஆர குளத்திற்கு நீர் வழங்கப்படுகின்றது. | தொடக்க திட்டத்திற்கு இணங்க செயற்திட்ட நடவடிக்கைகளை பூர்த்திசெய்து எதிர்பார்த்த பிரதிபலன்கள் கிடைக்கும் வகையில் பாசன வசதிககளை வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | எடுததுச்செல்ல முடியாதிருந்தது. | | |
| (iii) | பிரியன்தகே குளத்திலிருந்து 5.5 கிலோ மீற்றர் தூரத்தில் அமைந்துள்ள கெடும்கடே குளம் வரை இருக்கின்ற மலல ஆர குளத்தினை அபிவிருத்தி செய்வதற்கு அதன் பின்னர் பந்தகிரிய மற்றும் பஹல பத்தல வரை இருக்கின்ற 40 குங்களுக்கு நீரை எடுத்துச்செல்வதற்கும் திட்டமிடப்பட்டிருந்தது. எனினும் பிரியந்தகே குளத்துக்கு அப்பால் நீரினை எடுத்துச் செல்வதற்கு முடியுமான வகையில் கால்வாயினை அபிவிருத்தி செய்வதற்கு இன்றுறுவரை நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லைல. தெற்கு கரை கால்வாயின் கீழே பூர்த்திசெய்வதற்கு எதிர்பார்த்த செயற்பாடுகளை பூர்த்திசெய்வதற்கு இன்றுவரை நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லைல. தெற்கு கரை கால்வாயின் கீழே பூர்த்திசெய்வதற்கு எதிர்பார்த்த செயற்பாடுகள் இன்றுவரை பூர்த்திசெய்யப்படாமையின் காரணமாக உமா ஓயா நீர்த்தேக்கத்தின் நீரினை கிரிந்தி ஓயா நீர்த்தேக்கத்திற்கு திருப்பும் பிரதான குறிக்கோளான தென் மாகாணத்தில் அமைந்துள்ள | இச்செயற்திட்டத்தின் வேலைகளானது பெரிய அளவிலான அபிவிருத்தி செயற்திட்டங்களை மீண்டும் துரிதப்படுத்துதல் (RAMP) குழுவின் தீர்மானம் மற்றும் 2022 ஒக்தோபர் 07 ஆந் திகதிய கடிதத்திற்கு இணங்க செயற்திட்டத்தின் அடையாளங்காணப்பட்ட அத்தியவசியமான குளங்களுக்கு மாத்திரம் முன்னுரிமை வழங்கி நடவடிக்கை எடுக்க வேண்டி ஏற்பட்டது. எவ்வாறாயினும் கிரிந்தி ஓயா நீர்த்தேக்கத்திற்கு நீரினை வழங்க வேண்டிய தேவை ஏற்படுமாயின் அலிகொட ஆர நீர்த்தேக்கம் அமைந்திருப்பது கிரிந்தி ஓயாவின் உப ஆற்றினூடாக என்பதனால் அச்செயற்பாட்டினை அலிகொட ஆர நீர்த்தேக்கத்திலிருந்தே இலகுவாக செய்யலாம். | தொடக்க திட்டத்திற்கு இணங்க கால்வாயினை அபிவிருத்தி செய்து எதிர்பார்த்தவாறு பந்தகிரிய மற்றும் பஹலமத்தல வரையான 40 குளங்களுக்கு நீரினை வழங்குதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | காணிகளுக்கு நீரினை வழங்குவதற்கு முடியாதிருந்தது. | | |
| (iv) | உமா ஓயா கீழ் பள்ளத்தாக்கு அபிவிருத்தி செயற்திட்ட அலுவலகத்தின் கீழ் நிருவிகிக்கப்படுகின்ற குடா ஓயா, சிங்ஹலயா கம, ஹந்தபானகல மற்றும் வெல்லவாய ஆகிய 04 வதிவிட தொழில்முயற்சி பொறியியலாளர் அலுவலகங்கள் மற்றும் செயற்திட்டத்திற்கு இணைத்துக்கொள்ளப்பட்ட நிரந்தர ஆளணியுடன் செயற்திட்டத்தின் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. எனினும் காணிகளைச் சுவீகரித்தல், மீளக் குடியமர்த்துதல், இழப்பீட்டினைச் செலுத்துதல், புதிய வயல் காணிகளை பகிந்தளித்தல் ஆகிய நடவடிக்கைகளை நிருவகித்தல் மற்றும் செயற்படுத்துவதற்கு தேவையான முகாமைத்துவ தீர்மானம் எடுப்பதற்கு முக்கியத்துவமான தகவல் பதிவேடு அல்லது நாளதுவரையாக்கிய கணனிமயப்படுத்தப்பட்ட தகவல் முறைமை பேணப்பட்டிருக்கவில்லை. அதன் காரணமாக காணிகளைச் சுவீகரித்தல், மீளக் குடியமர்த்துதல், இழப்பீடு செலுத்துதல், புதிய வயல் காணிகளை பகிந்தளித்தல் என்பன அமைச்சரவையினால் | காணிகளை சுவீகரிக்கும் அனைத்து நடவடிக்கைகளும் செயற்திட்டத்தின் தொடக்கத்திலிருந்தே செயற்திட்ட பணிப்பாளர் அலுவலகம் மற்றும் பிரதேச செயலகங்களின் மூலம் இடம்பெறுகின்றது. உமா ஓயா கீழ் பள்ளத்தாக்கு செயற்திட்ட அலுவலகத்தின் மூலம் மேற்கொள்ளப்படுவதாவது காணிகளைச் சுவீகரிக்கும் நடவடிக்கைகளுக்காக செயற்திட்ட பணிப்பாளர் அலுவலகத்திற்கும் பிரதேச செயலகங்களுக்கும் உதவியளித்தல் மாத்திரமாகும். காணிகள் சம்பந்தமான அனைத்து கோவைகளும் செயற்திட்ட பணிப்பாளர் அலுவலகத்திடம் ாணப்படுதல் வேண்டும். | காணிகளை சுவீகரித்தல் மீளக்குடியமர்த்துதல், இழப்பீட்டினைச் செலுத்துதல், புதிய வயல் காணிகளைப் பகிர்ந்தளித்தல் ஆகிய நடவடிக்கைகளை நிருவகித்தல் மற்றும் செயற்படுத்துவதற்காக தேவையான முகாமைத்துவ தீர்மானம் எடுப்பதற்கு முக்கியமான தகவல் பதிவேடு அல்லது நாளதுவரையாக்கிய கணனிமயப்படுத்திய தகவல் முறைமையினை பேணுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | அங்கீகரித்த வரையறைகளுக்கு இணங்க உரிய நபர்களால் மேற்கொள்ளப்பட்டது. என்பதனை கணக்காய்வின் போது உறுதிப்படுத்திக்கொள்ள முடியாதிருந்தது. | | |
| (v) | செயற்திட்டத்திற்காக மொத்த கிரய மதிப்பீடு அங்கீகரிக்கப்பட்டிருக்காததுடன் பெறுகை வழிகாட்டிக் கோவையின் ஒழுங்குவிதிகளுக்கு முரணாக பிரதி செயற்திட்ட பணிப்பாளரின் தலைமைத்துவத்தினைக் கொண்ட பெறுகைக் குழுவின் அதிகார எல்லைக்கு நிகரான வகையில் ரூபா 50 மில்லியன் வீதம் செயற்திட்டத்தின் மதிப்பீட்டினை பகுதியாக்கி அங்கீகரித்து திட்டமிடப்படாது அமுல்ப்படுத்தப்பட்டிருந்தது. | இச்செயற்திட்டத்தின் முழுக் கிரயத்திற்குமாக அங்கீகரித்த மதிப்பீடு உள்ளது. அடையாளங்காணப்பட்ட வேலைப் பகுதிகளுக்காக மதிப்பீட்டினைத் தயாரித்து அங்கீகரித்த எல்லைக்குள் அச்செயற்பாட்டினை நேரடி வேலையாட்களைப் பயன்படுத்தி நிறைவேற்றப்பட்டுள்ளது. | பெறுகை வழிகாட்டிக் கோவையிலுள்ள ஒழுங்குவிதிகளுக்கு முரணாக நடவடிக்கை எடுத்த உத்தியொகத்தர்களுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (vi) | உமா ஓயா கீழ் பள்ளத்தாக்கு அபிவிருத்தி செயற்திட்டத்தின் கீழ் 2010 ஆம் ஆண்டில் அமைச்சரவைக்குச் சமர்ப்பித்த ரூபா 9,352.5 மில்லியன் மதிப்பீட்டின் கீழ் பூர்த்திசெய்வதற்கு எதிர்பார்க்கப்பட்ட செயற்பாடுகள் தொடர்பான உப செயற்பாடுகள் தனித்தனியாக அடையாளங்காணப்பட்டிருக்காததுடன் ஒவ்வொரு உப செயற்பாடுகளின் கீழுள்ள நிதி ஏற்பாட்டினை | உரிய ஆண்டிற்குள் தலைமை அலுவலகத்தின் மூலம் பிரதான மதிப்பீட்டின் உப விடயங்களுக்காக தனித்தனியாக நிதி ஏற்பாடு வழங்கப்பட்டது. துறையில் அந்த உப விடயங்கின் கீழ் மதிப்பீட்டினைத் தயாரித்து அவை அங்கீகரிக்கப்பட்டு வழங்கப்பட்ட நிதி ஏற்பாடு பகுதி பகுதியாக அந்த மதிப்பீட்டிற்காக ஒதுக்கீடு செய்யப்படும். இந்த உப மதிப்பீட்டின் கீழ் உள்ள விடயங்களுக்காக அந்த அளவினை மிகைக்காத வகையில் துறையின் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். இந்த அனைத்துக்குமாக உரிய | செயற்திட்டத்தின் கீழ் நிறைவேற்றப்பட்ட செயற்பாடுகள் மற்றும் மேற்கொள்ளப்பட்ட செலவுகள் தனித்தனியாக அடையாளங்காணக்கூடிய வகையில் ஆவணங்கள் தயாரிக்கப்படுதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | அங்கீகரிக்கும் போது முறையான ஆவணங்கள் பேணப்பட்டிருக்கவில்லை. அதன் காரணமாக செயற்திட்டத்தின் கீழ் உரிய காலப்பகுதிக்குள் நிறைவேற்றப்பட்ட செயற்பாடுகளும் அவற்றிற்காக மேற்கொள்ளப்பட்ட செலவுகளும் தனித்தனியாக அடையாளங்காணப்பட்டிருக்கவில்லை. | ஆவணங்கள் தனித்தனியாக பேணப்படும். அவ்வாறே மேற்கொள்ளப்படுகின்ற செலவுகள் மதிப்பீடு செய்த விடயங்களை மிகைக்காத வகையில் பேணப்படுகின்றது. | |
| (vii) | மேற்கூறிய செயற்திட்டத்திற்காக 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 14,945.28 மில்லியன் செலவு செய்யப்பட்டிருந்த போதிலும் முன்னுரிமையை அடையாளங்கண்டு முறையான திட்டத்திற்கு இணங்க நிர்மாணங்க் ஆரம்பிக்கப்படாமையின் காரணமாக பூர்த்திசெய்த கால்வாய்கள் நீரினால் அடித்துச்செல்லப்படல், கரைகளில் மண் அரிப்பு ஏற்படல், கால்வாய்கள் மற்றும் கொங்கிரீட் பள்ளத்தாக்குகளில் மண் நிரம்பியிருத்தல் முதலியவற்றை நல்ல நிலைமைக்கு கொண்டுவருவதற்காக மேலதிக நிதி ஏற்பாட்டினை செலவு செய்ய வேண்டி ஏற்பட்டிருந்தது. | செயற்திட்டம் சம்பந்தமாக தற்பொழுது பெரிய அளவிலான அபிவிருத்திச் செயற்திட்டங்களை மீண்டும் தந்திரோபாயப்படுத்துதல மற்றும் துரிதப்படுத:ததல் (RAMP) குழுவின் தீர்மானம் மற்றும் 2022 ஒக்தோபர் 07 ஆந் திகதிய கடிதத்தின் பிரகாரம் வழங்கப்பட்டுள்ள அறிவுறுத்தல்களுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. அதற்கிணங்க இசசெயற்திட்டத்தின் அத்தியவசியமான வேலைகளை 2024 ஆம் ஆண்டில் பூர்த்தி செய்வதற்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. சில பிரச்சினைகளின் காரணமாக வேலைகளை நிறுத்துதல் மற்றும் மீண்டும் ஆரம்பிப்பதற்கு முகங்கொடுக்க வேண்டி ஏற்படுகின்ற சந்தர்ப்பங்களில் மீண்டும் வேலைகளை ஆரம்பிக்கையில் துறையின் நிர்மாண வேலைப் பகுதிகளை மீண்டும் தயார்படுத்துவதற்கான சந்தர்ப்பங்களும் உள்ளன. | செயற்திட்டத்தின் முன்னுரிமையை அடையாளங்கண்டு நீர்ப்பாசன வேலைகள் மேற்கொள்ளப்பட வேண்டியதுடன் பூர்த்திசெய்யப்பட்ட கால்வாய்கள் நீரினால் அடித்துச் செல்லப்படுதல், கரைகளில் மண் அரிப்பு ஏற்படுதல், வால்வாய்களிலும் கொங்கிரீட் பள்ளத்தாக்குகளிலும் மண் நிரப்பி இருப்பதனைத் தவிர்ப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (viii) | 2022 ஆம் ஆண்டிலிருந்து செயற்திட்டத்தின் நடவடிக்கைகள் நீர்ப்பாசனத் திணைக்களத்திற்கு ஒப்படைக்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் அது சம்பந்தமாக செயற்திட்ட அலுவலகத்தினால் பயன்படுத்தப்பட்ட உபகரணங்களைப் பொறுப்பேற்பது சம்பந்தமாக தயாரிக்கப்பட்டுள்ள அறிக்கைகளின் பிரதி, பொறுப்பேற்கப்பட்ட திகதி வரை பூர்த்தி செய்யப்பட்டுள்ள செயற்பாடுகள் தொடர்பான செயலாற்றல் அல்லது செயல்முன்னேற்ற அறிக்கைகளின் பிரதி, செயற்திட்டத்தினை பொறுப்பேற்ற திகதி வரை மேற்கொள்ளப்பட்ட செலவுகள் என்பன தொடர்பான விபரத்தை உள்ளடக்கி சமர்ப்பிக்கப்பட்டுள்ள கணக்கு அறிக்கைகளின் பிரதி மற்றும் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பூர்த்திசெய்வதற்காக ஈடுபடுத்தப்பட்ட வேலைகளைப் பூர்த்திசெய்யும் திட்டம் முதலியவை சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | கணக்காய்வு அறிக்கைகளில் குறிப்பிட்ட சில விடயங்கள் சரியானவையாகும். செயற்திட்ட பணிப்பாளர் அலுவலகத்தினால் ஒப்படைக்கப்பட்ட பொருட்கள் செயற்திட்ட பிரதிப் பணிப்பாளர் அலுவலகத்தினால் பொறுப்பேற்கப்பட்டுள்ளது. செயற்திட்டத்தை பொறுப்பேற்ற சந்தர்ப்பத்தில் மேற்கொள்ளப்பட்ட செயற்பாடுகள் தொடர்பான அறிக்கை மற்றும் அதுவரை மேற்கொள்ளப்பட்ட செலவுகள் தொடர்பான விபரம் எழுத்துமூலம் கிடைக்கவில்லை. செயற்திட்டத்தினை 2022 ஆம் ஆண்டில் நீர்ப்பாசனத் திணைக்களம் பொறுப்பேற்றதன் பின்னர் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பூர்த்திசெய்வது தொடர்பான திட்டம் உள்ளது. | செயற்திட்டத்தை நீர்ப்பாசனத் திணைக்களத்திற்கு ஒப்படைக்கும் ஆவணங்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும். |

## 3.5 வெளிநாட்டு உதவி செயற்திட்டங்கள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | காலநிலை மாற்றத்திற்கு பழக்கப்படுகின்ற பலகட்ட செயற்திட்டத்திற்காக (CResMPA) மேற்கொள்ளப்பட்ட | பதில் வழங்கப்படவில்லை. | விவசாய அமைப்புக்களுக்கு வழங்கப்பட்ட ஒப்பந்தம் திணைக்கள |

2021 செப்தெம்பர் 17 ஆந் திகதிய உடன்படிக்கையானது 2023 மே 23 ஆந் திகதி மீண்டும் திருத்தம் செய்யப்பட்டது. அதற்கிணங்க வறிய மக்களுக்கு அவர்களின் கால்வாய் முறைமையை புனரமைப்புச் செய்வதற்கு உதவியளித்து அவர்களின் வாழ்வாதாரத்தினை மேம்படுத்துவதற்கு துணைபுரியும் குறிக்கோளில் மீள்கட்டமைப்புச் செய்யும் நடைமுறையினை மேற்கொள்வதற்குத் தீர்மானிக்கப்பட்டது. செயற்திட்ட உறுப்புரை 1 மற்றும் 2 இற்காக ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதி ஏற்பாட்டில் ரூபா 4,500 மில்லியன் (அமெரிக்க டொலர் 15 மில்லியன்) ஒதுக்கீடு செய்து ‘‘காலநிலைக்கு தாக்குபிடிக்கும் இயலுமையை மேம்படுத்துதல் மற்றும் நீர்ப்பாசன மற்றும் மழைநீர் உட்கட்டமைப்பு வசதிகளைப் பேணுதல்’’ என்பதாக 5 ஆம் உறுப்புரை அடையாளம் காணப்பட்டிருந்தது. இப்புதிய உறுப்புரையின் மூலம் 25 மாவட்டங்களின் நீர்ப்பாசன முறைமைகளில் மதகுகள், வெள்ள கட்டுப்பாட்டு கட்டமைப்பு, வான் கதவுகளும் நீர் தடுப்புக்களும், அவசர திருத்த வேலைகள் என்பவற்றை மேற்கொள்வவதற்காக அதிக முன்னுரிமையை வழங்கி செயற்திட்டத்தினை நடைமுறைப்படுத்துவதற்கான திட்டம் அமுல்ப்படுத்தப்பட்டிருந்தது.

அதற்கிணங்க மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு நீர்ப்பாசனத் திணைக்களத்தின் மேற்பார்வையின் கீழ் ரூபா 87,421,384 மதிப்பீட்டுப் பெறுமதியான 69 ஒப்பந்த தொகுதிகள் விவசாய அமைப்புக்களுக்கு வழங்கப்பட்டிருந்தன. ரூபா 30.755 மில்லியன் மதிப்பீட்டுப் பெறுமதியான 17 ஒப்பந்த தொகுதிகள் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு பூர்த்தி செய்யப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் இது

உத்தியோகத்தர்களால் நிறைவேற்றப்படாதிருத்தல் வேண்டும்.

சம்பந்தமாக மட்டக்களப்பு மற்றும் அம்பாறை பிரதேச்களில் மேற்கொண்ட வெளிக்கள பரீட்சிப்பின் பிரகாரம் அந்த நிர்மாண வேலைகளில் பல விவசாய அமைப்புக்களின் மூலம் மேற்கொள்ளப்பட்டிருக்காததுடன் திணைக்கள உத்தியோகத்தர்களாலேயே மேற்கொள்ளப்பட்டது என மூன்றாந் தரப்பினர்களால் கணக்காய்விற்கு உறுதிப்பட்டது. அதன் மூலம் இக்கூறினை அமுல்ப்படுத்தும் தொடக்க குறிக்கோளான ‘‘வறுமையான மக்களுக்கு அவர்களின் கால்வாய் முறைமையை புனரமைப்புச் செய்வதற்கு உதவியளித்து அவர்களின் வாழ்வாதாரத்தினை மேம்படுத்துவதற்கு துணைபுரிதல்’’ என்ற குறிக்கோள் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை. இது சம்பந்தமாக செயற்திட்ட முகாமைத்துவத்தின் மேற்பார்வையும் குறைந்த மட்டத்தில் காணப்பட்டது.

### 3.6 பெறுகைகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| (அ) 2023 ஆம் ஆண்டில் 11 நீர்ப்பாசன பொறியியலாளர் அலுவலகங்களின் மூலம் அமுல்ப்படுத்தப்பட்ட நிர்மாண வேலைகள் மற்றும் பராமரிப்பு வேலைகள் சம்பந்தமாக கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் ரூபா 978 மில்லியன் பெறுமதியான 137 நிர்மாண வேலைகள் அமுல்ப்படுத்தப்பட்டிருந்தன. அந்த நிர்மாண வேலைகளுக்கு மத்தியில் ரூபா 446 மில்லியன் பெறுமதியான 28 நிர்மாண வேலைகள் பெறுகை வழிகாட்டிக் கோவையின் 3.7 ஆம் பிரிவின் பிரகாரம் சொந்த வேலையாட்களையும் உபகரணங்களையும் பயன்படுத்தி நிறைவேற்றப்பட்ட பெறுகை முறைமை (Force Account) இன் கீழ் | | |

அமுல்ப்படுத்தப்பட்டிருந்தது. அவ்வாறு அமுல்ப்படுத்தப்பட்ட நிர்மாண வேலைகள் மற்றும் பராமரிப்பு வேலைகள் தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

| | | | |
|---|---|---|---|
| (i) | பெறுகை வழிகாட்டிக் கோவையின் 3.7 ஆம் பிரிவின் பிரகாரம் சொந்த ஊழியர்களையும் உபகரணங்களையும் பயன்படுத்தி நிறைவேற்றப்படுகின்ற பெறுகை முறைமை பொருத்தமானதாக இருப்பதானது தமது நிறுவனத்தில் போதியளவான ஊழியர்கள் மற்றும் போதிய அளவான இயந்திரங்கள் காணப்படுமாக இருந்தால் மாத்திரமாக இருந்த போதிலும் பாரியளவான பதவியணியினர் மற்றும் இயந்திரங்கள் காணப்படுகின்றன என உறுதிப்படுத்தப்படாது 11 பிராந்திய நீர்ப்பாசன பொறியியலாளர் அலுவலகங்களினால் அவற்றில் நடைமுறைப்படுத்தப்பட்ட நிர்மாண வேலைகளில் 20 சதவீதம் சொந்த ஊழிர்களையும் உபகரணங்களையும் பயன்படுத்தி நிறைவேற்றப்படுகின்ற பெறுகை முறைமையின் (Force Account) கீழ் அமுல்ப்படுத்தப்பட்டிருந்தன. | பிராந்திய நீர்ப்பாசன பொறியியலாளர் அலுவலகத்தினால் அமுல்ப்படுத்தப்படுவது காணப்படுகின்ற நீர்ப்பாசன தொழில் முயற்சிகளின் செயற்பாடுகள் மற்றும் பராமரிப்பு வேலைகளும் புனரமைப்பு வேலைகளுமாகும். சிறுபோகம், பெரும்போகம் ஆகிய இரண்டு போகங்களிலும் பயிர்ச்செய்கை நடவடிக்கைகளை கைவிடாது இவற்றினை அமுல்ப்படுத்த வேண்டி ஏற்பட்டுள்ளது. பெரும்பாலும் போகங்களுக்கு மத்தியில் நீரினை வழங்காத காலப்பகுதியில் (இரண்டு மாதங்கள் போன்ற காலத்தில்) பராமரிப்பு வேலைகள் பெரும்பாலும் மேற்கொள்ளப்படுதல் வேண்டும். இந்த வேலைகளுக்காக தேவையான மூலப்பொருட்களை எடுத்துச் செல்லும் இயந்திரங்கள் கடினமான வீதிகளினூடாக குளத்து அணையை அடைந்து கொள்வது விவசாய நடவடிக்கைகளை மேற்கொள்ளும் காலப்பகுதியின் போது மிகவும் கடினமானதாகும். | சொந்த ஊழயிர்களையும் உபகரணங்களையும் பயன்படுத்தி நிறைவேற்றப்படுகின்ற முறைமையின் கீழ் நிர்மாண வேலைகளை நடைமுறைப்படுத்துவதற்கு அங்கீகாரத்தினை வழங்குவதற்கு முன்னர் பெறுகை வழிகாட்டிக் கோவைகளுக்கான இணக்கப்பாட்டினை உறுதிப்படுத்திக்கொள்ளுதல் வேண்டும். |
| (ii) | இப்பெறுகை முறைமையில் (Force Account) குளங்கள்/ நீர்த்தேக்கங்களை நிர்மாணித்தல் மற்றும்புனரமைப்புச் செய்வதற்கு தேவையான வேலையாட்களை நிர்ப்பாசனத் திணைக்களத்திற்கு இணைத்துக் கொள்ளப்பட்டுள்ள | பெறுகை வழிகாட்டிக் கோவையின் 3.7 ஆம் பிரிவின் பிரகாரம் சொந்த ஊழியர்கள் உபகரணங்கள் போதியளவில் காணப்படுமாக இருந்தால் மாத்திரம் என்பது பிழையானதாகும். அதாவது உரிய வேலையாட்களுக்கான அளவினைப் பெறுதல் (நீரோட்டம், மனித மற்றும் | நேரடி வேலையாட்கள் அடிப்படையில் இடம்பெறுகின்ற முறைமையினங்கள் வேலையாட்களை வழங்குதல், சேவையில் ஈடுபடுத்துதல், கொடுப்பனவுகளை சான்றுபடுத்துதல் ஆகிய விடயங்களின் |

| | | | |
|---|---|---|---|
| | வேலையாட்களின் மூலம் வழங்க முடியாத சந்தர்ப்பங்களில் மாத்திரம் வெளியிலிருந்து வழங்க வேண்டும் என்ற போதிலும் அனைத்து பயிற்சி பெற்ற மற்றும் பயிற்சி இல்லாத வேலையாட்கள் தேவைப்பாடானது வேலையாட்களை வழங்குபவர்களிடமிருந்து, விவசாய அமைப்புக்களின் மூலம் அல்லது தனிநபர் வேலையாள் உடன்படிக்கையின் கீழ் வழங்கப்பட்டிருந்தது. | கால்நடை செயற்பாடுகள்) ஒப்பந்தக்காரர்கள் நியாயமான விலைக்கு கேள்வி மனுக்களை சமர்ப்பிக்க முடியாமை, உரிய நடைமுறை வேலைகளுக்கு தடைகள் ஏற்படாத வகையில் மேற்கொள்வதற்கு தேவை ஏற்படுகையில் (சிறுபோகம் பெரும்போகங்களுக்கு நீரினை வழங்கி புனரமைத்தல் செயற்பாடுகள் மற்றும் பராமரித்தல் வேலைகளை மேற்கொள்ள வேண்டியிருத்தல்) அவசர சந்தர்ப்பங்களின் போது அதற்காக கவனம் செலுத்த வேண்டி ஏற்படல். | போது உள்ளகக் கட்டுப்பாட்டினை வலுப்படுத்தும் வகையில் சுற்றறிக்கை அறிவுறுத்தல்கள் வழங்கப்படுதல் வேண்டும். |
| (iii) | இப்பெறுகை முறைமையின் (Force Account) கீழ் வேலையாட்களை வழங்கும் போது பின்பற்றப்பட வேண்டிய நடைமுறைகள், அதற்காக பயன்படுத்தப்பட வேண்டிய உடன்படிக்கை படிவங்கள், வருகை வெளிச்செல்லல் மற்றும் செயற்பாடுகளை நிறைவேற்றுதல் சம்பந்தமாக பேணப்பட வேண்டிய பதிவேடுகள், கொடுப்பனவு மேற்கொள்ளப்படுகின்ற அடிப்படை முதலிய விடயங்கள் தொடர்பாக பொதுவான அறிவுறுத்தல்களும் வரையறைகளும் வழங்கப்படவில்லை. இதன் காரணமாக ஒவ்வொரு பிராந்திய நீர்ப்பாசன பொறியியலாளர் அலுவலகங்களினால் அச்செயற்பாடு முறையற்ற வகையில் இடம்பெற்று வந்திருந்தன. | மனித வேலையாட்கள் மற்றும் இயந்திரங்கள் தேவைப்படுகின்ற சந்தர்ப்பங்களில் பெறுகை வழிகாட்டிக் கோவையை பின்பற்றி வெளித் தரப்பினர்களிடமிருந்து பெற்றுக்கொள்ளப்படும். | நேரடி வேலையாள் அடிப்படையிலான முறைமையீனங்களை தவிர்க்கும் வகையில் பின்பற்றப்பட வேண்டிய நடைமுறைகள் மற்றும் பயன்படுத்தப்பட வேண்டிய பதிவேடுகளை அறிமுகப்படுத்தி உள்ளகக் கட்டுப்பாட்டினை வலுப்படுத்துதல் வேண்டும். |
| (iv) | இப்பெறுகை முறைமையின் (Force Account) கீழ் குளங்கள்/ நீர்த்தேக்கங்களை நிர்மாணித்தல் மற்றும் | திணைக்களத்திடம் காணப்படுகின்ற செயற்படும் நிலையில் உள்ள இயந்திரங்கள் 52 பிராந்திய அலுவலகங்களுக்கும் ஒதுக்கீடு | திணைக்களத்திடம் இயந்திரங்கள் காணப்படுகின்ற சந்தர்ப்பங்களில் வெளியிலிருந்து |

| | | | |
|---|---|---|---|
| | புனரமைப்புச் செய்வதற்காக திணைக்களத்திடம் காணப்படுகின்ற இயந்திரங்களின் மூலம் உரிய சேவைகளை பெற்றுக்கொள்ள முடியாதிருக்கையில் மாத்திரம் தேவையான இயந்திரங்கள் வெளியிலிருந்து வழங்கப்பட வேண்டும் என நிர்ணயிக்கப்பட்டிருக்கவில்லை. திணைக்களத்திடம் காணப்படுகின்ற 350 அளவிலான இயந்திர அணியில் செயற்படும் நிலையில் காணப்படுகின்ற இயந்திரங்கள் விளைவற்றுக் காணப்பட்டிருந்தும் வெளி வழங்குனர்களினால் வாடகை அடிப்படையில் இயந்திரங்கள் வழங்கப்பட்டிருந்தன. | செய்யப்பட்டவையல்ல. 2021, 2022 மற்றும் 2023 ஆம் ஆண்டுகளில் எங்களுக்கு வழங்கிய கணக்காய்வு அறிக்கைகளின் பிரகாரம் பிராந்திய நிர்ப்பாசன அலுவலகங்கள் நேரடி வேலையாள் முறைமையின் கீழ் மேற்கொண்ட வேலைகளின் எண்ணிக்கை முறையே 755 (09 வலய அலுவலகங்களிடமிருந்து பெற்ற தகவல்களின் பிரகாரம்), 776 (10 வலய அலுவலகங்களிடமிருந்து பெற்ற தகவல்களின் பிரகாரம்) மற்றும் 28 (03 வலய அலுவலகங்களிடமிருந்து பெற்ற தகவல்களின் பிரகாரம்) 14 வலய நீர்ப்பாசன பணிப்பாளர் அலுவலகங்களில் உள்ள அனைத்து பிராந்திய நீர்ப்பாசன அலுவலகங்களிலும் ஆயிரக் கணக்கான புனரமைப்பு செயற்பாடுகள் மற்றும் பராமரிப்பு வேலைகள் மேலே காட்டப்பட்டுள்ளவாறு குறுகிய காலத்தில் பூர்த்திசெய்யப்பட வேண்டியுள்ளதனால் அவற்றிற்காக இயந்திரங்களை வழங்குவதற்கு எடுக்கின்ற காலம் செலவு செய்யப்படுகின்ற பணத்தின் அளவு போக்குவரத்து சிரமங்கள் என்பவற்றைக் கவனித்துப் பார்த்து தேவைக்கேற்ப திணைக்கள இயந்திரங்களையும் வெளியிலிருந்து வழங்கப்படுகின்ற இயந்திரங்களையும் ஈடுபடுத்தி அச்செயற்பாடுகள் நிறைவேற்றப்படுகின்றன. | வாடகை அடிப்படையில் இயந்திரங்களை பெற்றுக்கொள்ளாதிருத்தல் வேண்டும். |
| (ஆ) | அரசாங்க பெறுகை வழிகாட்டிக் கோவையின் 4.2 ஆம் பிரிவின் பிரகாரம் பெறுகைத் திட்டங்கள் தயாரித்து நாளதுவரையாக்கப்பட வேண்டியதுடன் அவற்றில் பெறுகை முறைமை நிர்ணயிக்கப்பட்டிருத்தல் | பதில் வழங்கப்படவில்லை | சொந்த ஊழியர்களையும் உபகரணங்களையும் பயன்படுத்தி நிறைவேற்றப்படுகின்ற பெறுகை முறைமையின் கீழ் |

| | | |
|---|---|---|
| வேண்டும். வழிகாட்டிக் கோவையின் 4.2.3(இ) பிரிவின் பிரகாரம் பெறுகை கால அட்டவணையானது உரிய பெறுகைக் குழுவினால் அங்கீகரிக்கப்பட வேண்டிய போதிலும் கணக்காய்விற்குச் சமர்ப்பித்த தகவல்களின் பிரகாரம் 11 பிராந்திய நிர்ப்பாசன பொறியியலாளர் அலுவலகங்களின் மூலம் 2023 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட ரூபா 978 மில்லியனான 137 நிர்மாணங்கள் மற்றும் பராமரிப்பு வேலைகளின் பெறுகை நடைமுறையானது பிராந்திய நிர்ப்பாசன பொறியியலாளர்களினால் நிர்ணயிக்கப்பட்டிருந்தது. | | நிர்மாண வேலைகளை நடைமுறைப்படுத்தும் போது பெறுகை வழிகாட்டிக் கொவைகளுக்கு இணங்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**3.7 சொத்துக்கள் முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| **(அ) மோட்டார் வாகனங்கள்** | | |
| (i) மோட்டார் வாகன போக்குவரத்து திணைக்களத்தின் தாபன முறைமைக்கு இணங்க நிர்ப்பாசன திணைக்களத்தின் பெயரில் அல்லது திணைக்கள விலாசத்தின் கீழ் 2004 வாகனங்கள் பதிவு செய்யப்பட்டிருந்தும் திணைக்கள வாகன பதிவேட்டின் பிரகாரம் வாகனங்களின் எண்ணிக்கை 1,560 ஆக அடையாளங்காணப்பட்டிருந்தது. அதற்கிணங்க 464 வாகனங்கள் திணைக்களத்தின் பொறுப்பில் காணப்படவில்லை. | பதிவுசெய்துள்ள 2004 ஆன முழு வாகன பட்டியல்களானது திணைக்களத்தில் தற்பொழுது பயன்படுத்தப்படுகின்ற 994 வாகனங்கள், திணைக்களத்திற்கு சொந்தமில்லாதவை என மேற்கொண்ட வாகன உறுதிப்படுத்தலில் உறுதிப்படுத்திய 38 வாகனங்கள், கைதவிர்ப்பு நடைமுறையின் மூலம் வெளி நபர்களுக்கு விற்கப்பட்டுள்ள 429 வாகனங்கள், MTA 6 இன் மூலம் ஒப்படைப்பதற்கு நடவடிக்கை எடுத்த 29 வாகனங்கள், திணைக்களத்திற்குச் சொந்தமான எனினும் வெளி நிறுவனங்களிடமுள்ள/ வெளிக்கள உத்தியோகத்தர்களுக்கு வழங்கிய 38 வாக கனங்கள், ஏனைய அமைச்சுக்கள் தனிப்பட்டவர்களுக்கு | நீர்ப்பாசன திணைக்களத்தின் பெயரில் பதிவு செய்யப்பட்டுள்ள எனினும் திணைக்களத்தின் பொறுப்பில் காணப்படாத வாகனங்கள் தொடர்பாக ஆராய்ந்து பார்த்து தேவையான நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | ஒப்படைக்கப்பட்டுள்ள போதிலும் மோட்டரர் வாகன போக்குவரத்து திணைக்களத்தில் உள்ளதன் அடிப்படையில் இன்னும் திணைக்களத்தின் பெயரில் காணப்பபடுகின்ற 08 வாகனங்கள், திணைக்களத்தில் பயன்படுத்த முடியாதவையாக காணப்படுகின்ற 02 வாகனங்கள், பயங்கரவாதிகளால் அழிக்கப்பட்ட 02 வாகனங்கள், கோவைகளை தேடிக்கண்டு பிடிக்க முடியாததன் அடிப்படையில் உறுதிப்படுத்த முடியாத 464 வாகனங்கள் அண்மைக் காலத்தில் வாகனங்களை பொறுப்பேற்பதற்கான வேண்டுதல்கள் கிடைத்துள்ளன. | |
| (ii) | மோட்டார் வாகன போக்குவரத்து திணைக்களத்தின் தரவு முறைமைகளின் பிரகாரம் நீர்ப்பாசனத் திணைக்களத்தின் பெயரில், நீர்ப்பாசன பணிப்பாளர் நாயகத்தின் பெயரில், அல்லது திணைக்கள விலாசத்தின் கீழ் 2004 வாகனங்கள் பதிவு செய்யப்பட்டிருந்தும் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிதியற்ற சொத்துக்கள் கூற்றில் குறியீட்டு இலக்கம் 6111 இன் கீழ் 1220 போக்குவரத்து உபகரணங்களின் பெறுமதி ரூபா 4,387,145,359 ஆக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. அதற்கிணங்க மிகுதி 784 வாகனங்களின் பெறுமதியை அடையாளங்கண்டு நிதியற்ற சொத்துக்களாக கணக்கீடு செய்யப்பட்டிருககவில்லை | வாகனங்களை மதிப்பீடு செய்வதற்காக 2019 ஆம் ஆண்டின் போது நீர்ப்பாசன திணைக்களத்தின் இரண்டு இயந்திர பொறியியலாளர்கள் மற்றும் ஒரு பணிப்பாளரினை உள்ளடக்கிய ஒரு குழுவின் மூலம் பெற்றுக்கொள்ளப்பட்ட தகவல்களை அடிப்படையாகக் கொண்டு வாகனங்கள் தொடர்பான தகவல்கள் CIGAS கணக்குகள் முறைமையில் அறிக்கைடப்பட்டுள்ளது. 1220 வாகனங்களைக் கொண்ட ஒரு வாகப் பட்டியல் எங்களால் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கபபட்டுள்ளது. அதற்கிணங்க 2019 ஆம் ஆண்டின் போது அறிக்கையிடப்பட்ட வாகனப் பட்டியலில் தற்பொழுது குறைபாடுகள் காணப்படுகின்றன. 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு திணைக்களத்திடம் பௌதீகரீதியாக காணப்பட்ட வாகனங்களின் எண்ணிக்கை 1,159 | நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முன்னர் தகவல்களை உறுதிப்படுத்துவதற்காக உள்ளகக் கட்டுகாட்டினை அறிமுகப்படுத்துதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | ல. அதற்கிணங்க நிதிக் கூற்றுக்கில் காட்டப்பட்டுள்ள பெறுமதி சரியானவை என கணக்காய்வின் போது ஏற்றுக் கொள்ள முடியாதுள்ளது. | எனஇய்நதிர பொறியியலாளரின் சிபாரிசுகடன் கொம்ப்ட்ரோலர் நாயகத்தின் அலுவலககத்திற்கு 2024 மார்ச் 25 ஆந் திகதி அறிக்கையிடப்பட்டுள்ளது. பௌதீகரீதியாக வாகனங்களின் சரியான தன்மையை உறுதிப்படுத்துவதற்காக தலைமை அலுவலகத்தின் இய்நதிதர பிரிவு மற்றும் வலய நிர்ப்பாசன பணிப்பாளருக்கு கடிதம் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது டன் உரிய தகவல்களைப் பெற்ற உடன் தருவு முறைமைக்கு மாற்றங்களை ஏற்படுத்துவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. | |
| (iii) | நீர்ப்பாசனத் திணைக்களத்திற்குச் சொந்தமான மற்றும் பயன்படுத்தப்பட்டு வருகின்றது என வாகனப் பதிவேட்டில் உள்ளடக்கப்பட்ட 1220 வாகனங்களுக்கு மத்தியில் 48 வாகனங்கள் வெளித்தரப்பினர்களின் பெயரில் பதிவுசெய்யப்பட்டிருந்தன . மேற்கூறிய வாகனங்களின் உரிமையை நீர்ப்பாசனத் திணைக்கத்தினால் பொறுப்பேற்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை ல. | வெளித்தரப்பினர்களின் பெயரில் பதிவுசெய்யப்பட்டுள்ளது எனக் குறிப்பிட்ட 48 வாகனங்களுக்கு மத்தியில் நீர்ப்பாசன அமைச்சு செயலாளருக்குரிய 20 வாகனங்களும் காலி மாவட்ட செயலாளருக்கு உரிமை காணப்பட்ட 252-9813 மற்றும் 252-9816 ஆகிய இரண்டு வாகனங்களும் நீர்ப்பாசனத் திணைக்களத்தினால் பொறுப்பேற்கப்பட்டுள்ளது. உமாஓயா செயற்திட்டத்திற்கு ஏனைய நிறுவனங்களினால் வழங்கியுள்ள 07 வாகனங்களை நிறுவனங்களைப் பெறுப்பேற்றல் தொடர்பான திர்மானத்தை செயற்திட்டத்தின் இறுதியில் எடுப்பதற்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. உமா ஓயா செயற்திட்டத்தின் கீழ் நீர்ப்பாசன மற்றும் நீர் வளங்கள் முகாமைத்துவ அமைச்சு செயலாளரின் பெயரில் கொள்வனவு செய்யப்பட்ட 08 வாகனங்களின் உரிமையை அச்செயற்திட்டத்தின் இறுதியில் சநீர்ப்பாசன | நீர்ப்பாசன திணைக்களத்தின் வாகனங்கள் சம்பந்தமான கட்டுப்பாட்டு முறைமையினை வலுப்படுத்துதல் வேண்டும். திணைக்களம் பயன்படுத்தி வருகின்ற வெளித்தரப்பினர்களுக் கு சொந்தமான வாகனங்களை பதிவு செய்யும் உரிமையைப் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேணடும். |

| | | | |
|---|---|---|---|
| | | திணைக்களத்திற்கு பொறுப்பேற்பதற்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. ஏனைய வாகனங்களின் உரிமையை பொறுப்பேற்பதற்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. | |
| (iv) | நீர்ப்பாசன திணைக்களத்தின் பெயரில் நீர்ப்பாசன பணிப்பாளர் நாயகத்தின் பெயரில் அல்லது திணைக்கள விலாசத்தின் கீழ் பதிவுசெய்துள்ள 2004 வாகனங்களின் பதிவுசெய்தல் சான்றிதழ்களை மற்றும் தொடர்புபட்ட வருமான அனுமதிப்பத்திரங்கள் நிர்ப்பாசனத் திணைக்களத்தின் போக்குவரத்துப் பிரிவிற்கு பொறுப்பான உத்தியோகத்தரினால் ஒழுங்கு முறைப்படி பேணப்பட்டிருக்கவில்லை. மேலும் அந்த வாகனங்கள் தற்பொழுது பயன்படுத்தப்படுகின்ற இடங்கள் மற்றும் பொறுப்பு ஒப்படைக்கப்பட்டுள்ள உத்தியோகத்தர்கள் தொடர்பான விபரம் நாளதுவரையாகப் பேணப்பட்டிருக்கவில்லை. | நிர்ப்பாசனத் திணைக்களத்தின் வாகனங்களை பதிவுசெய்தல் சான்றிதழ் தொடர்பான விபரம் பட்டியல்படுத்தப்பட்டுள்ளதுடன் உத்தியோகத்தர்களிடமிருந்து உத்தியோகத்தர்களுக்கு ஒப்படைக்கும் போது முறைப்படியாக ஒப்படைக்கும் நடைமுறை தற்பொழுது தயாரிக்கப்பட்டுள்ளது. அவை ஒழுங்கு முறைப்படி ஆவணப்படுத்தப்பட்டு வழங்கும் நடைமுறையானது தற்பொழுது தயாரிக்கப்பட்டுள்ளது. இந்த நடவடிக்கையானது தலைமை அலுவலகத்தில இயந்திர பொறியியலாளர் மற்றும் பிரதான இயந்திர பொறியியலாளரால் மேற்பார்வை செய்யப்படுகின்றது. இதற்காக தனித்தனியாக 03 தரவு முறைமைகள் பேணப்படுவதுடன் இந்த அனைத்து நடவடிக்கைகளையும் தரவுகளையும் உள்ளடக்கிய ஒர தரவு முறைமையுடனான ஒரு மென்பொருளினை உருவாக்கும் நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளது. | வாகனங்களை பதிவுசெய்யும் சான்றிதழ் வருமான அனுமதிப்பத்திரம் காப்புறுதி நடவடிக்கைகள் முதலிய செயற்பாடுகளை உத்தியோகத்தர்களுக்கு உறுதியாக ஒப்படைத:து வருமானம் சம்பந்தமான அனைத்து தகவல்களையும் உள்ளடக்கிய தரவு முறைமையை நாளதுவரையாக பேணுதல் வேண்டும். |

## 3.8 முகாமைத்துவம் பலவீனங்கள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| **(அ)** | **கொடுப்பனவு நடைமுறை** | | |
| (i) | நீர்ப்பாசன திணைக்களத்தின் பிராந்திய நீர்ப்பாசன பொறியியலாளர் அலுவலகங்களில் | 2011 மார்ச் 24 ஆந் திகதி நடைபெற்ற அரசாங்க கணக்குகள் குழுவின் பணிப்புரையை கவனித்துப் பார்த்து நீர்ப்பாசனத் | ஒரு கணக்காளரினால் நிறைவேற்றப்பட வேண்டிய செயற்பாடுகளை பொறியியல் உதவிச் |

| | | | |
|---|---|---|---|
| | பின்பற்றப்படுகின்ற கொடுப்பனவு நடைமுறை அரசாங்க நிதிப் பிரமாணங்களுக்கு இணக்கமற்று இருப்பதனால் இந்த நடைமுறையை சரிசெய்யுமாறு 2016 செப்தெம்பர் 22 ஆந் திகதி நடைபெற்ற அரசாங்க கணக்குகள் குழு பணிப்புரை விடுத்திருந்தும் கணக்குகள் குழுவின் பணிப்புரையை பொருட்படுத்தாது 2017 ஏப்ரல் 07 ஆந் திகதிய 2013/31 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவுறத்தலின் மூலம் வெளியிடப்பட்ட பொறியியலாளர் உதவிச் சேவையின் சேவை பிரமாணக் குறிப்பின் மூலம் ஒரு கணக்காளரினால் நிறைவேற்றப்பட வேண்டிய செயற்பாடுகளான கொடுப்பனவுகள் சான்றுபடுத்துதல், பணமாக செய்யப்படுகின்ற அனைத்து கொடுப்பனவுளையும் மேற்கொள்ளல், இரண்டாவது கையொப்பமிடுபவராக காசோலையில் கையொப்பமிடுதல் சில்லறைக் காசேடு மற்றும் கொடுப்பனவு பணம் தொடர்பாக துணைப் பதிவேடுகளைப் பேணுதல் ஆகிய செயற்பாடுகள் பொறியியல் உதவிச் சேவையின் விசேட தரத்திலுள்ள பிரிவு உதிவியாளரின் கடமையாகக் காட்டப்பட்டிருந்தது. | திணைக்களத்தின் கொடுப்பனவுகளை மேற்கொள்ளும் நடைமுறையை முறைமைப்படுத்துவதற்காக பிராந்திய நீர்ப்பாசன பொறியியலாளர் அலுவலகங்களின் மூலம் மேற்கொள்ளப்பட்ட கொடுப்பனவுகளுக்கான வவுச்சர்களின் செலலவுகளை சான்றுபடுத்தலானது பொறியல் உதவி சேவையின் விசேட தரத்திலுள்ள பதவியான பிரிவு உதவியாளரின் மூலம் மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.<br><br>அதற்கிணங்க 2013 ஏப்ரல் 07 ஆந் திகதிய 2013/31 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட நீர்ப்பாசனத் திணைக்களத்தின் பொறியியல் உதவிக் சேவையின் சேவை பிரமாணக் குறிப்பின் 6.1 ஆம் பிரிவின் மூலம் உரிய செலவுகளை சான்றுபடுத்துவதற்கு சட்டரீதியான ஏற்பாடும் வழங்கப்பட்டுள்ளது எனவும் மேலும் உறுதிப்படுத்துகிறேன். | சேவைகளின் சேவை பிரமாணக் குறிப்பிலிருந்து நீக்கி சேவை பிரமாணக் குறிப்பினை திருத்தம் செய்தல் வேண்டும். |
| (ii) | பிராந்திய நீர்ப்பாசன அலுவலகத்தின் மூலம் மேற்கொள்ளப்படுகின்ற நிர்மாணங்கள் மற்றும் பராமரிப்பு வேலைகளுக்குரிய | செலவுகளை சான்றுபடுத்தும் நடைமுறைகளுக்காக கணக்காளர்களை சேர்த்துக்கொண்டு மேலதிக நடவடிக்கைகளை | பிராந்திய நீர்ப்பாசன பொறியிலாளர் அலுவலகங்களில் கொடுப்பனவுகளை சான்றுபடுத்துவதற்கு |

| | | | |
|---|---|---|---|
| | கொடுப்பனவுகளில் 90 சதவீதத்திற்கு மேற்பட்ட அளவானவற்றின் கொடுப்பனவுகளை சான்றுபடுத்துதல் கணக்காளருக்கு ஒப்படைக்கப்பட்டிருக்கவில்லை. | செய்யுமாறு 2016 செப்தெம்பர் 22 ஆந் திகதி நடைபெற்ற அரசாங்க கணக்குகள் குழுக் கூட்டத்தின் போது பணிப்புரை விடுக்கப்பட்டது. அதற்கிணங்க உரிய ஆட்சேர்ப்புக்களை அங்கீகரித்துக் கொள்வதற்காக நடவடிக்கை எடுக்கும் போது முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் மூலம் அங்கீகரிக்க முடியாது எனத் தெரிவிக்கப்பட்டது. | பணிப்புரையின் பிரகாரம் முறையான நடைமுறை பின்பற்றப்படுதல் வேண்டும். |
| (iii) | பிராந்திய நீர்ப்பாசன பொறியியலாளர் அலுவலகங்களின் நிர்மாண வேலைகளின் பொருட்கள் வேலையாட்கள் மற்றும் இயந்திரங்களக்காக கொடுப்பனவு செய்யும் போது கொடுப்பனவு வவுச்சர்களில் கோவைகளுக்கான தொடர்பின் கீழ் உடன்படிக்கை இலக்கம் மாத்திரம் காட்டபபட்டுள்ளதுடன் எந்த துணை ஆவணங்களும் வவுச்சர்களுடன் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. அது தொடர்பாக பொருட்படுத்தாது கொடுப்பனவுகள் அங்கிகரிக்கப்பட்டு சான்றுபடுத்தப்பட்டு கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. | இவ்விடயம் சம்பந்தமாக எனது IA/01/COM/04/2022 ஆம் இலக்க 2023 பெப்ரவரி 15 ஆந் திகதிய கடிதத்தின் மூலம் உத்தியோகத்தர்களுக்கு தெரியப்படுத்தப்பட்டுள்ளதுடன் இது தொடர்பான அறிவுறுத்தல்களை கண்டிப்பாக பின்பற்றுமாறு வலியுறுத்தி அறிவுறுத்தல்கள் வழங்கியுள்ளேன். | கொடுப்பனவு செய்வதற்குரிய பெறுகை நடைமுறையின் உடன்படிக்கை செய்த நிபந்தனைகள் மற்றும் பொருள் விபரக் குறிப்புக்களுக்கு இணங்க வேலைகள், பொருட்கள் மற்றும் சேவைகள் வழங்கப்பட்டுள்ளது. எனவும் அவை சரியாக பொறுப்பேற்கப்பட்டு ஆவணப்படுத்தப்பட்டுள்ளது. எனவும் உறுதிப்படுத்துவதற்கு அனைத்து ஆவணங்களும் கொடுப்பனவு வவுச்சர்களுடன் சமர்ப்பித்தல் வேண்டும். கொடுப்பனவுகளை சான்றுபடுத்துகின்ற உத்தியோகத்தர்களால் அந்த ஆவணங்கள் வவுச்சர்களுடன் உள்ளது என்பதனை உறுதிப்படுத்தி கொடுப்பவு சான்றுபடுத்தப்படுதல் வேண்டும். |
| (iv) | பிராந்திய நீர்ப்பாசன பொறியியலாளர் அலுவலகங்களில் நிர்மாணங்கள் மற்றும் பராமரிப்பு | இவ்விடயம் சம்பந்தமாக எனது IA/01/COM/04/2022 ஆம் இலக்க 2023 பெப்ரவரி 15 ஆந் திகதிய கடிதத்தின் மூலம் | வழங்கப்படுகின்ற வேலைகள், பொருட்கள் அல்லது சேவைகள் தொடர்பாக வழங்குனர்களிடமிருந் |

| | | | |
|---|---|---|---|
| | வேலைகளுக்கு வழங்கப்படுகின்ற திரவியங்கள், பொருட்கள் அல்லது சேவைகள் தொடர்பாக வழங்குனரினால் இன்வொயிஸ் சமர்ப்பிக்கப்படாதிருந்தும் 402 வவுச்சர்களுக்காக ரூபா 108,518,811 கொடுப்பனவு அங்கீகரிக்கப்பட்டு சான்றுபடுத்தி கொடுப்பனவு செய்யப்பட்டது. | உத்தியோகத்தர்களுக்கு தெரியப்படுத்தப்பட்டுள்ளதுடன் இது தொடர்பாக வலியுறுத்தி அறிவுறுத்தல்கள் வழங்கியுள்ளேன். | து பெற்றுக்கொள்ளப்பட்ட இன்வொயிஸ்கள் வவுச்சர்களுடன் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும். |
| (v) | கொடுப்பனவு செய்யும் போது பொது 35 படிவத்திற்குப் பதிலாக நீர்ப்பாசனம் 27 படிவத்தின் மூலம் 491 சந்தர்ப்பங்களின் போது ரூபா 163,729,573 தொகை செலுத்தப்பட்டிருந்தது. | இவ்விடயம் சம்பந்தமாக எனது IA/01/COM/04/2022 ஆம் இலக்க 2023 பெப்ரவரி 15 ஆந் திகதிய கடிதத்தின் மூலம் உத்தியோகத்தர்களுக்கு தெரியப்படுத்தப்பட்டுள்ளதுடன் இது தொடர்பான அறிவுறுத்தல்களை கண்டிப்பாக பின்பற்றுமாறு வலியுறுத்தி அறிவுறுத்தல்களை வழங்கியுள்ளேன். | கொடுப்பனவு செய்யும் போது பொது35 படிவம் பயன்படுத்தப்படுதல் வேண்டும். |
| **(ஆ)** | **அனுமதியற்ற நிர்மாணங்களும் பயிர்ச் செய்கைகளும்** | | |
| (i) | 1946 இன் 32 ஆம் இலக்க நீர்ப்பாசன கட்டளைச் சட்டத்தின் 285 ஆம் அத்தியாயத்தின் 64 ஆம் பிரிவின் பிரகாரம் நீர்ப்பாசன திணைக்களத்தினால் அதன் கீழ் நிருவகிக்கப்படுகின்ற பிரதான மற்றும் மத்திய அளவிலான நீர்த்திட்டங்கள், பிரதான ஆறுகள், நீர்த்தேக்கங்கள், மற்றும் சரணாலயங்களின் பாதுகாப்பு, அனுமதியற்ற நிர்மாணங்கள் மற்றும் பயிர்ச்செய்கை நடவடிக்கைகளை கட்டுப்படுத்துதல், நீரினை அசுத்தப்படுத்துவதனைத் தவிர்த்தல், அனுமதியின்றி நீரினைப் பயன்படுத்துவதனை | தொடக்க சட்டமான 285 ஆம் அத்தியாயமாகிய 1946 இன் 32 ஆம் இலக்க நீர்ப்பாசன கட்டளைச் சட்டத்தின் 64 ஆம் பிரிவில் குறிப்பிட்ட தேவைப்பாடுகளுக்காக “Subsidiary Legislation under the Irrigation Ordinance- 1956 - Revision” ஆக பிரமாணம் விதிக்கப்பட்டுள்ளது என அவதானிக்கப்பட்டது. எவ்வாறாயினும் அதன் பின்னர் நீர்ப்பாசன கட்டளைச் சட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட திருத்தங்கள் மற்றும் இலங்கையில் தயாரிக்கப்பட்ட ஏனைய கட்டளைச் சட்டங்கள், மற்றும் சட்டவிதிகளின் மூலம் நீர்ப்பாசன கட்டளைச் சட்டத்தின் பிரமாணங்கள் தயாரிக்கப்பட வேண்டுமென குறிப்பிட்டு | அனுமதியற்ற குடியிருப்பாளர்கள் சம்பந்தமாக நீர்ப்பாசன கட்டளைச் சட்டத்தில் குறிப்பிட்ட அறிவுறுத்தல்களுக்கு சட்ட நடவடிக்கை எடுத்தல் வேணடும். |

| | | | |
|---|---|---|---|
| | கட்டுப்படுத்துதல், நீர்ப்பாசன திட்டங்களின் பராமரிப்பு சம்பந்தமாக முறையான ஒழுங்குபடுத்தலினை மேற்கொள்வதற்கு தேவையான வரையறைகள் வழங்கப்பட்டிருக்கவில்லை. | துறையிலுள்ள அனைத்தையும் பெரும்பாலும் உள்ளடக்கும் வகையில் சட்டங்கள், உருவாக்கப்பட்டுள்ளதனால் மேற்கூறிய சட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படும். மேலும் நீர்ப்பாசன சரணாலய எல்லைக்காக பிரமாணங்களை விதித்தல் நீர்ப்பாசன கட்டளைச் சட்டத்திற்கு உட்பட்டது அல்லாததனால் அரசாங்க காணிகள் கட்டளைச் சட்டத்தின் கீழ் வெளியிடுவதற்காக பிரமாணங்களின் வரைபு சட்ட வரைஞர் திணைக்களத்திற்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. | |
| (ii) | கட்டளைச் சட்டத்தின் 65 ஆம் பிரிவின் பிரகாரம் நீர்ப்பாசனத் திணைக்களத்தின் கீழ் நிருவகிக்கப்படுகின்ற 26 பிராந்திய நீர்ப்பாசன பொறியியலாளர் அலுவலகங்களுக்குரிய குளங்கள், நிர்த்தேக்கங்கள், அணைகளுக்கு அருகாமையிலுள்ள 397 அனுமதியற்ற நிர்மாணங்கள் அல்லது பயிர்செய்கைகள் அடையாளங்காணப்பட்டிருந்த போதிலும் அந்த அனுமதியற்ற நடவடிக்கைகள் சம்பந்தமாக மாவட்ட செயலகத்திற்கு அறிக்கையிடப்பட்டிருக்கவில்லை. | 08/2014 ஆம் இலக்க சுற்றறிக்கை என்பது நீர்ப்பாசன பணிப்பாளர் நாயகத்தினால் உள்ளக அறிவுறுத்தல் தொகுப்பு வழங்கப்பட்ட திணைக்கள சுற்றறிக்கையாகும். அதில் குறிப்பிட்ட விடயங்கள் மற்றும் தொழில்நுட்ப தேவைப்பாடுகளின் பிரகாரம் முன்னுரிமை மற்றும் காணப்படுகின்ற மனித, பௌதீக மற்றும் நிதிசார் வளங்களின் வரையறைக்கு உட்பட்டு நாட்டில் காணப்படுகின்ற சட்டத்தின் கீழ் பாசன நிர்மாண வேலைகள் நிலையாகக் காணப்படுவதனை பாதுகாப்பதற்காக நடவடிக்கை எடுக்கப்படும். | குளங்கள் நீர்த்தேக்கங்கள் சார்ந்த அனுமதியற்ற நடவடிக்கைகள் சம்பந்தமாக மாவட்ட செயலாளருக்கு அறிக்கையிடப்படுதல் வேண்டும். |
| (iii) | நீர்ப்பாசன பணிப்பாளர் நாயகத்தின் 2014 திசெம்பர் 01 ஆந் திகதிய 08/2014 ஆம் இலக்க சுற்றறிக்கையின் 01 மற்றும் 03 ஆம் பந்திகளின் பிரகாரம் திணைக்களத்தின் மூலம் நிருவகிக்கப்படுகின்ற குளங்கள் மற்றும் நீர்த்தேக்கங்களின் பாதுகாப்பு பிரதேச எல்லையை அடையாளங்கண்டு | அனுமதியற்ற நிர்மாணங்கள் மற்றும் விவசாய நடவடிக்கைகள் சம்பந்தமாக செயற்பட வேண்டிய முறைமை தொடர்பாக நீர்ப்பாசன பணிப்பாளர் நாயகத்தின் DI/AM/LL/Leg.Gen/03/01/2023 ஆம் இலக்க 2024-06-05 ஆந் திகதிய கடிதத்தின் மூலம் தொடர்புபட்ட படிவங்கள் அனுப்பிவைகப்பட்டுள்ளன. | 8/2014 ஆம் இலக்க சுற்றறிக்கையின் 01 மற்றும் 03 ஆம் பந்திகளின் பிரகாரம் பாதுகாக்கப்பட்ட பிரதேசங்கள் அடையாளங்காணப்படுதல் வேண்டும். அது தொடர்பான நாளதுவரையாக்கிய தகவல் முறைமை பேணப்படுதல் |

| | | | |
|---|---|---|---|
| | அதன் பரப்பளவு தொடர்பான விபரங்கள் பேணப்பட வேண்டிய போதிலும் சில பிராந்திய நீரப்பாசன பொறியியலாளர் அலுவலகங்களுக்குரிய குளங்கள்/ நீர்த்தேக்கங்களின் பரப்பளவு சம்பந்தமான தகவல்கள் பேணப்பட்டிருக்கவில்லை | | வேண்டும். |
| (இ) | திணைக்களத்தின் பாசன முறைமை, ஊழியர்கள், உத்தியோகபூர்வ இல்லங்கள், சுற்றுலா விடுதிகள், அலுவலக கட்டிடங்கள், வாகனங்கள், இயந்திரங்கள் ஆகிய துறைகளின் செயற்பாட்டு கட்டுப்பாடுகள், நிருவாகங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்கள் எடுப்பதற்காக தேவையான கணனிமயப்படுத்தப்பட்ட தகவல் முறைமை (Enterprise resource progrmming system) பேணப்பட்டிருக்கவில்லை. | வெளிக்கள உத்தியோகத்தர்களால் அடையாளங்காணப்படுகின்ற அனுமதியற்ற நிர்மாணங்கள் மற்றும் பிடித்துவைத்தல்கள் தொடர்பான விபரம் மற்றும் எடுக்கப்படுகின்ற நடவடிக்கைகள் தொடர்பாக தலைமை அலுவலகத்திற்கு தெரியப்படுத்தப்படுகின்ற சந்தர்ப்பங்களின் போது அத்தகவல்கள் மேலதிக செலவு செய்யப்படாது Google Sheet இனை அடிப்படையாகக் கொண்டு தயாரிக்கப்பட்ட தரவு முறைமையாக காணிகள் மற்றும் சட்டப் பிரிவினால் பேணப்படுகின்றது. கணக்காய்வு ஐய வினாக்களின் மூலம் பிரேரிக்கப்பட்டுள்ளவாறு கணனிமயப்படுத்தப்பட்ட தகவல் முறைமையை (Enterprise resource programming system) தயாரிக்கையில் மேற்கூறிய தகவல்களை பொருத்தமான வகையில் அதில் உள்ளடக்கும் இயலுமை காணப்பட்டது. | திணைக்களத்தின் பல்வேறு துறைகளின் செயற்பாடுகளை நிருவகிப்பதற்காக முகாமைத்துவ தகவல் முறைமையை பேணுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஈ) | கல்கமுவ நீர்ப்பாசன பயிற்சி நிறுவனத்தினால் வழங்கப்பட்ட நீர்ப்பாசன பொறியியல் டிப்ளோமாவிற்கு NVQ 6 மட்டத்தினை அங்கீகரித்துக் கொள்வதற்கு இன்றுவரை நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | தற்பொழுது கல்கமுவ நீர்ப்பாசன பயிற்சி நிறுவனத்திற்கு NVQ 6 மட்டத்தினை பெற்றுக்கொள்வதற்கான அனைத்து நடவடிக்கைகளும் ஈடுபடுத்தப்பட்டிருந்தும் அந்த நிறுவனத்தினுள் இன்றுவரை பயிலுனர்கள் குழு இல்லாததன் காரணமாக NVQ 6 | பொறியியல் டிப்ளோமாவிற்காக NVQ 06 மட்டத்தினை அங்கீகரித்துக்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | மட்டத்தினைப் பெற்றுக்கொள்ளுதல் தாமதமடைந்துள்ளது. அரசாங்கத்தின் பதவிகளுக்காக புதிய ஆட்சேர்ப்புக்களை மேற்கொள்ளுதல் அரசாங்கத்தினால் நிறுத்தப்பட்டுள்ளதனால் கல்கமுவ நீர்ப்பாசன பயிற்சி நிறுவனத்திற்கும் புதிய பயிலுனர் தொகுதியை சேர்த்துக் கொள்வதற்கு முடியாதிருந்தமை இதற்கு காரணமாகும். | |
| (உ) | 2017 யூலை 18 ஆந் திகதிய அமப/17/1456/729/017 ஆம் இலக்க அமைச்சரவை தீர்மானத்தின் மூலம் பயிற்சி நிறுவனத்தில் சர்வதேச மட்டத்தில் பயிற்சி கற்கை நெறிகளையும் செயலமர்வுகளையும் நடாத்துவதற்காக அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்த போதிலும் கடந்த 06 ஆண்டுகளிலும் சர்வதேச மட்டத்தில் பயிற்சி கற்கை நெறி எதுவும் நடாத்தப்பட்டிருக்கவில்லை. | இதில் குறிப்பிட்டவாறு சர்வதேச மட்டத்தில் பயிற்சி கற்கைநெறி எதுவும் நடாத்தப்பட்டிருக்கவில்லை என்பதுடன் இணங்கிக் கொள்ளாததுடன் 2019 ஆம் ஆண்டின் யூன் மாதம் 20 ஆந் திகதியிலிருந்து 29 ஆந் திகதி வரை தாய்லாந்தின் ரஜமங்கல பலகலைக்கழகத்துடன் இணைந்து கமத்தொழிலுக்காக ஸ்மாட் பாசன தொழில்நுட்பம் என்ற பயிற்சி நிகழ்ச்சித்திட்டம் நடாத்தப்பட்டது. | சர்வதேச மட்டத்தில் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களையும் செயலமர்வுகளையும் நடாத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஊ) | மகஓயா பிராந்திய நீர்ப்பாசன பொறியியலளார் அலுவலகத்திற்கு இணைத்துக் கொள்ளப்பட்ட பொறியியல் உதவியாளரின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு சமர்ப்பிக்கப்பட்ட மாதாந்த பொருள் அறிக்கையில் குறிப்பிட்ட பொருட்கள் சம்பந்தமாக பிரிவு உதவியாளர் மற்றும் களஞ்சிய காப்பாளரினால் மேற்கொண்ட வெளிப்படுத்தலின் பிரகாரம் அப்பொருட்கள் பௌதீகரீதியாக இல்லை என உறுதிப்படுத்தப்பட்டது. வருடாந்த களஞ்சிய பொருள் மீளாய்வின் மூலம் திணைக்களத்தின் வேலைத்தளங்களில் பொறியியல் உதவியாளர்களின் பொறுப்பில் ஆண்டின் இறுதித் திகதியில் மிகதியாகக் காணப்பட்ட பொருள் மீதிகளை | பூரணப்படுத்தப்பட்ட நிர்ணயிக்கப்பட்ட படிவம் 2023 ஆம் ஆண்டிற்கான வருடாந்த களஞ்சிய மீளாய்வு அறிக்கையில் உள்ளடக்கப்படாமை சம்பந்தமாக உரிய உத்தியோகத்தர்களிடம் விசாரித்து அனுப்புவதற்கு நடவடிக்கை எடுப்பேன். | இது சம்பந்தமாக முறையான பரீட்சிப்பினை மேற்கொண்டு அதற்கு பொறுப்புக்கூற வேண்டிய பொறியியல் உதவியாளருக்கும் பொருள் மீளாய்வினை மேற்கொண்ட உத்தியோகத்தர்களுக்கும் எதிராக தாபன விதிக் கோவையின் II ஆம் தொகுதியின் XLVIII ஆம் அத்தியாயத்தின் 29 ஆம் பிரிவின் கீழ் ஒழுக்காற்று நடவடிக்கை பின்பற்றப்படுதல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| உறுதிப்படுத்துவது சம்பந்தமாக நீர்ப்பாசன பணிப்பாளர் நாயகத்தினால் 2023 நவம்பர் 24 ஆந் திகதி வழங்கப்பட்ட FIN/ST/VR/2023 ஆம் இலக்க கடிதத்தின் பிரகாரம் வேலைத்தளங்களில் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மிகுதியாகக் காணப்பட்ட பொருட்கள் சம்பந்தமாக பொருள் மீளாய்வுச் சபைத் தலைவரினால் சமர்ப்பிக்கப்பட வேண்டிய அறிக்கையில் இப்பொருட்கள் தொடர்பான தகவல்கள் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. | | |

**4. நல்லாட்சி**

**4.1 செயற்திட்டத்திற்காக நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் சமர்ப்பித்தல்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| நீர்ப்பாசன திணைக்களத்தின் கீழ் அமுல்ப்படுத்தப்படுகின்ற பெரிய அளவிலான மற்றும் மத்திய அளவிலான 16 செயற்திட்டங்களுக்கு ரூபா 80,148 மில்லியன் தொகையும் ஏனைய 03 செயற்திட்டங்களுக்கு ரூபா 75,330 மில்லியன் தொகையும் மதிப்பீடு செய்யப்பட்டிருந்தது. இச்செயற்திட்டங்களுக்காக 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு முறையே ரூபா 64,369 மில்லியன் மற்றும் ரூபா 1,817 மில்லின் செலவு செய்யப்பட்டிருந்தது. அவற்றிற்கு மத்தியில் 17 செயற்திட்டங்களுக்காக கணக்காளர்கள்/ நிதி உத்தியோகத்தர்கள் நியமிக்கப்பட்டிருந்த போதிலும் மேற்கூறிய செயற்திட்டங்களுக்காக நிதிக்கூற்றுக்கள் தயாரித்து சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | பதில் வழங்கப்படவில்லை. | திணைக்களத்தின் கீழ் அமுல்ப்படுத்தப்படுகின்ற அனைத்து பெரிய அளவிலான மற்றும் மத்திய அளவிலான செயற்திட்டங்கள் சம்பந்தமாக வருடாந்த நிதிக் கூற்றுக்களை தயாரித்து சமர்ப்பித்தல் வேண்டும். |

**5. மனிதவளங்கள் முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| (அ) நீர்ப்பாசனத் திணைக்களத்தின் சிரேஷ்ட மட்டத்திலுள்ள 35 பதவிகளுக்காக 437 உத்தியோகத்தர்கன் அங்கீகரிக்கப்பட்டிருந்தும் மீளாய்டவாண்டின் இறுதியில் | இதில் காட்டப்பட்டுள்ள சிரேஷ்ட மட்டத்தில் எந்த உத்தியோகத்தரும் சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருக்காத 17 பதவிகளுக்கு மத்தியில் 2024 பெப்ரவரி 19 ஆந் | பதவித் தேவைப்பாடு தொடர்பாக மீளாய்வு செய்து அப்பதவிகளை குறைத்தல் அல்லது உத்தியோகத்தர்களை சேர்த்துக் |

| | | | |
|---|---|---|---|
| | அவற்றில் 17 பதவிகளுக்கு எந்த உத்தியோகத்தரும் சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருக்கவில்லை | திகதியளவில் இலங்கை விஞ்ஞான சேவையின் 04 பதவிகளுக்காக ஆட்சேர்ப்புக்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன் ஏனைய பதவிகள் அரசாங்க கொள்கைக்கு இணங்க இன்றுவரை ஆட்சேர்ப்புக்கள் இடம்பெற்றிருக்காததனால் இன்னும் வெற்றிடமாகக் காணப்பட்டது. | கொள்ளுதல் வேண்டும். |
| (ஆ) | மூன்றாம் மட்டத்திலுள்ள 17 பதவிகளுக்காக 155 உத்தியோகத்தர்கள் அங்கீகரிக்கப்பட்டிருந்தும் மீளாய்வாண்டின் இறுதியில் அவற்றில் 11 பதவிகளக்காக எந்த உத்தியோகத்தரும் சேர்த்துக்கொள்ளப்பட்டிருக்காததுடன் மூன்றாம் மட்டத்திலுள்ள 06 பதவிகளுக்காக 28 உத்தியோகத்தர்கள் மாத்திரம் சேர்த்துக்கொள்ளப்பட்டிருந்தனர் | தாபன அபிவிருத்தி உத்தியோகத்தர் பதவியில் 2023-12-31 ஆந் திகதி வரை ஆறு உத்தியோகத்தர்கள் சேவையாற்றியதுடன் பிரிவு உதவியாளர் பதவிகளுக்கு ஆட்சேர்பபதற்காக தற்பொழுது நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. | உரிய பதவி தொடர்பான மீளாய்வினை மேற்கொண்டு உத்தியோகத்தர்களை சேர்த்துக்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) | திணைக்களத்தின் இரண்டாம் மட்டத்திலுள்ள பதவியான அபிவிருத்தி உத்தியோகத்தர் பதவிக்காக 266 உத்தியோகத்தர்கள் மாத்திரம் அங்கீகரிக்கப்பட்டிருந்தும் மீளாய்வாண்டின் இறுதியில் 384 உத்தியோகத்தர்கள் சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர். அதற்கிணங்க 118 உத்தியோகத்தர்களின் மிகைகள் அவதானிக்கப்பட்டது. | மிகுதி உத்தியோகத்தர்களுக்காகவும் அங்கீகாரத்தினைப் பெற்றுக்கொள்வதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. | அங்கீகரித்த ஆளணியினரை மிகைத்து ஊழியர்கள் இணைத்துக் கொள்ளப்படாதிருத்தல் வேண்டும். |
| (ஈ) | திணைக்களத்தின் சேவையில் ஈடுபட்டதிலிருந்து வேலையில் இடைநிறுத்திவைப்பதற்கு உட்படுதல், சேவையை கைவிட்டுச் செல்லுதல், மரணமடைதல் அல்லது ஓய்வுபெறுதலின் அடிப்படையில் திணைக்களத்தின் சேவையை முடிவுறுத்திய 19 உத்தியோகத்தர்களின் தனிப்பட்ட கோவைகள் காணாமல் போனதன் அடிப்படையில் அந்த உத்தியோகத்தர்களுக்கு மற்றும் அந்த உத்தியோகத்தர்களின் துணைவிகளுக்கு ஓய்வூதிய | இது சம்பந்தமாக ஒரு விசேட குழு நியமிக்கப்பட்டதுடன் குழுவின் தீர்மானத்தின் பிரகாரம் மேலதிக நடவடிக்கைகள் எடுப்பதற்கு முயற்சி செய்யப்படும். மேலும் எதிர்காலத்தில் இவ்வாறானவைகள் இடம்பெறாமல் பார்த்துக்கொள்வதற்கு உரிய உத்தியோகத்தர்களுக்கு தெரியப்படுத்தப்பட்டுள்ளது. | காணாமல் போன கோவைகளுக்கு பொறுப்பான பொறுப்புக்கூற வேண்டிய உத்தியோகத்தர்களை தேடிப்பார்த்து அவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | பணிக்கொடை, விதவைகள் மற்றும் அனாதைகள் ஓய்வூதியத்தினைப் பெற்றுக்கொள்வதற்கு மற்றும் 14/2019 ஆம் இலக்க அரசாங்க நிருவாக சுற்றறிக்கையின் பிரகாரம் சம்பள முரண்பாட்டின் அடிப்படையில் ஓய்வூதியத்தினை திருத்தம் செய்தல் மேற்கொள்வதற்கு முடியாதிருந்தது. | | |
| (உ) | மீளாய்வாண்டில் நீர்ப்பாசன திணைக்களத்தில் சேவையில் ஈடுபட்டிருந்த 72 உத்தியோகத்தர்கள் ஓய்வுபெற்றிருந்ததுடன் ஓய்வூதியத்தினை தயாரிப்பதற்காக தேவையான ஆவணங்களின் சரியான தகவல்களைச் சமர்ப்பிக்காமை மற்றும் உத்தியோகபூர்வ இல்லங்களை மீண்டும் அரசாங்கத்திற்கு ஒப்படைக்காமை முதலிய விடயங்களின் காரணமாக 23 உத்தியோகத்தர்கள் ஓய்வூதியத்தினை பெற்றுக்கொள்ள முடியாதிருந்தது. | தனிப்பட்ட கோவைகளை நாளதுவரையாக்குதல் மேற்கொள்ளப்படுவதுடன் 23 உத்தியோகத்தர்களுக்கு மாத்திரம் ஓய்வூதியத்தினை செலுத்துவதற்கு முடியாதுள்ளது. | ஓய்வுபெற்ற உத்தியோகத்தர்களின் தகவல்களை சமர்ப்பிக்காமை மற்றும் உத்தியோகபூர்வ இல்லங்களை மீண்டும் அரசாங்கத்திற்கு ஒப்படைக்காமை சம்பந்தமாக முறையான பரீட்சிப்பு மேற்கொள்ளப்படுதல் வேண்டும். |
| (ஊ) | திணைக்களத்தில் சேவையில் ஈடுபட்டு ஓய்வுபெற்றிருந்த 04 உத்தியோகத்தர்களினால் 2023 திசெம்பர் 31 அந் திகதி வரை அவர்கள் வசித்திருந்த திணைக்களத்திற்குச் சொந்தமான உத்தியோகபூர்வ இல்லங்களை மீள ஒப்படைத்திருக்கவில்லை. | இதற்காக தேவையான நடவடிக்கையை துரிதமாக நிறைவேற்றுமாறு உரிய பிரிவிற்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது. | உத்தியோகபூர்வ இல்லங்களை மீள ஒப்படைத்திருக்காத உத்தியோகத்தர்கள் சம்பந்தமாக சட்ட நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |